உ

கட்டைவேலி, கரவெட்டி கிழக்கு

யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்

# பொன்விழா மலர்

மலர் ஆசிரியர் : எஸ். சிவலிங்கராஜா

1943 — 1993

இருள் அகற்றி ஒளியேற்றி

வீறுநடை போட வாழ்த்துகின்றோம்!

# அம்பிகா வர்த்தக நிலையம்

யாழ். வீதி, — நெல்லியடி.

உ

## கட்டைவேலி, கரவெட்டி கிழக்கு

## யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்

# பொன்விழா மலர்

**1943** **1993**

" கற்கக் கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக "

**வெளியீடு :**

*யா / கட்டைவேலி - கரவெட்டி கிழக்கு*
*யார்க்கரு விநாயகர் வித்தியாலயப் பொன்விழாக் குழு*
*10-4-1993*

**மலர்க்குழு :**

*எஸ். சிவலிங்கராஜா, எம். ஏ. (மலர் ஆசிரியர்)*
*வ. கணபதிப்பிள்ளை (அதிபர்)*
*ந. தங்கத்துரை*
*வ. பாலசிங்கம்*
*சி. வல்லிபுரம்*
*திருமதி. நா. சீவரத்தினம்*

**அச்சுப் பதிவு :**

*ஈகிள் பிறின்டிங் வேக்ஸ் — யாழ்ப்பாணம்.*

# மலராசிரியர் உரை

கட்டைவேலி — கரவெட்டி கிழக்கு, யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் இன்று தனது பொன்விழாவைப் பொலிவாகக் கொண்டாடுகின்றது.

பொன்விழாவும், பொன்விழா நிகழ்ச்சிகளும், காற்றோடு காற்றாகக் கலந்து விடாமல், அவை ஆவணமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்று அதிபரும், ஆசிரியரும், பெற்றோரும், பாடசாலை அபிவிருத்திக் குழுவினரும் விரும்பினர்.

அவ்விருப்பத்தின் வெளிப்பாடே இப்பொன்விழா மலர். இது ஒரு ஆய்வடங்கல் அல்ல. ஆவணக்கையேடுதான், மணிவிழா, பவளவிழா நூற்றாண்டு விழாக்களின் போது இக்கையேடு ஒரு கைவிளக்காகவேனும் ஒளிகாட்டும்.

என் பிஞ்சு விரல்கள் இவ்வித்தியாலயத்தின் கொட்டிலிலே பரப்பப்பட்ட வெண்குரு மணலிலேதான் முதன் முறையாக ஆனா என்ற (அ) எழுத்தை எழுதியது என்று எண்ணும் போது இதயம் புல்லரிக்கின்றது.

நான் பிறந்த பொன்மண்ணில் வேரோடிய கல்வி விருட்சமொன்றின் பொன் விழாவைக் காண்பதில் மனம் மகிழ்கின்றது. எனது கிராமத்தின் மண், மரம், செடி, கொடி, குடிசை அனைத்திலும் ஒருவித கலைப் பொலிவு தோன்றும். பாமரமக்களிடமும் அற்புதமான சிந்தனைகளும், கற்பனைகளும் வெளிப்படும். கற்றல் இல்லாவிடினும் கேட்டலால் அறிவு பெற்றவர் அக்காலத்திலே எமது பகுதியிலே வாழ்ந்தனர்.

கற்றலும் கேட்டலும் மாத்திரமன்றிக் கல்விச் சூழலிலே வளர்ந்த உயர் திரு சி. வல்லிபுரம் அவர்கள் புலோலி வேலாயுதம் பாடசாலையில் ஆங்கிலம் கற்றவர். எமது பகுதியில் அக்காலப் பகுதியில் வாழ்ந்த ஆங்கிலம் அறிந்தவர்களில் உயர் திரு. சி. வல்லிபுரம் அவர்கள் விதந்து குறிப்பிடக் கூடியவர். இன்று அவரின் தெய்வீகப் பணியான கல்விப்பணி போற்றிப் புகழ்ந்து கொண்டாடப் படுகின்றது.

எமது பகுதியின் வணக்கத்திற்குரிய மாமனிதர் அவர்.

பொன்விழாப் பதிவேடாக வெளிவரும் இம்மலருக்கு எல்லாவகையிலும் உதவிய அன்புள்ளங்கள் அனைத்தையும் நன்றியுடன் பாராட்டுகிறோம்.

எமக்குத் தோன்றாத் துணையாக என்றும் உதவும் யார்க்கரு விநாயகப் பெருமானின் பொன்னடிகளைப் போற்றிப் பிரார்த்திப்போமாக.

எஸ். சிவலிங்கராஜா, எம். ஏ.
முதுநிலை விரிவுரையாளர்

தமிழ்த் துறை— யாழ்— பல்கலைக்கழகம்.

‘புகழ்வோம் கணபதிநின் பொற்கழலை நாளும்
திகழ்வோம் பெருங்கீர்த்தி சேர்ந்தே — இகழ்வோமே
புல்லரக்கப் பாதகரின் பெய்யெல்லாம்; ஈங்கிதுகாண்
வல்லபைக்கோன் தந்த வரம்’

‘துறந்தார் திறமை பெரிது
அதனினும் பெரிதாகுமிங்குக்
குறைந்தாரைக் காத்து எளியார்க்கு
உணவீந்து குலமகளும்
அறந்தாங்கு மக்களும் நீடூழி
வாழ்கென அண்டமெல்லாம்
சிறந்தாளும் நாதனைப் போற்றிடுந்
தொண்டர் செயுந்தவமே,

— சுப்பிரமணிய பாரதியார்

கரவெட்டி கிழக்கு,

# யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தின்

நிறுவுனர்.



**அமரர், சிதம்பரநாதர் வல்லிபுரம் அவர்கள்**

# ஆசியுரை

கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் தன் வளர்ச்சிப் படியில் 50 ஆண்டுகளைத் தாண்டி எழுச்சி பெறுவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். 1939ம் ஆண்டு வித்திட்ட வித்தியாலயம் திருவாளர்கள் வல்லிபுரம், வேலுப்பிள்ளை, கந்தையா ஆகிய தர்ம வள்ளல்களின் அரவணைப்பில் வளர்ச்சியுற்று இன்றைய எழில்கோலங் கண்டமை கல்விப்பணியில் மக்கள் காட்டும் ஆர்வத்தினைக் குத்திக்காட்டுகிறது. வித்து வானோங்க உழைத்த திரு. கந்தசாமியால் வித்தியாலயம் தரமுயர்ந்தது. கல்விப்பெறுபேற்றில் பொற்காலமாக 1953ம் ஆண்டை ஈண்டு குறிப்பிடலாம். 1993ம் ஆண்டு இதன் பொன்விழா ஆண்டாக மலர்வதுகண்டு கல்விப்புலப்பணியாளர்கள் பெருமை கொள்ளாதிருக்க முடியாது. அடையா நெடுங்கதவினராய் மடைதிறந்த வெள்ளம்போல் வள்ளன்மையோடு வாழும் சான்றோரால் எம்மண்ணின் வளங்காணும் கல்விச்சாலைகள் காலத்தேவைக்கு ஏற்ற பங்களிப்புச் செய்வனவேயாம். வீடுதோறும் கலையின் விளக்கம், வீதிதோறும் பலபல பள்ளி என்று அவாவிய அமர கவியின் அடிநாதக் கோரிக்கை நிதர்சனமாவது கண்டு நெஞ்சம் தழைக்கிறது. வான் புகழ் வள்ளுவன் சொன்ன,

" தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்தூறும் அறிவு ,,

என்ற மந்திரவாக்கு மக்கள் உள்ளத்தைக் கிளர்ந்தெழச் செய்து மாக்களால் மண் பாரப்படாமல் மகிமையுறு சான்றோரால் மலிந்து புகழ் மணக்க கல்விச்சேவை கருதும் சேவையெனக்கொள்ளும் காலமே இன்றைய காலமென்பதை நாம் உணர்வோமாக. அவ்வண்ணம் உயர்ச்சி பெற உழைப்போமாக. உங்கள் தெய்வீகப் பணி தேசொடு மிளிர்க - காசினி போற்றும் கல்விப்பணி கவினுற நிறைக.

**1993-03-15**

இரா. சுந்தரலிங்கம்
வடமாநில கல்விப் பணிப்பாளர்

# ஆசியுரை

யாக்கரு விநாயகர் வித்தியாலயம் 1939ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுப் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று முன்னணியில் நிற்கக் கூடிய வகையிற் பரிணமித்திருக்கிறது.

இந்நிலையில் இப்பாடசாலையிலுள்ள பெற்றோர்களும், பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும், ஆசிரியர்களும், மாணவர்களும், அதிபரும் ஒருமித்துப் பொன்விழாக் கொண்டாடுவதைப் பாராட்டி வாழ்த்துரை வழங்குவதிற் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

இப்பகுதி மக்கள் சைவப்பண்புடனும் தமிழ்க் கலாசாரத்துடனும் கல்வி பெறவேண்டுமென்ற நோக்கோடும் இப்பாடசாலையை ஆரம்பித்துள்ளார்கள். அவர்களின் நோக்கு வீண்போகாது இக்கிராமத்து மக்கள் இப்பாடசாலையிலேயே கல்வியை ஆரம்பித்து மேன்மையான நிலையில் உள்ளனர்.

ஆரம்ப காலம் தொடக்கம் இப்பாடசாலை கல்வியில் மட்டுமல்லாது கலை, விளையாட்டு போன்ற எல்லாத் துறைகளிலும் தன்னுடைய பங்கை ஆற்றியுள்ளது.

மேலும் இப்பாடசாலை வளர்ச்சியுற்று இக்கிராம மாணவர்கள் உயர்ச்சி பெறவும் வாழ்த்தி என் உள்ளங்கனிந்த ஆசியைத் தெரிவிக்கிறேன்.

**சங்கரப்பிள்ளை செல்லத்துரை**
B. Sc (Special Chemistry) (Sri Lanka)
Dip. in Education (Sri Lanka)
S. L. E. A. S. II
பிரதிக் கல்விப் பணிப்பாளரும்,
கோட்டக் கல்வி அதிகாரியும்
வடமராட்சி கல்விக் கோட்டம்,
பருத்தித்துறை.

கோட்டக் கல்வி அலுவலகம்,
பருத்தித்துறை.
1993-02-05

# ஆசியுரை

கட்டைவேலி / யார்க்கரு விநாயக வித்தியாலயம் தனது பொன்விழா நிறைவைக் கொண்டாடுவதை யிட்டுப் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். ஆண்டு 7 மட்டும் கல்வி போதிக்கப்பட்ட இப்பாட சாலையில் இன்று ஆண்டு 11 வரையில் கல்வி கற்பிக்கப் படுவது காலவளர்ச்சியுடன் திறமையான நிர்வாகத்தை யும் ஆசிரியர் குழாத்தையும் இந்நிலையம் தன்னகத்தே பெற்றிருந்தமையைக் குறிப்பால் உணர்த்தி நிற்கின்றது. இப்பெருமைக்கு அணிசேர்த்தவர்களில் முதன்மையான வர் முன்னாள் அதிபர் வித்துவான் சி. இ. கந்தசாமி அவர்கள் ஆவர். பாடசாலையின் பழைய மாணவரான இந்நாள் அதிபர் திரு வ. கணபதிப்பிள்ளை அவர்களும் அன்னாரின் பெருமைக்குப் பெருமை சேர்ப்பார் என நம்புகின்றேன்.

விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற என் ஆசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செ. ஸ்ரீநிவாஸன்
B. A. (Sri Lanka)
Diploma in Marketing (UN)
SLAS.

பிரதேச செயலகம்,
கரவெட்டி.

# ஆசியுரை

பொன் விழாக் கொண்டாடும் யா / யார்க்கரு விநாயகர் வித்தியால யத்தின், பொன்விழா மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கரவெட்டி கிழக்கில் வாழும் மக்களுக்குக் கல்வி கற்பதற்கு ஒரு பாட சாலை இல்லாத நிலையை உணர்ந்த பெரியார் கிளாக்கர் திரு. சி. வல்லிபுரம் அவர்கள் பெருமுயற்சி செய்து யா / யார்க்கரு விநாயகர் வித்தியாசாலையை 1939 ம் ஆண்டு ஆரம்பித்தார். ஆரம்ப காலத்தில் கற்பித்த ஆசிரியர்கள் ஊதியம் இன்றிக் கடமையாற்றியமை அப்பெரியாரின் முயற்சிக்குப் பெரும் துணையாக அமைந்தது.

1943 ம் ஆண்டு அரசினர் உதவி பெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டு வளர்ச்சிப் பாதையில் காலடி எடுத்து வைத்தது. 1948 ஆம் ஆண்டு அதிபராகக் கடமையாற்றிய வித்துவான் சி. இ கந்தசாமி அவர்களின் பெருமுயற்சியால் S. S. C. வரை தரமுயர்த்தப்பட்டமை கரவெட்டி வாழ் மக்களின் கல்வித் தரத்தைப் உயர்த்தப் பெரும் உதவியாக இருந்தது.

இப்பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில், விளையாட்டு மைதானம் இல்லாத குறையை நீக்க இப்பாடசாலையின் பெற்றார்களும், தற்போதைய அதிபரும் பலவழிகளிலும் முயன்று விளையாட்டு மைதானத்திற்கு நிலம் பெற்றுக்கொடுத்தமை, பாடசாலை வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்லும் என்னும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

50 ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இக்கல்விக் கூடம் தொடர்ந்தும், பல துறைகளிலும் வளர்ச்சி அடைந்து பல சிறப்புக்களையும் பெற எனது நல்லாசிகள்.

சி. சிற்றம்பலம்
கொத்தணி அதிபர்

1993-03-12

# சைவத் தமிழ்ப் பண்பாட்டின் உருவாக யார்க்கரு வித்தியாலயம் — வளரும் கற்பகதரு

'இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்'

எழுமைக்கும் ஏமாப்பு வழங்கும் கல்வி அறிவின் பெருமையை அழுத்தி அழுத்திக் கூறிய பாரதி, பொறுமை இழந்த நிலையில், 'தேடு கல்வியிலாத தொரு ஊரைத் தீயினுக் கிரையாக மடுத்தல்' பற்றி ஆவேசமாகப் பேசியிருக்கின்றார்.

மூத்த தமிழ்க்குடி அரசனுக்கு மேலாக அறிஞனுக்கு அடங்கி நடந்த பாரம்பரிய முள்ளது. வடமராட்சிப் பாரம்பரியமோவெனில் அறிவோடு இரண்டறக் கலந்தது இறை யொளியும், இயற்கையின் ஏகாந்த எழிலும், ஊருணி நன்னீருற்றும் சங்கமிக்குமொரு இங்கிதமான களனியின் மத்தியில் ஐம்பதாண்டுகளாகப் பூத்துக்குலுங்குமொரு வாடாமலர் யாக்கரு வித்தியாலயம். தாபக, ஆசிரியர்கள், மாணவர்களின் பரந்து விரிந்த சிறப்பி னால் காணாதவருக்கும் கூட கௌரவமளிக்கத் தூண்டுமொரு கலைக் கோயில் அது.

'தக்கார்தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்' என்பதுவள்ளுவம். நூலைபபோலச் சேலையென்பது ஒருபுறம், தாயைச்சந்தையிலே கண்டால் மகளை வீட்டிற் போய்ப்பார்க்க வேண்டியதேயில்லையென்பது மறுபுறம். வித்தியாலயத்தைப் பார்த்தால் மாணவர்கள் எப்படியிருப்பர் என்பதை ஊகித்துக்கொள்ளலாம. தாபகர் வல்லிபுரம் அவர்களின் மைந்தன் சிவராஜசிங்கம், வித்துவான்கள் சந்நசாமி, திரு. கண பதிப்பிள்ளை, மாணவர்கள் நமசிவாயம், சிவக்கொழுந்து, நண்பன் சிவலிங்கராஜா என்றின்னோரன்ன வித்தியாலயத்துடன் பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டவர்களான இவர்களை மாத்திரம் வைத்துக்கொண்டு (ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் பார்க்க உதவுவதாக.) நினைத்துப்பார்க்கையில் வித்தியாலயம் தக்கதோருருவமென்பதில் தர்க்கிப்பதற் கொன்றுமில்லை. சைவத்தமிழோடு, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளிலும் இவ்வித்தியாலயம் எடுத்துக்காட்டாக வளர ஆவன செய்தல் வேண்டும்.

மேலும் சித்திரங்கள் கீறச் சுவர்வேண்டும். பிள்ளைகளின் உடல் நலத்தை வளர்த்தல் உளநலப்பாதுகாப்புக்குக்கு இன்றியமையாதது. பழையமாணவர்களும், நலன்விரும்பிகளும், பெற்றோரும் முயன்று பெற்ற விளையாட்டுத்திடல் வெள்ளம் ஓடிச்செல்லக் கூடியதாக உயரவேண்டும். இதற்கு உதவ காவெட்டிப் பிரதேச திட்டமிடல் பணிமனை முன்முயற்சி எடுக்க வேண்டுமென்பது எனது விருப்பம். தானே முன்னேற விரும்பும் ஒரு சமூகத்திற்கு கைகொடுத்துதவுவது அனைவரதும் தார்மீகப் பொறுப்பாகும். உடுக்கை இழந்தவன் கைபோல, இடுக்கண் களைய உதவவேண்டும்.

வித்தியாலயம் சமூகத்திற்கு நல்ல சொல்வதாக, செய்வதாக தொடர்ந்தும் வளர எல்லாம்வல்ல யார்க்கரு விநாயகப் பெருமானை வேண்டுகின்றேன்.

ஸ்ரீ செவ்வந்திநாதக்குருக்கள் சுவாநாதன்
(யாழ் மாவட்ட திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்)

# ஆசியுரை

கல்வி வளர்ச்சியில் அரை நூற்றாண்டு சேவைசெய்து வீறுநடை போட்டுள்ள யார்க்கரு விநாயக வித்தியாலயம் பொன் விழாக் காணும் பொன்னான நன்னாளில் பொன்விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்கு வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

சைவப்பிள்ளைகள் சைவச்சூழலில் சைவாசாரத்துடன் கல்வி பயில வேண்டுமென்னும் கொள்கையில் தீவிரம் மிக்க ஸ்தாபகர் வல்லிபுரம் அவர்களினதும் முயற்சியால் அவருடைய சொந்தக் காணியில் 1940ம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டு கிடுகினால் வேயப்பட்டு மண்சுவர் வைக் கப்பட்ட தற்காலிக கொட்டிலில் இவ்வித்தியாலயம் இயங்கியது.

நான் எங்கள் ஆசிரிய கலாசாலை அதிபர் கலாநிதி கு. சிவப்பிர காசம் அவர்களின் பணிப்பின்படி 1940ம் ஆண்டு பொறுப்பேற்று நடாத் தினேன். பின் வேறு இரு ஆசிரியர்களும் வந்தனர். அக்காலத்தில் இவ் வித்தியாலயத்தை வளர்ப்பதில் என்னோடு ஒத்துழைத்து உறுதுணையாய் நின்றவர்களில் திருவாளர் ஏ. வேலுப்பிள்ளை, க. கந்தையா, மாலை யப்பா என்பவர்கள் குறிப்பிடக்கூடியவர்கள்.

இப் பெரியார்களுக்கும் ஸ்தாபகருக்கும் இவ்வூரவர்கள் மறக்கமுடி யாத நன்றிக் கடனுடையர்.

இவ்வித்தியாலயம் உதவி நன்கொடை பெறும் வித்தியாலயமாய் பதிவதற்காக சைவ வித்தியா விருத்திச் சங்கம் பொறுப்பேற்கும் வரை 1940 1942 வரையுள்ள காலத்தில் எதுவித வேதனமுமின்றிப் படிப்பித்தது மன்றி பிள்ளைகளை வீடுவீடாகச் சென்று கூட்டிவந்து படிப்பித்ததை எண்ணும்போது சிலருக்கு சிரிப்புக்கு இடமாய் இருந்திருக்கலாம்.

எடுத்த விடயத்தில் சோராது நின்று முயற்சித்ததனால் இன்று இவ்வித்தியாலயம் வடமராட்சியில் உள்ள சிறந்த வித்தியாலயங்களில் ஒன்றாய் விளங்குவதையும் 18 ஆசிரியர்களுக்கு இடமளிக்கக் கூடியதாயும் இருப்பதைக் கண்டு இப்பொழுது என் மனம் சிலிர்க்கிறது. இங்கு ஏறக் குறைய 15 வருடங்கள் கல்வி கற்பித்தேன். இவ்வூரவர்களின் மூன்று தலைமுறையினரைக் கற்பித்தேன். இங்குள்ளோர் அனைவரும் எனது மாணவர்களே எனப் பெருமைப்படுகிறேன். நற்பிரசைகளையும் கல்வி மான்களையும் அரச உயர் பதவி வகிப்போரையும் உருவாக்கிய பெருமைக் குரியது. இன்றைய பழைய மாணவர் சங்கம் எடுக்கும் முயற்சிகளை நோக்குமிடத்து இவ்வித்தியாலயம் இன்னும் சிறந்து விளங்கி பவளவிழா நூற்றாண்டு விழாக்களையும் கண்டு எங்கும் தன் புகழைப் பரப்பவேண்டு மென இறைவனை இறைஞ்சுகிறேன்.

**மூ. பொன்னையா**
**(வித்தியாலய முன்னாள் அதிபர்)**

# ஆசிச்செய்தி

கட்டைவேலி / யார்க்கரு விநாயகர் வித்தியாசாலை கடந்த ஐம்பது ஆண்டுகளாகக் கல்விப் பணி ஆற்றி வந்து, இவ்வாண்டில் தனது பொன் விழாவைக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

ஆலயத்திற்குக் கோபுரம் எப்படி அழகு செய்கிறதோ அப்படியே ஒரு கிராமத்திற்குப் பாடசாலை முககியமாக அமைந்து அழகு செய்கின்ற தெனலாம்.

இந்நேரம், இப்பாடசாலையின் ஸ்தாபகர் உயர்திரு. வல்லிபுரம் அவர்களை நாம் நன்றியோடு நினைவுகூருகின்றோம். அன்னாரின் அளப் பரிய பணி பெரிதும் போற்றத்தக்கதாகும். மாணவர்களின் நலன் கருதி இக் கல்வி நிறுவனத்தை ஆரம்பித்து வைத்தவரின் நல் நோக்கம் இன்று ஒளிமயமாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இக் கல்வி நிலையம் பக்கத் திலுள்ள கஜமுகனின் கண்பார்வை பட்டு மேன் மேலும் ஓங்கி வளர்ந்து வருகின்றது.

**"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு**
**மாடல்லமற்றை யவை"**

என்னும் வள்ளுவப் பெருந்தகையாரின் வாய்மொழிக்கிணங்க இங்கு கற்பித்த ஆசிரிய, ஆசிரியைகளும், பெற்றோரும் கல்வியைப் போற்றி வந்தனர் என்பது கண்கூடு. மேலும் அவர்கள்

**" எழுத்தறிவித்தவன் இறைவனாகும் "**
**" எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் "**
**" இளமையிற் கல்வி சிலையிலெழுத்து "**

என்னும் முதுமொழிககளைப் பொன்னேபோற் போற்றி அருந்தொண் டாற்றியமையும் பெரிதும் பாராட்டத் தக்கதாகும்.

இப் பாடசாலையின் வரலாற்றில் அமரர் வித்வான் S. R. கந்தசாமி அதிபர் அவர்கள் ஆற்றிய அரும்பணிகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கதாகும்.

ஆசிரியர் திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆற்றிய அரும்பணிக ளையும் நன்றியுணர்ச்சியோடு நினைவு கூருகின்றோம். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு இவர்கள் இட்ட அத்திவாரம் வரப்பிரசாதமாக அமைந்து பெருந்துணை புரிந்துள்ளது.

நான் இப்பாடசாலையின் பழைய மாணவன் என்ற முறையில் இவர்கள் கல்வி வளர்ச்சியில் கண்ணும்கருத்துமாக இருந்து வந்தார்கள்

என்பதை ஈண்டு, விதந்து குறிப்பிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு மக்களின் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் மிகமிக அவசியம் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

எங்கள் பாடசாலை வளர்பிறை போல வளர்ந்து பவளவிழா, நூற்றாண்டுவிழா காண எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் புரிவாராக.

**சி. கிருஷ்ணபிள்ளை**
பிரதம லிகிதர்
இ. மி ச. யாழ் அலுவலகம்,
சுன்னாகம்.

---

உ

சிவமயம்

குருதேவர் துணை

# ஆசிச்செய்தி

கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலாயம் பொன்விழாக் காணும் பேறுபெற்றமைக்கு விநாயகரே முதலில் மூலகாரணமாக உள்ளார். அதனையடுத்து இவ்வித்தியாலயத்துடன் இணைந்து செயல்பட்ட பல பெரியார்களை நாம் நினைவு கூர்வது சாலப் பொருத்தமாகும். இவ் வித்தியாலயம் பல இலட்சிய புருஷர்களை வருங்காலத்தில் உருவாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ''தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும், அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும். மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்.''

இக் கல்விக்கூடம் அரிய பணி புரிய எல்லாம் வல்ல இறைவனிடம் மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

இறை பணியில் - அன்புள்ள
**சுவாமி சித்ரூபானந்தா**

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை,
1 - 4 - 93

# பாடசாலை அபிவிருத்தி சபை,
# பழைய மாணவர் சங்கத்தின் எண்ணத்தில் எழுந்த
# ஆத்ம ராகங்கள்

வடமராட்சி மண்ணிலே, எமது கிராமத்தில் கல்வியின் தேவையை உணர்ந்து, சிந்தனையாற்றலும், மனிதாபிமானமும் உள்ள பெருந்தகை திரு. சிதம்பரநாதர் வல்லிபுரம் அவர்களின் சிந்தனையால் யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் 1939ல் ஆரம்பிக்கப்பட்டு, 1943ம் ஆண்டு நிறைவோடு ஆரம்பமானது.

எமது வித்தியாலயம் வளர்ச்சிப் பாதையில் வெற்றிநடை போட்டு வருவதையிட்டு, உள்ளம் பூரிக்கின்றேன். நான் பாடசாலை அபிவிருத்திச் சபையின் செயலாளராக இருந்தபோதும், 12 - 10 - 92 அன்று, பழைய மாணவர் சங்கம், வித்தியாலயத்தின் மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு ஆரம்பித்ததோடு, செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டேன். மனித வாழ்வில் இரு கைகளும் சேர்ந்து ஒரு வேலையைச் செய்வதுபோல, இரு சங்கங்களும் ஒன்று சேர்ந்து வித்தியாலயத்தின் அபிவிருத்திப் பாதையில் இறங்கியுள்ளது.

50ம் ஆண்டு நிறைவையொட்டி, வித்தியாலய ஸ்தாபகரின் புதல்வர் திரு. வ. சிவராசசிங்கம் அவர்கள் எனக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். இதைத் தொடர்ந்து பழைய மாணவர் சங்கம் பொன் விழாவை திறம்பட நடாத்த வேண்டும் என்று கைகொடுத்தது. பொன் விழாவை "வித்தியாலயத்தின் அபிவிருத்தியின் அலகாகப்" பயன்படுத்தி, வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்துக்கு 17½ பரப்புக் காணியைப் பெற்றுக்கொடுத்ததோடு, இவ்வருட மெய்வல்லுநர் போட்டியைக் கல்லூரியுடன் இரண்டறக் கலந்து நின்று நடாத்தினோம்.

எமது மகிழ்ச்சிக்குரிய இச் சந்தர்ப்பத்தில் வித்தியாலயத்தின் தேவைகளை உணர்ந்து, காணிகளை விலையாக வேண்டி வித்தியாலயத்துக்கு நன்கொடை செய்த பழைய மாணவர்களான திரு. க. நடராசா திரு. ஐயரத்துரை - இரத்தினம் அவர்களுக்கும், திரு. ச. கந்தையா அவர்களுக்கும், பொருளாதார ரீதியில், முன்னடைய வேண்டிய, இக் காலகட்டத்திலும் முழு மனதோடு, தங்களின் காணிகளை அறுதியாகத் தந்துதவிய பெருமுள்ளங் கொண்டவர்களையும் எக்காலமும் நினைவுகூரவேண்டியவர்களாக இருக்கின்றோம். மற்றும் காலத்தால் உதவிய உள்ளங்கள் அனைவர்க்கும் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளேன். வித்தியாலயத்தின் அபிவிருத்தியில் எனக்கு ஒரு வலது கையாக நின்று தொண்டாற்றிய பழைய மாணவர் சங்கப் பொருளாளரான திரு. வல்லிபுரம் பாலசிங்கம் அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் மறக்க முடியாது.

யாழ் மாவட்டத்தில் சிறந்த கல்விப் பெறுபேறுகளையும் வியத்தகு சாதனைகளையும் இவ்வித்தியாலயம் பெறுவதற்கும், இன்னும் விழுமிய ஒழுகலாற்றுக்கு மாணவச் செல்வங்களை ஆற்றுப் படுத்துகின்ற அதிபர் திரு. வ. கணபதிப்பிள்ளை அவர்கள் இவ்வித்தியாலய பழைய மாணவர் என்பதால், அவருடைய ஊர்ப்பற்றுக் கொண்ட விழிப்புணர்வுக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் எமது இதயங்கனிந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நடராசா தங்கத்துரை
(கிராம அலுவலர்)
செயலர்,
பாடசாலை அபிவிருத்திச் சபை,
பழைய மாணவர் சங்கம்.

யார்க்கரு வீதி,
கரவெட்டி கிழக்கு.

# ஆசிச்செய்தி

கரவெட்டி கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் தனது 50 வது ஆண்டு நிறைவை பொன்விழாவாகக் கொண்டாடுவதை அறிந்து பெருமகிழ்வடைகின்றோம்.

" கண்ணுடைய ரென்பர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர் "

எனக் கல்வியின் பெருமையினை வள்ளுவர் அழகாகக் கூறியுள்ளார். இவ்வகையான சிறந்த கல்விச் செல்வத்தை மாணவ சமுதாயத்திற்கு நீண்ட கல்விப் பாரம்பரியத்துடன் வழங்கி வருகின்ற யாக்கரு விநாயகர் வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியப் பெருந்தகைகள் மற்றும் இப் பாடசாலை உருவாக்கி உயர்நிலையில் இருக்கின்ற கல்விமான்களையும் இச் சந்தர்ப்பத்தில் வாழ்த்துவதுடன், இப்பாடசாலை தொடர்ந்தும் சிறப்பான சேவை செய்து இப்பகுதியில் மேன்நிலையில் விளங்கவேண்டுமென்றும் எமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு,
பருத்தித்துறை.
25-03-93

# A Message from the Daughter of the Founder of the School

*There was one vernacular school in the whole Kaddaiveli Parish nearest 10 Karaveddy The other schools were about two miles from this village. Small children between the age group of 5 years and 12 years could not walk to those schools in the hot sun. So the founder of this school wanted to build a new school for the children. Though it was not an easy to task to start a school at that time in his aim. With the help of Mr. Rajaratnam ( Hiudu Board of Jaffna ) he accomplished his work. He donated the land worth of Rs. 300/- ( at that time) put up the building worth of Rs. 200/- (at that time) supplied mid day meals and also paid the teachers about Rs. 600/- each. The Divisional Inspector of Schools Mr Lorage declared opened the school on the 29th day of Jauuary 1940. From that day forwards the school carried on supplying the mid day meals. The first head teacher of this school was Mr. Kandasamy. There were only three teachers in this school then. After a few years later the founder of this school handed over it to the Hindu Board of Jaffna. It is a Government school now. I am proud of it and I hope that the principal of this school will rnn it more efficiently than in the past.*

*I am also an old student of this school.*

**V. Malinidevi**
( Daughter of the founder of the School )

# அதிபரின் அறிக்கை

இப்பாடசாலை 50 வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இந்நாளில் அதிபர் என்றவகையிலும், மேலாக இப்பாடசாலையின் பழைய மாணவன், பெற்றோர் என்றவகையிலும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். எனது காலத்திலேயே ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொன்விழா நடைபெறுவது மிகமுக்கிய நிகழ்ச்சியாகும். இத்தகைய ஒரு பெருமைமிக்க நிகழ்வு நடைபெறுவதற்குக் காரணமாய் அமைந்த இப்பாடசாலையின் பழையமாணவர் சங்கத்தையும் பாடசாலையின் அபிவிருத்திச் சபையையும் பாராட்டுவதோடு அதற்கு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக இப்பாடசாலை பழையமாணவர் சங்கச் செயலாளரும் பொருளாளரும் இப்பாடசாலை வளர்ச்சிக்காக என்னுடன் முழுமூச்சாக நின்று உழைத்து வருகிறார்கள். அத்துடன் பலவகை உதவிகளையும் வழங்கிய பெற்றோர் நலன் விரும்பிகளுக்கும் நன்றியைத் தெரிவிக்கிறேன். இப்பாடசாலையின் பெருங்குறையாய் இருந்துவந்த விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாமையை உணர்ந்து ஒரு விளையாட்டு மைதானம் அமைக்கத் தீர்மானித்தபோது காணிகளை விலையாக வாங்கித்தந்த திரு க. நடராசா, திரு ஐ இரத்தினம் முதலியோரையும், மேலும் இக்காணிகளைப் பாடசாலைக்கு மனமுவந்து வழங்கிய இப்பகுதி மக்களின் தாராளமனப்பான்மையினையும் மனமுவந்து பாராட்டுகின்றேன். இவ்வருட இல்ல மெய்வன்மைப் போட்டி இப்பாடசாலையின் சொந்த விளையாட்டு மைதானத்திலேயே சிறப்பாக நடைபெற்றது. இப்பாடசாலையில் பலவகை அபிவிருத்தியிலும் தற்போதைய சங்கங்கள் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றன.

பாடசாலையின் கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரையில் 1919 ஆம், ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை துரிதவளர்ச்சியைக் குறுகியகாலத்திலேயே பெற்றது. 1952 ஆம் ஆண்டளவில் இப்பாடசாலையிற் பலகிராமங்களில் இருந்து வந்து கல்விகற்ற மாணவர்கள் தேசிய கல்விப் பொதுதராதரப் (SSC) பரீட்சையில் சித்தியடைந்துள்ளமை இப்பாடசாலையின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. இக்காலப்பகுதிலே இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய வித்துவான் சி. இ. கந்தசாமி அவர்கள் இப்பாடசாலையின் துரித வளர்ச்சிக்கு காரணகர்த்தாவானார். இவருடைய காலம் இப்பாடசாலையின் பொற்காலமாக விளங்கியதெனலாம். இவருடைய காலத்தின்பின் குறிப்பாக 1962 ஆம் ஆண்டின்பின் இப்பாடசாலையின் வளர்ச்சி ஒரு மந்த கதியிலேயே நடந்து வந்துள்ளது. இதன் காரணமாகத் தற்போது ஒரு மகாவித்தியாலயத்தின் தரத்தில் இருக்கவேண்டிய இப்பாடசாலை இரண்டாந்தர இடைநிலைப் பாடசாலையாக இருந்துவருகின்றது. எனவே நாம் இப்பாடசாலையை ஒரு மகாவித்தியாலயத்தின் தரத்திற்குத் தரமுயர்த்தி இவ்வூர்க் கல்வி வளர்ச்சிக்கு உதவவேண்டும். இன்றைய பொன்னாள் இப்பாடசாலையை உருவாக்கிய திரு. சி. வல்லிபுரம் அவர்களின் சேவையை ஓர் அர்த்தமுள்ள பணியாக்கிய பெருமைக்குரியது.

மேலும் இவ்வரலாற்றுப் பெருமையைக் கொண்டாடும் முகமாகப் பொன்விழா மலர் ஒன்றை வெளியிடுவதற்குச் சகல வழிகளிலும் உதவிய இப்பாடசாலையின் பழையமாணவரும் தற்போது யாழ் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான திரு. எஸ். சிவலிங்கராஜா, M. A. அவர்களுக்கும் நன்றி கூறுவதோடு இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும், குறிப்பாக கல்வி வளர்ச்சிக்கு எமது ஆசிரியர்களின் ஒத்துழைப்புடனும், இவ்வூர் மக்களின் அனுசரணையுடனும் சிறந்த பணியாற்றுவேன் என்று உறுதி கூறி இப்பாடசாலை சகல துறைகளிலும் நன்கு வளர வேண்டுமென இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

வ. கணபதிப்பிள்ளை
(அதிபர்)

# நடமாடிய பல்கலைக்கழகம்

க. கணபதிப்பிள்ளை

தமிழ் அறிஞர் உலகில் கி. வா. என்றால் வாகீச கலாநிதி ஜெகந்நாதனும், மு. வ. என்றால் வரதராஜனும் நினைவுக்கு வருவதுபோல, கடந்த மூன்று தசாப்தங்களுக்கு முன்பு இலங்கைத் தமிழாசிரியர் உலகில் எஸ். ஆர். கே. என்றால் அது வித்துவான் கந்தசாமி அவர்களுக்குக் காரண இடுகுறியாகி நினைவுக்கு வருவதை எவரும் மறுக்கமுடியாது. அந்த மூன்றெழுத்துப்பெயர், அவரது தோற்றுவாய் மண்ணான வடமராட்சியில் மட்டும் நிலைக்கொள்ளாது வடமாநில, அகில இலங்கை ஆசிரிய உலகங்களிலும் இணைந்து பவனி வந்தமையை அவர் காலத்தும் வாழ்ந்து இப்போது இளைப்பாறிக்கொண்டிருக்கும் முதிய ஆசிரியர்கள் எவரும் ஏற்றுக்கொள்வர். காரணம், அவர் ஏககாலத்தில் வடமராட்சி, வடமாநிலம், அகில இலங்கை என்னும் ஆசிரியசங்கங்கள் மூன்றிலும் ஏதாவது ஒரு பெரும் பொறுப்பை நிருவகிக்கச் சுமைதாங்கியாக நின்றமையே. அந்த மூன்றெழுத்துக்கள் ஆற்றிய ஆசிரியப் பணிகளோ அளப்பில. அவற்றிற்கான நன்றிக்கடனைத் தீர்ப்பதில் அன்றைய ஆசிரிய உலகம் வழுவவில்லை என்பதை அவரது இறுதி யாத்திரையின்போது சோகமே உருவான மிகப்பெரிய ஆசிரியத்தொகுதியைத் தன்னுட்கொண்டு ஏறக்குறைய ஒருகல் (மைல்) தொலைவுக்கு நீண்டிருந்த அந்த ஊர்வலம் எடுத்துக்காட்டியது என்பதையும் நாம் மறக்கமுடியாது. மேலும் ஆசிரியக்குழாம் அன்றி, திரு சோமசேகரம் முதலான வடமாநிலக் கல்வித் திணைக்களத் தலைமைப் பீடாதிபதிகள், திரு க. சு. அருணந்தி முதலாய பல்கலைக்கழகவிரிவுரையாளர்கள், உளவியற் பெரும் புலவன் திரு கு. சிவப்பிரகாசம் அவர்கள், வித்துவான் திரு ந. சுப்பையாப்பிள்ளை போலும் தமிழ்ப் பேரறிஞர்கள் ஊர்வலத்திற் பங்குகொண்டதோடு அமையாது ஈமப்புறங்காட்டில் முருநட்டுமெத்தையில் அவர் மீளாத்துயில் கொண்டிருந்தபோது ஆற்றிய இரங்கல் உரைகளும், வித்துவக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள்கூட அங்கு வந்து அந்தப் பொன் உடல்மீது மலர்சொரிந்து கண்ணீர் அஞ்சலி செய்தமையும் அந்த மூன்றெழுத்தின் மாண்பை மேலும் வெளிப்படுத்திலதெனில் அது மிகையன்று.

இவ்வாறு, அவர்தம் வாழ்க்கைத் துணைவியார், சுற்றம் என்பவற்றையும் அறிவியற் சமுதாயமான ஆசிரிய உலகத்தையும் கவலைப் பெருங்கடலுள் ஆழ்த்தி மரையிலைபோல மாய்ந்திசினோர் பலரே என்னும் வாக்கியத்துக்கு வாச்சியமாகாது உரையும் பாட்டும் உடையோர் சிலரே என்னும் உறையூர் முதுகண்ணன் சாத்தனாரது வாக்கியத்துக்கு வாச்சியமாய்நின்று தம்புகழ்நிறுவி மாய்ந்த வித்துவான் அவர்களது பேரழகும் மதிநுட்பமும் ஆழ்ந்த புலமையும் எவரையும் தம்பால் இழுக்கவல்லன. 'பேரழகு சேர்க்கின்றது' என்பான் புலவன் புகழேந்தி. அந்தச்சொரிவு வித்துவான் அவர்களுக்கே உரியது. அதனால் அவர் அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவர் என்பதை அவர் முன் நின்றவர் எவரும் ஏற்றுக்கொள்வர். திருமணம் முதலான சோபன நிகழ்வுகளில் தேசிய மேலங்கி உத்தரீயம் உட்படப் பீதாம்பரதாரியாய்த் தாம்பூலந் தரித்து மலரும் அவரது முகலாவண்ணியம், கலைப்பள்ளி, பொதுமன்றம் என்பவற்றில் தூய ஆசிரியச்சீருடையுடன் பங்கு கொள்ளும் போது முகத்தில் தோன்றும் தேஜோவிலாசம், மழைநாள்களில் மழை அங்கி தரித்து ஓர் ஆங்கிலேயனை நினைவுபடுத்தி வரும் கம்பீரநடை என்பனவும் பிறவும் நேரே தரிசிக்கும் ஓர் அழகியற்கலைஞனுக்குப் பெருவிருந்தளிப்பனவே. திலோத்தமை என்னும் பேரழகுத் தேவமகளைச் சிருட்டி செய்தமையால் பிரமதேவருக்கு நான்கு

புறமும் முகங்கள் தோன்றியதாகப் புராணங்கள் பேசும். ஆனால் அந்த நிலைமை வித்துவான் அவர்களைச் சிருட்டி செய்ததமையால் ஏற்பட்டதோ என்றும் யான் நினைப்பதுண்டு. பெரும்பாலும் அறிவும் அழகும் இணைந்து ஓர் இடத்தில் குடியிருப்பதில்லை என்பது பலரும் அறிந்த உண்மை. இதனை எங்கள் காலத்திலும் வாழ்ந்து பிரபல்யமுற்ற ஆங்கில நாடகப் புலவன் பேனார்ட் ஷோ தன் வாழ்க்கைத் துணைவிக்கு கூறிய கிண்டல் பேச்சு வலியுறுத்தும். ஆனால் ஷோவின் கூற்றுக்கு மறுப்புரை தெரிவிப்பதாய் அவை இரண்டும் தழுவிய பேரழகுவடிவம் ஒன்று உண்டு என்றால் அதுவும் வித்துவான் அவர்களையே சாரும்.

குலன், அருள், தெய்வங்கொள்கை,
மேன்மை,
கலைபயில் தெளிவு, கட்டுரைவன்மை,
நிலம், மலை, நிறைகோல், மலர்நிகர்
மாட்சியும்,
உலகியல் அறிவோடு உயர்குணம்
இனையவும்
அமைபவன் நூல் உரை ஆசிரியன்னே.

என்பது நன்னூலார் வகுத்த நல்லாசிரிய இலக்கணம். இதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் யார்? என்றால் வித்துவான் கந்தசாமி அவர்கள் என்பதே விடையாகும். அவரது கல்வி அறிவின் ஆழமும் பரப்பும் பிறரால் அளந்தறியப்படாதவை. அவரோடு ஒரு சிறிது நேரம் உரையாடினாலோ பக்கலில் நின்று கேட்டாலோ அவரது எடுப்பான தோற்றமும் மதிநுட்பமும் ஆழ்ந்த அறிவும் எவரையும் பிரமிக்கச் செய்யும். அவரது கட்டுரைவன்மை அளவிறந்ததாய் ஒரு சட்டவல்லுனரை நினைவுபடுத்தும். வித்துவான் என்றதும் தமிழில் புலமை பெற்ற ஒருவர் தாமே என்பது பலரும் கொண்ட முடிபாகும். ஆனால் அந்தக்கருத்தை ஒதுக்கி அதற்கொரு புதிய அர்த்தத்தை மலரவைத்த பெருமையும் வித்துவான் அவர்களுக்கே உரியது. இன்று பலரும் தத்தமக்கியன்ற ஒருசில பாடங்களிலேயே துறைபோயிருப்பதை நாம் காண்கின்றோம். ஆனால் வித்துவான் அவர்கள் அதற்கு மாறுபட்டவர். அவரது ஆழ்ந்த புலமைக்குள் அகப்படாத பாடங்கள் எதுவுமே இல்லை. கணிதம், விஞ்ஞானம், புவியியல், வரலாறு, வர்த்தகம், கணக்கியல், உயிரியல், தாவரவியல் தொடங்கி ஓவியம்வரையும் உள்ள பாடங்கள் அனைத்தும் அவருக்குக் கைவந்த பாடங்களே. ஒவ்வொரு பாடத்திலுமே அவரது விபுலம் ஆழங்காணாதவாறு விகசித்துக் கொண்டிருந்தது அவரோடு நெருங்கிப் பழகியவர்களுக்குப் புலனாகும்.

யாழ் கல்விக் கிளைக்களர். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்க இயக்குனர் பொறுப்பை இவரிடம் ஒப்படைத்திருந்தது. அக்காலத்தில் பண்டித வகுப்புப் பாடங்களில் சங்கீதமும் ஒன்று. தேர்வு நெருங்கி வினாத்தாளை ஆக்கம் செய்யச் சங்கீத பூஷணம் ஒருவர் ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால் அவரோ உரியகாலத்தில் அதனை வழங்கவில்லை. அதனால் வித்துவான் அவர்கள் கலங்கவில்லை. அதற்குரிய இசை நூல்களை இரவிரவாகப் பார்த்து, பழைய வினாத்தாள்களை ஒப்புநோக்கி வினாக்களை ஆக்கம்செய்து தேர்வைப் பூர்த்தி செய்துவிட்டார். இது எல்லார்க்கும் முடியுமா? இந்தச் சம்பவத்தைப் பலவருடங்கள் கழித்து எனக்குச் சொன்னார். அது என்னை வியப்பில் ஆழ்த்தியது. உடனே நீங்கள் பாடமாட்டீர்களே; எப்படி வினாத்தாளை ஆக்கம் செய்தீர்கள்! என்று கேட்டேன். நான் பாடிக்காட்டவேண்டுமா? தேர்வுக்கு வருபவை சங்கீத விதிகள் தானே என்றார். நான் வாயடைத்து நின்றேன். இத்தகைய ஒரு பேரறிஞனைச் சாதாரண ஆசிரியனாக நான் மதித்ததில்லை. நடமாடும் பல்கலைக் கழகமாகவே கணித்து வந்துள்ளேன்.

வித்துவான் அவர்களின் தமிழ்ப் புலமை பசுபிக் கடலுக்கு ஒப்பாகும். அதற்கு வித்திட்டவர் நுண்மதியால் சுயமாகக் கற்றுத்தேறித் தமிழ் உலகில் பிரகாசித்துக் கொண்டிருந்த முதுபெரும் புலவர் கந்தமுருகேசனார் அவர்களே. மேலும், வித்துவான் அவர்களின் பெரும்

புலமைக்குத் தேசிக மூர்த்தங்களாய் நின்று துணைசெய்தவர் பலர். அவர்களுள் வித்துவான் கணேசையா குறிப்பிடதக்கவர். இவர்களன்றித் தமிழ் நாட்டுப் பேரறிஞர்களிடத்தும் தனது இலக்கண ஐயங்களைப் போக்கிக் கலைபயில் தெளிவு பெற்றவர் இக்கட்டுரை நாயகர் இவர்களில் முதலிடம் பெறுபவர் வேங்கடராஜுலுரெட்டியார். இவர் பிறப்பில் தெலுங்கர். ஆயினும் தெலுங்கு, தமிழ், மலையாளம், கன்னடம் என்னும் நான்கு மொழிகளிலுமே வித்துவான்பட்டம் பெற்றவர். திராவிட மொழிகளை ஒப்பீடு செய்த ஆங்கிலேயரான கால்டுவெல் என்பவர் எழுதிய ஒப்பிலக்கணத்துக்குக் கண்டனம் எழுதிய பெருமையும் ரெட்டியார் அவர்களுக்கே உரியது. இவரை அடுத்து, ஔவை துரைச்சாமிப் பிள்ளை அவர்கள் குருவாக அமைந்தவர். பிள்ளை அவர்கள் புறநானூறு முதலாய சங்க இலக்கியங்களுக்குக் கல்வெட்டு ஆராய்வோடு விரிவுரை எழுதிச் செந்தமிழ்த் தாய்க்கு அணிபுனைந்ததோடு சைவசித்தாந்த கலாநிதியாயும் பிரகாசித்த பேராசிரியர். மேலும், பண்டைய புலவர்கள் வாழ்ந்த கால ஆராய்விலும் திருந்திய பாட நூற்பதிப்புக்களிலும் முதன்மை பெற்று விளங்கிய வையாபுரிப்பிள்ளை, ஆலால சுந்தரம் செட்டியார் வெள்ளை வாரணனார் ஆகியோரும் வித்துவான் அவர்களுக்குக் இலக்கணமன்றி இலக்கிய நூல்களிலும் உள்ள ஐயங்களைப் போக்கிய குருநாதர்களே. அதனால் அவருக்கிருந்த இலக்கணச் செழிப்பு யாவராலும் போற்றுதற் குரியதாயிற்று. இவரது தத்துவம் தருக்கம் சைவசித்தாந்தம் முதலாய புலமைகளுக்கு ஞானச்சுடர் ஏற்றியவர்களில் பல்துறைக் கலாசமுத்திரமாயும் முனிவராயும வாழ்ந்து திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குப் பேரொளி செய்த கைலாசபதியவர்கள், புலோலியூர் சிவபாத சுந்தரனார் என்னும் இருவரும் யாவராலும் ஆராதிக்கத் தகுந்தவர்களே.

இவரது கைகளில் தவழாத தமிழ் நூல்கள் எவையும் இல்லை எனலாம். இவரது நினைவுத்திறன் எல்லைகடந்து நின்று எவரையும் வியப்பில் ஆழ்த்தும். தாம் எடுத்துக் கொண்ட கருத்தொன்றை வலுச்செய்ய, பல்வேறு அந்தாதிகள் கலம்பகங்கள், பிள்ளைத் தமிழ்கள், முதலான கருவி நூல்கள், கலித்தொகை ஐங்குறுநூறு முதலான சங்கஇலக்கியங்கள், சிலம்பு, சிந்தாமணி முதலான காப்பியங்கள், கந்த புராணம், பெரியபுராணம் முதலான புராணங்கள், பாரதம் இராமாயணம் என்னும் இதிகாசங்கள் எனப் பரந்து கிடக்கும் நூல்கள் யாவற்றிலும் மேற்கோள் ஆதாரம் காட்டுவதும் அவ்வாறு காட்டும் போது படலம் சருக்கம் இலம்பகம் என்பவற்றையும் பாடல் எண்ணையும் தொடர்பு செய்து எவ்வித சிரமமுமின்றி வெளிப்படுத்துவதும் இவருக்குள்ள இயல்புகளாகும். இவையன்றி, பாமரமக்கள் விரும்பிப் படிக்கும் நாட்டார் பாடல்களான அல்லி யரசாணிமாலை, புலந்திரன் களவுமாலை என்னும் நூல்களிலும் இவருக்குப் பரிச்சயம் இருந்தது என்றால் எவர்தாம் நம்புவர்?

இவற்றைக் காட்டிலும் நம்மை வியப்பில் ஆழ்த்துவது கல்வெட்டு (சிலாசனம்) செப்பேடு, மெய்க்கீர்த்தி என்பவற்றில் இவருக்கிருந்த நினைவுத்திறனே. மேலே குறிப்பிடப்பட்டவை மணிப்பிரவாள நடையில் அமைந்தவை. மணி என்பது மாணிக்கம், பிரவாளம் என்பது பவளம். இவைஇரண்டும் இணைந்த மாலை போன்று கிரந்த எழுத்துக்களாலாகிய வடமொழியும் தமிழ்மொழியும் கலந்த வசன நடையே மணிப்பிரவாளம். எனவே, தனித்தமிழ் தெரிந்த ஒருவர் மணிப்பிரவாளத்தை நினைவில் வைத்திருப்பது வெகுசிரமம். ஆனால் வித்துவான் அவர்கள் நினைவிலிருந்து மணிக்கணக்கில் சொல்லிக் கொண்டே இருப்பார். கேட்பவர்கள் அதிசயிப்பர். இதுபோலவே தமது இளமைப் பருவத்திற்பார்த்த நாடகங்களில், பாத்திரங்கள்பேசிய ஒவ்வொரு பேச்சையும் அப்படியேபேசிக்காட்டுவதும் இவரது நினைவுத்திறனுக்கு அணிசெய்வதாகும்.

பலமுறை படித்தும் ஞாபகம் செய்ய இயலாதவர்களைக் 'குடஉழுந்தர்' எனப்

பகடி செய்வது நினைவாற்றலுள்ள முன்னையோர் வழக்கம். நினைவு வருவதற்காக நெட்டுருச் செய்யுந் தோறும் ஒவ்வோர் உழுந்தாக இட்டுக் குடத்தை நிரப்புதலே குடஉழுந்தர் என்பதன் பொருள். தமிழ் மூதாட்டியான ஔவையார் கூட நினைவுத் திறன் பற்றிப் பாடல் ஒன்றைத் தந்துள்ளார். அது கல்லாத முழுமகன் ஒருவனின் பரிதாப நிலைகண்டு வருந்திப் பாடிய பாடல்.

'' வெண்பா இருகாலில் கல்லானை
வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானைப்—
பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப்
பெற்றாளென்று
எற்றோமற் றெற்றோமற் றெற்று''.

என்கிறார் கிழவியார். இரண்டு முறை மனனம் செய்ததும் வெண்பா நினைவுக்கு வந்துவிடல் வேண்டும் என்பது தமிழ்க் கிழவியின் சட்டம். ஆனால் வித்துவான் அவர்கள் குடஉழுந்தராகாமல் ஔவையின் சட்டத்தில் திருத்தம் செய்து எதனையும் ஒருமுறை படித்ததும் ஞாபகம் செய்யவல்ல 'ஏகசந்தக்கிரசி, ஆகியவர்'.

இவர் பள்ளிப்பருவத்தில் ஆங்கிலம் கற்பதற்காக ஆங்கிலப்பள்ளியின் நுழைவாயிலிற் கூடக் கால்வைத்ததே இல்லை. ஆனால் இலண்டன் இடைநிலைக்கலைத் (Inter Arts) தேர்வுக்குத் தோற்றிச் சித்தியடைந்தது ஆங்கில மொழி மூலத்திலேயே என்பது எவருக்கும் பிரமிப்பைத் தரும். அத்தேர்வுக்குத் தேர்ந்தெடுத்த பாடங்கள் தமிழ், சமஸ்கிருதம், புவியியல் (தென்கிழக்காசிய நாடுகள்) என்பன. சமஸ்கிருத மொழிக்குக் குருவாக வாய்த்தவர் சீதாராமசாஸ்திரிகள். இலண்டன் இளங்கலைமாணித் (B.A) தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்த காலத்தில் வான்மீகி இராமாயணத்தையும் இவர் படித்தது எனக்குத் தெரியும். அது நாகரத்தில் எழுதப்பட்டது என்பதை ஞாபகம் செய்கின்றேன். ஆனால் அந்தத் தேர்வுக்குத் தோற்றுவதகு முன்னரே இவர் பிணி என்னும் அரக்கன் கைப்பட்டமை நமது துர்ப்பாக்கியமே.


இவர் புத்தக உலகுக்குள் மட்டும் முடங்கிக் கிடந்த ஒருவர் அல்லர். புற உலகங்களும் இவரது அறிவாட்சிக்கு உட்பட்டனவே. கல்வித்திணைக்களத்துப் பாடநூற்சபையிலும் இவருக்குப் பீடம் ஒதுக்கப்பட்டது. அதேவேளை விவேகானந்த சபையிலும் பிற சங்கங்களிலும் இடங்கள் ஒதுக்கப்பட்டன. இலங்கை அரசின் பல்வேறு திணைக்களங்களின் விதிகள் அனைத்தும், இவரது நெஞ்சம் என்னும் அச்சகத்தில் அழுந்திக் கிடந்தவை. அதனால் தொல்லைகளுக்குள்ளாகியவர்கள் இவரது நுண்மதியோடு கூடிய ஆலோசனையைப் பெறவருவது எந்நாளும் காணும் காட்சியாகும். அவ்வாறு வருபவர்களுக்கு வேண்டியஉதவியை வழங்கி அவரது இடர்களைவது இவருக்கு மூச்சுவிடமுடியாத பரோபகாரப்பணியாகும். அப்பணி சிலநாள்களில் இரவு பன்னிரண்டு மணி வரைக்கும் நீடிப்பதுண்டு. அதற்குப் பின்னரே இரவுப் போசனம் இடம் பெறும்.

இவருக்குத் தமிழ் வழங்கியவர் கந்த முருகேசனார். அவர் ஒரு நிரீச்சுரவாதி என்பது பலரும் அறிந்தே. அவ்வாறமைந்தும் இவர் அவர் பக்கம் சாராது உண்மைச் சைவியாக வாழ்ந்தது இவரது தெய்வங்கொள்கையைப் புலஞ்செய்வதாகும். சைவத் துறவியருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்வதும் அவர்களை ஆதரிப்பதும் நோய்வாய்ப் பட்டுப் படுக்கையிற் கிடக்குமட்டும் விரதங்களை அனுட்டிப்பதில் சங்கற்பம் பூண்டிருந்தும், அவகாசம் கிடைக்கும் போதெல்லாம் மாலைவேளையில் புளியங்கியான் விநாயகர் ஆலயத்தில் நிட்டை கூடி இருப்பதும் இவரது சைவஆசார சீலங்களை வெளிப்படுத்திய சைவமுத்திரைகள்.

அந்நாளில் பிச்சை என்று வந்தாலோ வழியில் இறந்தாலோ எல்லாரும் வழங்குவது ஐந்து சதம் அல்லது பத்துச் சதந்தான். அந்நாளில் இத்தொகைகள் பெறுமதியானவை. ஆனால் ஐம்பது சதம் மட்டும்

## கட்டைவேலி, யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தைப் பேணி உயர்த்திய பெருமைமிகு அதிபர்

( 1948 - 1962 )



அமரர், வித்துவான் சி. இ. கந்தசாமி அவர்கள்



இருந்து விட்டால் இவர் கவலைப் படுவார். ஏனெனில் இவர் வழக்கமாக ஒருநாவுக்குக் குறைவாக பிச்சை வழங்கியதே இல்லை. உடனாசிரியர்களுக்கோ நண்பர்களுக்கோ துன்பம் நேரிட்டதை அறிந்ததும் கணம் கூடத் தாமதிக்கமாட்டார். அங்கு வந்து தேவைப் பட்ட சரீர உதவியோடு நிதிஉதவியையும் வழங்கி நின்றவர் இவரே தான். நிதிஉதவும் போது இடக்கரம் தெரியாவாறு உதவியோடு உதவிநிதியை மீளப் பெறாதிருந்தமையும் இவரது உதாரணத்தைப் புலப்படுத்துவதாகும். அதனால் உதவி ஆசிரியர்கள் எவரும் இவரை அதிபர் என்ற பீடத்தில் வைத்து மதிக்கவில்லை. பின்னை, நண்பர் அல்லது தந்தை என்ற ஸ்தானத்தில் வைத்து மதித்தனர் என்பதை இவரது பிரிவின் போது அவர்களது நெஞ்சக் குமுறல் வெளிப்படுத்தியது. ஆசிரியர்கள் நண்பர்களன்றி இளம்பாடுற்றேன் என்று எவர்வந்து கேட்ட போதும் தயங்காமல் நிதி வழங்கிய பெருமகன் வேறுயாருமல்லர். அவர் வித்துவான் அவர்கள் தாம். இவை எல்லாம் நல்லாசிரியர் அம்சமான அருளின் மலர்வுகள்.

இவரை நன்கு அறியாதவர்கள் ஆசிரியர். வித்துவான் என்றே இவரைப் படம் பிடிப்பர். ஆனால் சிறந்த விவசாயி என்பது பலரும் அறியாத ஒன்று. வயல் உழுதல் அனுபவப் பட்டவர்களுக்கே சாத்தியமாகும். அதிலும் நான்கு சோடி ஐந்து சோடி மாடுகளுக்கு முன் ஏர்பிடித்துச் செல்வது பழுத்த கமக்காரனுக்குரிய சிறப்பம்சம். அந்த முன் ஏரும் வித்துவான் அவர்களுக்கே உரியது என்றால் அது உயர்வு நவிற்சியன்று. இதுபோலவே உலகஅனுபவங்கள் கருமங்கள் எவற்றிலும் இவர் முன்னணியில் நின்றவர். அவற்றில் 'செய்வன திருந்தச்செய்' என்பது இவரது தாரக மந்திரம்.

இவை எல்லாவற்றிலும் பார்க்க இவரது உள்ளத்தில் உறைந்திருந்த உணர்வு நாம் தமிழர் என்பதே 1958 ஆம் ஆண்டுக் கலவரத்தின் போது தென்னிலங்கையில் அடியும் உதையும் பட்டுப் பருத்தித்துறைத் துறைமுகத்தில் வந்திறங்கிய தமிழ்ச்சாதியைக்கண்டு மனம் குமுறினார். அப்போது அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கிய குழுவுக்குத் தலைமைதாங்கி நின்றதோடு அமையாது தமிழர் விடுதலைக்கு ஆயுதமே வழிவகுக்கும் எனத் தீர்க்கதரிசனம் கண்டவரும் இவர்தாம். அவ்வாறு தீர்க்கதரிசனம் கண்டதோடு நில்லாது அதற்கான ஆயத்தங்களைச் செய்வதில் முனைந்து நின்றவரும் இவர்தாம் என்பது எவருக்கும் தெரியாது. இன்று வித்துவான் அவர்கள் உயிரோடு இருந்தால் இன்றைய போராட்டம் பதினைந்து ஆண்டுகளாவது முன்கூட்டி ஆரம்பித்திருக்கும் என்பதில் எவ்வித ஐயமில்லை அந்தப் புனித வடிவம் நாற்பத்தாறே ஆண்டுகள் மலர்ந்து 1962 ஆண்டுஒக்டோபர்த் திங்கள் 13 ஆந் நாள் வாடி வீழ்ந்தது பல ஆக்கப்பணிகள் செய்ய எண்ணியிருந்தும் காலன் முந்திவிட்டான். அவர் எமக்குத் தந்தது நமது நிச்சுவாசமான பெமுச்சு ஒன்றே.

---

## அறிவும் பண்பும்

- ஓ நம்பிக்கையே! எங்களை நம்பிக்கை உள்ளவர்களாக்குக.

  — இருக்குவேதம்

- எழுந்திரு, விழித்திரு, கோரிய கருமம் கைகூடும்வரை உழைத்திரு.

  — உபநிஷதம்

- நிறை கண்டால் போற்றுங்கள், குறைகண்டால் ஒன்றும் கூறாதீர்கள்.

  — யேசுநாதர்

- அன்பே கடவுள்; அன்பில் வாழ்

  — பகவான் ஸ்ரீ சாயிபாபா

# வளரும் உலகில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவக் கலையின் முக்கியத்துவம்

செ. ஸ்ரீநிவாஸன்
B. A (Sri Lanka)
Diploma in Marketing (U. R.)
SLAS.

நமது நாட்டின் கல்விமுறையானது இன்றும் அந்நியரினால் புகுத்தப்பட்ட பண்டைய கல்வி அமைப்பைக் கொண்டதாகவேயிருப்பதோடு ஒரு சில குறிப்பிட்ட துறைகளிலேயே கூடிய கவனஞ் செலுத்துவதொன்றாகவும் விளங்குகின்றது. ஆனால் மேற்கு நாடுகளோ ஏனைய துறைகளில் பாரிய வளர்ச்சி கண்டுள்ளது போல கல்வித்துறையிலும் பெரும் வளர்ச்சி கண்டுள்ளன. அவர்களின் கல்வி முறையானது விஞ்ஞானம், தொழிநுட்பம் ஆகியவற்றுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுப்பதோடு நின்றுவிடாது ஏனைய துறைகளிலேயும் கவனஞ் செலுத்துவதாய் அமைந்திருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், தனிநபர் ஒருவரின் தனித்திறமையை இனங்கண்டு அவர் அத்துறையில் தனித் தேர்ச்சி பெறவும் அவர்களின் கல்விமுறை வழிவகுக்கின்றது அமெரிக்காவோ இன்னும் பலபடி முன்னேறிவிட்டது. அவர்களின் கல்விமுறையில் முகாமைத்துவம் இன்று முக்கிய இடம் வகிக்கின்றது. நுண்ணறிவுக்கு மாத்திரம் முக்கியத்துவம் அளிக்கின்ற பிரித்தானியக் கல்விமுறையை ஒதுக்கித் தள்ளிவிட்டு புதிய கல்வி முறையொன்றை அமெரிக்கக் கல்வி நிறுவனங்கள் பின்பற்றுகின்றன. இக்கல்வி முறை இன்று அமெரிக்காவைப் பின்பற்றும் ஏனைய நாடுகளிலும் அறிமுகமாகியுள்ளது. பிரித்தானியாவிலும் சில பல்கலைக் கழகங்களும் கல்வி நிறுவனங்களும் இம் முறையைப் பின்பற்றத் தொடங்கிவிட்டன. மாணவர்க்கு ஒரு பிரச்சினையின் நிலைப்பாட்டைக் கூறிவிட்டு அவர்கள் அப்பிரச்சினையை எவ்வாறு அணுகிப் பகுப்பாய்வு செய்கின்றார்கள் என்றும் எவ்விதமான தீர்வினை அப்பிரச்சனைக்குத் தருகின்றார்கள் என்றும் சோதிக்கிறார்கள். அப்படியானாற்றான் அவர்களால் நடைமுறைப் பிரச்சனைகளை அணுகமுடியும் என அவர்கள் கருதுகிறார்கள்.

மாணவர்கள் தமது விடைகளை அளிக்கும்பொருட்டு எந்தகைய நூல்களையோ, சஞ்சிகைகளையோ, அகராதிகளையோ, வேறுசான்றுகளையோ பரீட்சை மண்டபத்துக்கு எடுத்துச் செல்ல முடியும்.

மேல்நாடுகளில் இத்தகைய சிறப்பம்சங்களைக் கொண்டு வளர்ந்துவரும் கல்வித் துறைகளில் ஒன்று சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் ஆகும். பலபல்கலைக் கழகங்கள் இத்துறைக்கான டாக்டர் பட்டப் படிப்பு வகுப்புக்களையும் நடாத்துகின்றன. தனியார் பொருளாதாரத்தின் முக்கியத்துவம் உணரப்படுகின்ற இந்நாளில் வளரும் நாடாகிய எம்நாட்டிலும் இதன் முக்கியத்துவம் இன்னுஞ் சில நாட்களில் உணரப்படும்.

இலங்கையில் இன்று கொழும்பைச் சுற்றியே பல நிறுவனங்களும் அமைந்திருப்பதால் இத்துறைக்கான முக்கியத்துவமும் அங்கேதான் உணரப்பட்டிருக்கின்றது. எமது பகுதியிலும் இதன் முக்கியத்துவம் உணரப்படும் காலம் வெகுவிரைவில்

வரலாம். எனவே இத்துறை சார்ந்த படிப்பை யாழ் பல்கலைக்கழகமும் ஏனைய நிறுவனங்களும் இப்பொழுதே ஆரம்பிப்பின் மிகவும் வரவேற்கத்தக்கது. இங்கிலாந்தில் ஆரம்பப் பாடசாலைகள் சிலவற்றில்கூட இக்கல்வி போதிக்கப்படுகின்றது. இதிலிருந்து வளரும் உலகில் இத்துறையின் முக்கியத்துவம் எந்தளவில் இருக்கின்றது என்பதனை ஊகிக்கமுடியும். எனவே இதன் அடிப்படை அம்சங்கள் சிலவற்றை கண்டு நோக்குவோம்.

நிறுவனத்தின் நோக்கத்தை அடையும் அதேவேளை நுகர்வோரின் தேவைகளை அறிந்து அவற்றை அவர்கட்கு அளித்து அவர்களை மனநிறைவடையச் செய்யும் பொறுப்புமிக்கதும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதுமாகிய முகாமைத்துவமே சந்தைப்படுத்தல் முகாமைத்துவமாகும். இது நான்கு முக்கிய பிரிவுகளைக் கொண்டதாகும். அவையாவன: பண்டம், விலை, பொருளின் தனித்தன்மைக்குச் சிறப்புச் சேர்க்கும் அம்சங்கள், இடம் என்பனவாகும்.

பண்டம் எனும்போது அதன் பெயர், அதனை உற்பத்தி செய்ய உபயோகிக்கப்படும் மூலப்பொருள், நுகர்வுக்கு அளிக்கப்படும் பொருளின் அளவு, தொகை, அதன் கொள்கலன், நிறம், மணம், அடைக்கும் பெட்டியிலுள்ள எழுத்துக்கள், தகவல்கள் படங்கள் போன்ற பல அம்சங்களையும் குறிப்பிடுவதாகும். அளவு என்றால் சிலருக்குச் சிறிய பொருள் தேவை. சிலருக்குச் சிக்கன அளவிலான பொருள் தேவைப்படலாம். உதாரணம்: பால்மா, பற்பசை என்பன. இந்தஅளவுகளைத் தீர்மானிப்பதே இதுவாகும். கொள்கலன் எனும்போது சிலபொருட்கள் உடையாமல் பாதுகாக்கப்படும் முறையில் பெட்டிகளில் அடைக்கப்பட வேண்டும். இவைபோன்ற தீர்மானங்களை எடுக்கும் நடவடிக்கையை இது குறிக்கும்.

சிலநிறங்கள் சிலநாடுகளில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. சிலநிறங்கள் சிலரால் விரும்பப்படுகின்றன. இதற்குத் தகும் பொருளின் நிறம் தீர்மானிக்கப்பட வேண்டும். யப்பான் நாட்டில் வெள்ளை துக்கத்தைக் குறிப்பதனால் அது விரும்பப்படுவதில்லை. முஸ்லிம் நாடுகளில் பச்சை நிறம் மிகவும் விரும்பப்படுகின்றது.

அடைக்கும் பெட்டியில் சிலதகவல்கள் கட்டாயம் இருக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் சட்டமாக இருக்கலாம். நுகர்வோர் சிலவற்றை எதிர்பார்க்கலாம். முஸ்லிம் நாடொன்றிற்கு அனுப்பும் பொருள் ஒன்றின் பெட்டியில் உள்ள படம் பன்றியாக இருந்தால் அந்த நாட்டில் பெரும் ஆர்ப்பாட்டம் நடக்கும்.

மேற்போந்த பலவிடயங்களையும் குறிப்பதே பண்டம் எனும் பிரிவாகும்.

அடுத்தது விலை. உற்பத்திச் செலவுடன் ஏனைய செலவுகளையும் இலாபத்தையும் மட்டும் சேர்த்துப் பொருளின் விலையை நிர்ணயிப்பதா அல்லது வேறு விலை நிர்ணய முறைகளைக் கையாள்வதா என்கின்ற விடயங்களையும் மொத்தவிலை, சில்லறை விலை போன்ற விடயங்களையும் விசேட கழிவு வழங்கல் போன்ற விடயங்களையும் கொண்ட பிரிவு இதுவாகும்.

பொருளின் தனித்தன்மைக்குச் சிறப்புச் சேர்ப்பதற்குப் பல வழிகள் கையாளப்படுகின்றன விளம்பரம், கண்காட்சி, போஸ்டர்கள், விசேட அன்பளிப்புகள் எனப் பல வழிகள் பின்பற்றப்படுகின்றன. இவற்றுக்குப் பல சாதனங்களும் பயன்படுத்தப்படுகின்றன. இவை பற்றிய ஆய்வுகள் மூன்றாவது பிரிவினுள் அடங்கும்.

அடுத்ததாக இடம் எனும் பிரிவு அமைகின்றது. பொருளின் விநியோகமுறை, போக்குவரத்து, விநியோகஞ் செய்யும் அமைப்புக்கள், விற்பனைப் பிரதிநிதிகள் என்ற அம்சங்களை அடக்கியதே இடம் என்ற பிரிவாகும்.

மேற்படி நான்கு பிரிவுகளையும் முகாமைத்துவம் செய்யும் கலைதான் சந்தைப்

படுத்தல் முகாமைத்துவமாகும். சிலர் இதனையும் விற்பனை முகாமைத்துவத்தையும் ஒன்றாகக் கருதுகிறார்கள் ஆனால் இதன் ஒரு பிரிவே விற்பனை முகாமைத்துவமாகும்.

இந்தக்கலைக்கு முக்கியமாகத் தேவைப் படுவது தகவல்கள், ஆராய்ச்சி, பகுப்பாய்வு. திட்டமிடல், கண்காணிப்பு, உறுதியான தீர்மானம் என்பன பற்றிய அறிவாகும். ஆகவே, இத்துறையில் திறம்படச் செயற் படுவதற்கு இவை யாவற்றையும் திறம்பட முகாமைத்துவம் செய்யத் தெரிந்திருக்க வேண்டும். ஆகவே, இவை பற்றிய அறிவு யாவும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் பயிலும் மாணவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், நிறுவன அமைப்பு, பொருளாதாரம், புள்ளிவிபரவியல், விற்பனை முகாமைத்துவம், சந்தைகளின் செயற்பாடு, சர்வதேசச் சந்தைச் செயற்பாடு, கணக்கியல், உளவியல், சட்டம், சர்வதேசச் சட்டம் போன்ற துறைகளிலும் அவன் தேர்ச்சிபெற வேண்டும்

இதுவரை கூறியவாற்றால் இக் கலையைக் கற்பதிலுள்ள உற்சாகத்தையும் நன்மையையும் பற்றி ஓரளவாயினும் அறிந்து கொள்ளக் கூடியதாக விருந்திருக்கும் என நம்புகின்றேன் எதிர்கால மாற்றங்களை எடைபோடக்கூடிய பெரியவர்கள் இக்கலை வருங்காலத்தில் பெறப்போகும் முக்கியத் துவத்தை உணர்ந்து எமது மாணவர்க்கு இன்றே அதனைப் போதிக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

## கலைச்சொல்லாக்கம் — Glossary

| | |
|---|---|
| பண்டம் | — Product |
| விலை | — Price |
| பொருளுக்குச் சிறப்புச் சேர்க்கும் அம்சம் | — Promotion |
| இடம் | — Place |
| பகுப்பாய்வு | — Analysis |
| தகவல்கள் | — Information |
| ஆராய்ச்சி | — Research |
| திட்டமிடல் | — Planning |
| கண்காணிப்பு | — Control |
| தீர்மானம் எடுத்தல் | — Decision Marking |
| சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் | — Marketing Management |
| தனியார் பொருளாதாரம் | — Capitalism |
| கொள்கலன் | — Package |
| விற்பனை முகாமைத்துவம் | — Sales Management |
| நிறுவன அமைப்பு | — Organisation Structure |
| பொருளாதாரம் | — Economics |
| புள்ளிவிபரவியல் | — Statistics |
| கணக்கியல் | — Accounting |
| உளவியல் | — Psychology |

---

## அன்பும் பாசமும்

- அன்புதான் பிரபஞ்சத்தின் பிரணவ வேதம்,
  அன்புதான் மானிடத்தின் மங்கள நாதம்,
  அன்புதான் ஆன்மாவின் ஆனந்த ராகம்,
  அன்புதான் உள்ளங்களின் அந்தரங்க கீதம்.

— உதயணன் (அந்தரங்ககீதம்)

- பரிசுத்தமான அன்பு என்பது மன நெகிழ்ந்துருகும் தூயவர்களின் கண்ணீரால் இவ்வுலகில் நிரூபிக்கப்படுகிறது.

— நா. ப. (பொன்விலங்கு)

# ஈழத்துத் தமிழ்க் கல்வி வரலாற்றில் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர்

எஸ். சிவலிங்கராஜா

ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியில் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவருக்குக் கணிசமான பங்குண்டு. இவரின் பங்களிப்பு சரியாக அறியப்படாமலும் ஆராயப்படாமலும் இருக்கிறது. 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் முதல் தசாப்தம் வரை வாழ்ந்த சிவசம்புப் புலவரின் ஆற்றலும் ஆளுமையும் ஏதோ ஒரு வகையில் ஈழத்துத் தமிழ்க் கல்வியிலும், ஆய்வுத் துறைகளிலும் சுவறியிருக்கிறது என்பதை இன்றைய இளந்தலைமுறையினர் முழுமையாக அறியும் வாய்ப்புக் கிட்டவில்லையெனலாம்.

## பிறப்பாண்டுத் தவறு

உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின் பிறப்பாண்டுக் கணக்கெடுப்பில் தவறுண்டு என்பதைப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை சுட்டிக் காட்டியுள்ளார். (இளங்கதிர்–1981) தமிழிலக்கிய வரலாற்றுப் பரப்பில் மிக அண்மைக்காலத்தில் வாழ்ந்த சிவசம்புப் புலவரின் பிறப்பாண்டினைச் சரியாகக் கணிப்பிட முடியாமலிருப்பது நமது பாரம்பரியத்தின் பலவீனத்தையே காட்டுகிறது எனலாம். இவரின் பிறப்பாண்டு 1829 என்றும், 1830 என்றும், 1852 என்றும் வெவ்வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவசம்புப் புலவரின் காலம் 1830 – 1910 எனக் கொள்ளலாம் என்று பேராசிரியர் வேலுப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பல தமிழறிஞர்களின் ஜனன மரணக் கணக்கெடுப்புக்கள் தவறாகவே உள்ளன. இத் தவறுதலுக்கு எமது சமய, சமூக, பண்பாட்டு அம்சங்களையே காரணமாகக் கருதி நோகவேண்டியிருக்கிறது.

உதாரணமாக, எமது சமய, சமூக, சடங்காசாரங்களினடிப்படையில் இறந்தவரின் சாதக ஓலையை அந்தியேட்டியின் போது கடலிற் போட்டுவிடுவது வழக்காறாகவுள்ளது. இவ் வழக்காற்றால் 19 ஆம் நூற்றாண்டுத் தமிழறிஞர் பலரின் காலக் கணிப்பைக் 'கடல் கொண்டது' என்றே கொள்ள வேண்டும். வரலாற்றுப் பேண் முறையின்மை, திதி, நட்சத்திரக் கணிப்பு முறை, முதலியனவும் இத்தகைய கால முரண்பாடுகளுக்குக் காரணம் எனலாம்.

## மரபு வழிக் கல்வி

ஈழத்துத் தமிழ்க் கல்விப் பரப்பில் பாரம்பரிய, மரபுவழிக் கல்வியின் சுவடுகளை மிக ஆழமாகப் பதித்தவர்களுள் சிவசம்புப் புலவர் குறிப்பிடக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தவர். வடமராட்சிப் பகுதிக்கு நீண்டதொரு கல்விப் பாரம்பரியம் உண்டு. இப்பாரம்பரியத்தின் ஒரு மைல்கல் சிவசம்புப் புலவர் எனலாம். உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின் தந்தை அருளம்பல முதலியார் உடுப்பிட்டியில் பள்ளிக்கூடம் நிறுவியவர். நாவலர் யாழ்ப்பாணத்தில் பாடசாலை நிறுவுவதற்கு முன்னரே உடுப்பிட்டியில் அருளம்பல முதலியாரால் சைவப் பாடசாலை யொன்று தருமப்பள்ளிக்கூடம் என்ற பெயரில் நிறுவப்பட்டிருந்தது. நாவலருக்குப் பத்தொன்பது வயதாயிருக்கும் பொழுது உடுப்பிட்டிச் சைவப் பாடசாலை பற்றிய செய்திகள் உதய தாரகைப் பத்திரிகையில் வெளிவந்துள்ளன.

உடுப்பிட்டியில் போடப்பட்ட அத்திவாரக் கல்வியோடு சிவசம்புப் புலவர் நல்லூர் சம்மந்தப் புலவரிடமும் சரவணமுத்துப் புலவரிடமும் முறையாகப் பாடங் கேட்டார். அன்றைய சமூகச் சூழலில் மிக உயர்ந்த நிலையில் வாழ்ந்த அருளம்பல

முதலியாரின் மகனுக்கு நல்லூரிற் கல்வி பெறுவதில் எவ்வித சிரமமும் இருக்க வில்லை. கோப்பாயிலிருந்த உறவினர் வீட்டில் இருந்து சிவசம்புப் புலவர் பாடங் கேட்டார் என்று அறிய முடிகின்றது. மயில் வாகன வம்ச வைபவம் என்ற பிரபந்தத்தில் தனது ஆசிரியர்களான சரவணமுத்துப் புல வரையும் சம்மந்தப் புலவரையும் சிவசம்புப் புலவர் குறிப்பிட்டுள்ளார். கூர்த்த மதியும் புலமை வளனும் இவரிடம் இயல்பாயமைந் திருந்தன என்று கூறப்படுகின்றது. நல்லூ ரிலிருந்து உடுப்பிட்டி திரும்பிய சிவசம்புப் புலவர், புராண படனம் செய்துகொண்டும் பல்வேறு தரத்தில் இலக்கிய, இலக்கண, புராண படன வகுப்புக்கள் நடத்திக்கொண் டும் வந்தார் என அறிய முடிகின்றது. சிவசம்புப் புலவரின் இல்லம் இராப்பள்ளி, நிலாப்பள்ளி முதலிய வளர்ந்தோர் கல்வி நிலையமாகவும் விளங்கியது என்று தெரிய வருகின்றது. அக்காலத்தில் குடாநாட்டின் திண்ணைப் பள்ளிகளில் நடைமுறைரிலிருந்த 'சாதி இறுக்கம்' சிவசம்புப் புலவரின் திண் ணைப் பள்ளியில் நடைமுறைப்படுத்தப்பட வில்லையென்றும் சொல்லப்படுகின்றது.

## செவி வழிக் கதை

பெரும்பாலான யாழ்ப்பாணத்துத் தமிழறிஞர்களுக்கு அக்காலத்தில் இந்திய அங்கீகாரம் தேவைப்பட்டமையைச் சமூக வரலாற்றாய்வாளர்கள் அறிவர். பாரதி யாரின் ஞான குருவாகிய (யாழ்ப்பாணத்துச் சாமி) அருளம்பல சுவாமிகளும் வடமராட் சிப் பகுதியைச் சேர்ந்தவரென்றே கூறப் படுகின்றது. அவர் வீட்டோடு, ஊரோடு கோபித்துக் கொண்டு இந்தியா சென்று வாழ்ந்து திரும்பியவர் என்றே கூறப்படு கின்றது. இத்தகையோரின் இந்தியப் பய ணத்திற்குப் புவியியல் அண்மைத் தன்மை மிகச் சாதகமாக அமைந்தமையும் மனங் கொள்ளத்தக்கது.

இந்தியா (தமிழ் நாடு) சென்று புகழ் பரப்பிப் பரிசில்கள் பெற்றுத் திரும்பிய போதுதான் சிவசம்புப் புலவரின் மேதா விலாசத்தை ஊரவர் இனங்கண்டு ஏற்ற மரியாதைகள் செய்து வரவேற்றனர் என் றும் பேசப்படுகின்றது. நீண்ட நாட்கள் தமிழ்நாட்டில் தங்கிக் கற்றும், கேட்டும்' கற்பித்தும் வந்த புலவர் பின்பு வருடத்தில் இரண்டு மூன்று தடவைகள் இந்தியா சென்று திரும்புவது வழக்கமாம். பாஸ்கர சேதுபதியின் நன்கொடைப் பணம் அடிக்கடி புலவருக்குக் கிடைத்தது என்றும் அறிய முடிகின்றது.

## புலவர் பட்டம்

சிவசம்புப் புலவருக்குப் 'புலவர்' என்ற பட்டத்தைச் சூட்டியவர் ஆறுமுகநாவலரே என்று கூறப்படுகின்றது. சிவசம்புப் புலவ ருக்கு எதிரான ஒரு 'அணி' அவர் காலத் திற் தொழிற்பட்டதாகவும், அந்த எதி ரணிக்கு எதிராக அவ்வப்போது புலவரின் மாணவர்கள் பதிலடி கொடுத்தார்களென் றும் அறிய முடிகின்றது. புலோலியைச் சேர்ந்த வ. குமாரசாமிப் புலவர் அக்காலத் தில் வெளிவந்த திராவிட கோகுலம் என் னும் பத்திரிகையில் பின்வரும் பாடலை எழுதிப் பிரசுரித்ததாகக் காலஞ்சென்ற கலாநிதி சிவப்பிரகாசம் (குமாரசுவாமிப் புலவரின் மகன்) அவர்கள் மூலம் அறிய முடிந்தது.

''கோகிலமே தமிழ் நூலிற்
சிவசம்புப் புலவனைப் போல்
ஆகிலமே யாருமென்றார்
ஆறுமுக நாவலரும்
வேகிலமே நாமதற்கு
வேகினர் தம் மனங்குளிர(க்)
கோகிலமே உனதினிய
குரலெடுத்துக் கூவுதியோ''.

இப்பாடல் சிவசம்புப் புலவருக்கு அவர் காலத்திலிருந்த எதிர்ப்பினையும், ஆதர வினையும் ஒருங்கே புலப்படுத்துகிறது.

சிவசம்புப் புலவர் தம் காலத்தில் வாழ்ந்த ஈழத்துத் தமிழறிஞர் பலருடன் நட்புடனும், தொடர்புடனும் வாழ்ந்தார் என்று அறியமுடிகின்றது. ஆறுமுகநாவலர் இவ்வுலக வாழ்வை நீத்த போது புலவர் இரங்கிப் பாடிய பாடல் தமிழறிஞர் அறிந் ததே. சிவசம்புப் புலவர் ஆறுமுக நாவலர்

சி. வை. தாமோதரம்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் முதலிய தமிழறிஞர்களுடன் தொடர்பு கொண்டிருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. குமாரசுவாமிப் புலவருக்குச் சிவசம்புப் புலவர் கடிதங்கள் எழுதியதாகப் புலவரின குமாரர் முத்துக் குமாரசுவாமிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

## சிறந்த கவித்துவம்

சிவசம்புப் புலவர் நூலாசிரியராயும், உரையாசிரியராயும் வாழ்ந்தவர். பல கண்டனத் துண்டுப் பிரசுரங்களுக்கும் இவர் காரணகர்த்தாவாக இருந்தார் என்று அறிய முடிகின்றது. ஈழத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் எண்ணிக்கையாற் கூடிய பிரபந்தங்கள் இயற்றியவரும் இவரேயென்று கூறப்படுகின்றது. புலவர் சிறந்த கவித்துவமுடையவர் என்பதை இவரது பாடல்களைப் படிப்போர் நன்கு உணர்வர். பெரும்பாலும் இவர் பாடல்களின் பொருள் மரபு காலத்தோடொட்டியதாகவே காணப்படுகின்றது. பல வகையான யாப்பு வடிவங்களையும் கையாண்டு பல வகையான பிரபந்தங்களையும் இவர் இயற்றியுள்ளார். தன் காலத்தில் வாழ்ந்த உள்ளூர்ப் பிரபுக்கள் பலரையும் இவர் விதந்து பாடியுள்ளமை குறிப்பிடத் தக்கது. இவர் பாடிய பிரபந்தங்களிற் பல இன்னும் அச்சேறாதுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. ஈழத்தின் பல பாகங்களிலும் எழுந்தருளியிருக்கும் கடவுளர்மீது இவர் நான்மணி மாலை மும்மணிக் கோவை, பதிகம், ஊஞ்சல் போன்ற பிரபந்தங்களையும் படைத்துள்ளார். பாஸ்கரசேதுபதி கல்லாடக் கலித்துறை, பாண்டித்தேவர் நான்மணிமாலை, பருத்தித்துறைக் கலித்துறை, வல்வைக் கலித்துறை, பினாங்கு தண்ணீர் மலைக் கந்தசாமி பதிகம், நல்லைக் கந்தசுவாமி விஞ்சதி, வல்லிபுரநாதர் பதிகம், கந்தவன நாதர் பதிகம், திருச்செந்திற் திருவந்தாதி, மயில்வாகன வம்ச வைபவம் முதலிய நூல்களிற் சிவசம்புப் புலவரின் கவித்துவத்தைக் காணலாம்.

சிவசம்புப் புலவரின் கவித்துவத்தைச் சி. வை. தாமோதரம்பிள்ளை விதந்து போற்றியுள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த அறிவுடையவரான சி. வை. தா. பழந்தமிழிலக்கியங்களைப் பழுதறப் பதிப்பிப்பதில் முன்னின்றுழைத்தவர். நல்ல இலக்கிய இரசிகரும் கூட. நாவலர் இறந்த போது சிவசம்புப் புலவர் மனமுருகிப் பாடிய பாடலைச் சி. வை. தா. பின்வருமாறு விதந்து பாடியுள்ளார்.

"ஆரூரனில்லையென்
காரிகையாலிவ் வவனிதொழப்
பேரூரு மாறுமுக
நாவலர் பெருமான் பெருமை
சீருரு மாறு தெரித்தாய்
சிவசம்பு தேசிகநிற்
கரூரி னேரின்றன்
றோநின் சொல் வன்மையறிந்தனமே"

## உரையாசிரியர்

தான் வாழ்ந்த காலத்தில் சிறந்த கவித்துவமுடையவராக விளங்கியதோடு சிறந்த உரையாசிரியராகவும் சிவசம்புப் புலவர் திகழ்ந்தார். 19ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் மதித்துப் பயிலப்பட்டுவந்த நூல்களுக்கே புலவர் உரையெழுதியுள்ளார். ஏறக்குறையப் புலவர் பதினைந்து நூல்களுக்கு உரையெழுதியுள்ளார் என்று அறிய முடிகின்றது. ஆனால் நூலுருப் பெற்ற உரை நூல்கள் மிகச் சிலவே. மறைசையந்தாதி உரை, வள்ளியம்மை திருமணப் படலவுரை, யாப்பருங்கலக் காரிகை உரை ஆகிய மூன்றுமே அச்சு வாகனம் இவர்ந்தன என்று சொல்லப்படுகின்றது. இவரின் உரை விளக்கச் சிறப்பையும், நுட்பத்தையும் யாப்பறி புலவர் விதந்து போற்றுவர். இந்நூல்கள் இப்போது கிடைப்பது மிகவும் அரிது. புலவரின் உண்மையான ஆற்றலைத் தமிழ் கூறு நல்லுலகம் அறிய வேண்டின் அவரின் நூல்கள் அச்சேற வேண்டும்.

புலவர் ஆலயங்களில் புராண படனம் நிகழ்த்தினார் என்றும் அறிய முடிகின்றது. புலவரின் உரை விளக்கத் திறனுக்கு இப் புராண படன மரபும் பக்கபலமான காரணி

யாக அமைந்திருக்கலாம் எனக் கருதுவது தவறாகாது.

உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் சிறந்த போதகாசிரியராகவும் திகழ்ந்தார். புலவரியற்றிய நூல்களிலும் பார்க்க அவரது ஆற்றலும் ஆளுமையும் ஏதோ ஒரு வகையில் ஈழத்து இலக்கியப் பரப்பை, விரிவடையச் செய்யும் பணியிலீடுபட்ட அவரது மாணவர் பரம்பரையாலேயே வெளிப்பட்டு நிற்கின்றன என்று கருதலாம்.

சிவசம்புப் புலவரின் உரையாசிரிய மரபில் உதித்து நின்று நிலைக்கும் அறிஞர்களுக்கு வகை மாதிரியான உதாரணமாக வல்வை ச. வயித்திலிங்கம்பிள்ளையைக் குறிப்பிடலாம். வல்வை ச. வயித்திலிங்கம் பிள்ளையின் பணி பல பரிமாணத்திற்குட்பட்டபோதிலும், உரை மரபில் நேரடி வாரிசாகக் கருதக்கூடியவர் என்று அறிய முடிகின்றது. வல்வை ச. வயித்திலிங்கம் பிள்ளை புலவரின் நம்பிக்கைக்கும், நன்மதிப்புக்குமுரிய மாணவனாகத் திகழ்ந்தார் என்றும், புலவரின் திண்ணைப் பள்ளியில் ஆசிரியராகப் பணி புரிந்தார் என்றும் தெரியவருகின்றது.

## நேரடி மாணவர்கள்

உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரிடம் பாடங் கேட்டவர்கள் பலர். நீண்ட நாட்கள் அவரிடம் இலக்கணம், இலக்கியம், புராணபடனம், யாப்பு, அணி, நிகண்டு முதலிய பலவற்றையும் தொடர்ந்து கற்றுச் சிவசம்புப் புலவரின் நேரடி மாணவர்களாகவும், தொண்டர்களாகவும் பின்வருவோர் திகழ்ந்தனர் என்று அறிய முடிகின்றது.

கணபதிப்பிள்ளை (புலோலி)
குமாரசாமிப் புலவர் (புலோலி)
குமாரசாமி முதலியார் (வல்வெட்டி)
முருகேச பண்டிதர் (சுன்னாகம்)
வயித்திலிங்கம்பிள்ளை (வல்வை)
தில்லைநாத நாவலர் (புலோலி)
வேன்மயில் வாகனப் புலவர் (அச்சுவேலி)
முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் (தும்பளை)
நமச்சிவாயப் புலவர் (ஆவரங்கால்)
சின்னத்தம்பி உபாத்தியாயர் (உடுப்பிட்டி)
சுப்பிரமணிய சாஸ்திரிகள் (தும்பளை)
கனகசபாபதிக் குருக்கள் (கரணவாய்)
ஞானப்பிரகாசதேசிகர் (கரணவாய்)
திருஞானசம்பந்த தேசிகர் (கரணவாய்)
ஆறுமுகம்பிள்ளை (அல்வாய்)
சிதம்பரப்பிள்ளை (பொலிகண்டி)
வயித்திலிங்கச் செட்டியார் (மந்துவில்)
கார்த்திகேசு (கரவெட்டி)

இம்மாணவர் பரம்பரையினர் தமிழிலும் வடமொழியிலும் சிறந்த பாண்டித்தியம் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர் என்று கூறப்படுகின்றது. இம்மாணவர் பலர் சிவசம்புப் புலவருக்கு, உற்றுழி உதவியும், உறு பொருள் கொடுத்தும் கற்றவர்கள் என்று அறிய முடிகின்றது. சிவசம்புப் புலவர் தம்மாணவர்கள் சிலரின் வீட்டிற்கும் சென்று வருவது வழக்கமென்று கூறப்படுகின்றது. புலவரிடம் அழகான கூடார மாட்டு வண்டி ஒன்று இருந்ததாகவும் புலவர் இந்த மாட்டு வண்டியில் பருத்தித்துறை , கரணவாய், கரவெட்டி முதலிய இடங்களுக்குச் சென்று வருவதும், வண்டியில் இருந்தவாறே மாணவர்களுடன் உரையாடி மீளுவதும் வழக்கம் என்று அறிய முடிகின்றது. இம்மாணவர்களின் தமிழ்ப் பணி தனித்தனியே ஆராயப்பட வேண்டியது.

உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரிடம் புலோலியைச் சேர்ந்த பார்ப்பதி அம்மையார் என்ற பெண்மணியும் பாடங் கேட்டதாகத் தெரிய வருகின்றது.

"சகோதரியின் பெயர் பார்ப்பதி அம்மையார். பாறாச்சி என வழங்குவது வழக்கம். வான்மீகத்தைச் சமஸ்கிருதத்தில் வாசித்து விளக்கஞ் செய்யும் திறமை அந்த அம்மையாருக்கிருந்தது...... பார்ப்பதி அம்மையார் தொல் காப்பியம் முதலிய இலக்கணங்களைக் கதை சொல்வது போல் கற்பித்து விடுவார் என்று கேள்வி.

உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் அவர்கள் சமஸ்தான வித்துவான் போல் அக் குடும்பத்தில் ஒருவராய் அங்கே வசித்து

வந்தவர்கள். ஆகவே சமஸ்கிருதத்தோடு தமிழும் ஒருங்கு அக்குடும்பத்தில் தாண்டவ மாடிற்று''. ( புலோலியூர் சைவப்பெரியார் சு. சிவபாத சுந்தரனார் நூற்யாண்டு விழா மலர் 1978 ).

என்று பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். வடமராட்சிப் பகுதியின் கல்விப்போக்கின் ஆரோக்கியத்திற்குக் காரணகத்தாவாக அமைந்தவர்களுள் சிவசம்புப் புலவருக்கு மறுக்கமுடியாத இடமுண்டு.

பாரம்பரிய, மரபு வழிக் கல்வியில் நெறி பிறழாது ஈடுபட்ட மாணவர் பரம் பரையினரின் பரம்பரையினரே இலங்கை யின் அதி உயர்ந்த கல்வி நிறுவனமான பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் மூல வர்களாகக் கருதப்படுகின்றனர். இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி 1941 ஆம் ஆண்டு பல்கலைக் கழகமாக உயர்வு பெற்றது. 1943 இல் சுவாமி விபுலானந்தர் அதன் முதல் தமிழ்ப் பேராசிரியரானார்.

## விபுலாநந்தர்

மட்டுநகரைக் பிறப்பிடமாகக் கொண்ட சுவாமி விபுலானந்தரின் கல்விப் பணிக்குக் கால்கோளாக அமைந்தவர் உடுப் பிட்டிச் சிவசம்புப் புலவரின் மாணவரின் மாணவரேயெனலாம். சிவசம்புப் புலவரின் மாணவரான வேன்மயில்வாகனப் புலவரின் மாணவர் புலோலியூர் வயித்திலிங்க தேசிகரே சுவாமிகளின் ஆரம்ப காலத் தமிழாசிரியராவர்.

புலோலியைச் சேர்ந்த வைத்திலிங்க தேசிகர் மட்டக்களப்பு காரைதீவில் கோயிற் பூசகராக இருந்தவர். திருவாவடுதுறை ஆதீனத்தாரால் வித்துவான் பட்டம் அளிக் கப்பட்டவர். பாலைஅடி வாலவிக்கினேஸ் வரரூஞ்சல், மண்டூர்ப்பதிகம், மண்டூர் இரட்டை மணிமாலை முதலியவற்றைப் பாடியவர். தட்சிண கைலாச புராணம், கோணேசர் கல்வெட்டு முதலியவற்றைப் பதிப்பித்தவர். பிள்ளையார் புராணத்திற்கு உரையெழுதியவர். சிறந்த சைவாசார சீலராக வாழ்ந்தவர். இவரே சுவாமிகளின் ஆரம்பத் தமிழாசிரியராவார்.

யாழ்ப்பாணத்துப் புலோலியூரில் 1878 ஆம் ஆண்டளவிற் பிறந்த வைத்திலிங்கம் வேன்மயில் வாகனப் புலவரிடம் கல்வி பயின்றவர்... இவ்வறிஞருக்கு.. ... முத்தமிழ் முனிவராகப் பிற்காலத்தே விளங்கிய மயில் வாகனனாரை அகர எழுத்தோடு தமிழூட்டிச் சைவம் மணக்கும் தமிழ்க் குழந்தை யாக வளர்க்கும் பேற்றையும் தேசிகர் எய்துவாராயினார்... அக்காலத்துக்கற்ற பேரிலக்கிய இலக்கணக் கல்வியின் சிறப்பே மயில்வாகனனாரை மதுரைத் தமிழ்ச் சங்கத் திலிருந்து தோற்றிய ஈழத்தின் முதற் பண்டி தராகச் செய்தது எனலாம் என்று பண்டிதர் வி. சி. கந்தையா குறிப்பிடு கிறார். ( மட்டக்களப்புத் தமிழகம் பக் 241)

'' ... தமிழ் இலக்கண இலக்கியங் களைக் கற்பிப்பதற்குச் சுவாமிகளின் தந்தையார் ஏற்பாடு செய்து வைததார். இப்படி இவருக்கு இலக்கண இலக்கியங் களைக் கற்பித்தவர் பருத்தித்துறையைச் சேர்ந்தவரும் காரைதீவுப் பிள்ளையார் கோயிலுக்கும் பூசகராய் இருந்தவருமான வைத்திலிங்க தேசிகராவர் ,, .

( ச. அம்பிகைபாகன். அடிகளார் படிவ மலர் பக். 18–19 )

என்று ச. அம்பிகைபாகன் குறிப்பிடு வதும் மனங் கொள்ளத்தக்கது. இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்ப் பேரா சிரியராகப் பணிபுரிந்த சுவாமிகளின் தமிழ்க் கல்வியின் அத்திவாரமாக அமைந்தவர் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின் மாண வரின் மாணவரே என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

## க. கணபதிப்பிள்ளை

சுவாமிகளுக்குப் பின் இலங்கைப் பல் கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராப்ரியராக ஏறத்தாழப் பதினெட்டு ஆண்டுகள் பணி யாற்றியவர் பேராசிரியர் க. கணபதிப்

பிள்ளையாவர். இவர் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின் நேரடி மாணவர் தும்பளை முத்துக்குமாரசுவாமிக் குருக்களின் மாணவராவர்.

"ஆரிய மொழிகளைத் தவிரத் தமிழ் மொழியில் எவ்வளவு படித்திருக்கிறாய் என்பது அவருடைய முதற் கேள்வி. அதற்கு யான் யாழ்ப்பாணத்தில் எனது ஆசிரியரிடம் பஞ்ச இலக்கணமும் படித்திருக்கிறேன். அவற்றை யான் ஒரு சோதனைக்கும் குறித்துப் படிக்காததினால் ஒரு வேளை அவற்றில் நல்ல பயிற்சி இருக்காது. அன்றியும் என் தந்தையாரும் எனது தமிழ்ப் படிப்பிலேயே கவனமெடுத்து வந்ததினால் சிறு வயது தொடக்கம் தமிழையே பெரும் பாலும் பயின்று வந்திருக்கிறேன்... அவர் அதுதான் முறையான படிப்பு. நம் முன்னோரும் அப்படித்தான் படித்து வந்தனர் என்றார்" (தேசிகர் நினைவு, இளங்கதிர் 49 – 50 பக். 60)

பேராசிரியர் கணபதிப்பிள்ளை, 'யாழ்ப்பாணத்தில் எனது ஆசிரியர்' என்று குறிப்பிடுவது முத்துக்குமாரசுவாமி குருக்களையே. பேராசிரியர் தாமெழுதிய மாணிக்கமாலை என்னும் நூலைத் தனக்குக் கல்வி போதித்த முத்துக்குமாரசுவாமிக் குருக்களுக்கே சமர்ப்பணம் செய்கின்றார்.

"நத்தும் பருத்தித் துறைவாழ்
சிவச்சுடர் நான்மறையோன்
ஒத்தநல் ஆரியம் செந்தமிழ்
என்னை உணர வைத்தோன்
முத்துக்குமாரசுவாமி குருமணி
மெய்க்கழற் கீழ்
வைத்திப் பனுவலை மாணும்
அவனருள் வாழ்த்துவனே"

என்று பாடியுள்ளார்.

பாரம்பரியக் கல்விமரபில் குரு வணக்கம், கையுறை, காணிக்கை சமர்ப்பணம் என்பன முக்கியமானவை. பேராசிரியர் கணபதிப்பிள்ளைக்குப் பின் வந்த தமிழ்ப் பேராசிரியர்கள், ஆய்வறிஞர்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் இவ்விரு பேராசிரியர்களின் தாக்கத்திற்கும் வழிகாட்டலுக்கும் உட்பட்டவர்களேயெனலாம். பேராசிரியர் வி. செல்வநாயயம் அண்ணாமலையில் விபுலானந்தரிடம் கல்வி கற்றவர். பேராசிரியர் சு. வித்தியானந்தன் விபுலானந்த அடிகளிடமும், பேராசிரியர் கணபதிப்பிள்ளையிடமும் படித்தவர். பேராசிரியர்கள் கைலாசபதி கா. சிவத்தம்பி ஆ. வேலுப்பிள்ளை, அ. சண்முகதாஸ், சி. தில்லைநாதன், பொ. பூலோகசிங்கம் முதலியோர் பேராசிரியர் கணபதிப்பிள்ளையிடமும் பேராசிரியர் வித்தியானந்தனிடமும் கற்றவர்களே.

உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரின், கல்வி மரபு அறிவு, சிந்தனையோட்டம், போதனா முறையென்பன ஏதோ ஒரு வகையில் இன்று வரை அறாத் தொடர்ச்சியுடன் செல்கின்றன என்றே கொள்ள வேண்டும். காலதேச வர்த்தமானங்களுக்கு இயைவுபடத் தமிழ்க் கல்வி, தமிழாய்வு முதலியன ஆழ் தகன்று சென்றபோதும் அதன் ஊற்றுக்கால் பாரம் பரிய மரபு வழிக்கல்வியினூடே இருக்கிறது என்பதை அறிய உடிப்பிட்டிச்சிவசம்புப் புலவரின் ஆற்றலும், ஆளுமையும் ஆழமாக ஆராயப் பட வேண்டும் என்று அவாவுறுகிறோம்.

---

● மழை இல்லாத நேரத்தில் கையில் குடை வைத்திருப்பவனைக் கண்டு பைத்தியக்காரன் என்று கேலிசெய்யும் இந்த உலகம். ஆனால் திடீர் மழையொன்று வந்து விட்டால் அவனைத் தீர்க்கதரிசி என்று இதே உலகம் கொண்டாடும்.

— கோப்பாய் சிவம்

# இலங்கையை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன்

திருமதி சிவக்கொழுந்து சுப்பிரமணியம்

இலங்கையிலே கண்டிப் பகுதியை ஆண்ட கடைசித்தமிழ் மன்னன் பெயர் விக்கிரமராஜசிங்கன் என்பதாகும். இவனின் வரலாறு சற்று விசித்திரமானது. இலங்கையில் கண்டிப் பகுதியை ஆண்ட சிங்கள அரசன் நரேந்திரசிங்கனுக்கு மணம் முடிக்க அரச குடும்பத்தில் இணையான பெண்கள் இல்லாமையால் பட்டத்து இளவரசியைச் சூரியவம்சத்தைச் சேர்ந்த பிறதேசத்து அரச குடும்பத்திலிருந்து பெண் எடுப்பதாக முடிவு செய்து தூதுவர்களை மதுரைக்கு அனுப்பிவைத்தனர். 1709 ல் மதுரையை ஆண்ட சூரியவம்சத்து நாயக்க குடும்பத்துப் பெண்ணை நரேந்திரசிங்கன் மணம் முடித்தான்.

நரேந்திரசிங்கனுக்குப் பிள்ளைப்பேறு இல்லாமையால் மனைவியின் சகோதரனைத் தனக்குப் பின்பு அரசாளவென மதுரையில் இருந்து அழைத்து அரசனாக்கினான். அவனே முதல் முதல் கண்டியை ஆண்ட தமிழ் மன்னன் ஆனான். அவனின் பட்டப் பெயர் ஸ்ரீ விஜயராஜசிங்கன் என்பதாகும். அவனும் தன் பட்டத்து அரசியை இந்தியாவில் இருந்தே எடுத்து மணம் முடித்தான். அவனுக்கும் ஆண் வாரிசு இல்லை. அவன் இறந்தபின்பு அவனது தம்பி கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் அரசனானான். கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் கண்டியை அரசாண்ட காலத்தே புத்தசமயம் வலுவிழந்து இருந்தது. மீண்டும் புத்தசமயத்தைப் புத்துயிர் பெறவைக்கும் முயற்சியில் கீர்த்திஸ்ரீ தீவிரம் காட்டினான். தன தூதுவர்களை சயாம நாட்டுக்கு அனுப்பி அங்கிருந்து புத்தபிக்குகளை வரவழைத்து இங்குள்ளோரைப் புத்த பிக்குகள் ஆக்கினான். இப்படி இலங்கையில் தோன்றிய புத்தபிக்கு வெளிவத்தை சரணங்கரா என்பவராகும். தெய்வ விக்கிரகங்களை ஊர்வரம் செய்வது போல் ''புத்தரின் பல்லை,, ஊர்வலமாக எடுத்துச் சென்று வழிபடும் முறையைச் செய்வித்தான். இன்றுவரை ''பெரஹரா,, எனப்படும் விழாவுக்கு வித்திட்டவர்கள் கீர்த்தி ஸ்ரீயும் சரணங்கராவுமே ஆகும்.

கீர்த்திஸ்ரீக்கும் ஆண் வாரிசு இல்லை. அவருக்குப்பின் அவரது தம்பி ராஜ அதி ராஜசிங்கன் ஆட்சிக்கு வந்தான். இவனுக்கு வாரிசு கிடைக்கு முன்பே திடீரென இறந்து விட்டான். அப்போது அவனுக்கு மந்திரியாக இருந்தவன் பில்லமதல்லவாவு ஆகும். அவன் ராஜ அதிராஜசிங்கனின் மைத்துனனைப் பேருக்கு மன்னனாக்கி விட்டு அதிகாரங்களைத் தானே நடைமுறைப் படுத்த எண்ணினான். அப்போது அந்த இளவரசின் வயது 18 ஆகும். அவனது பட்டப் பெயர் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் என்பதாகும். விக்கிரமராஜசிங்கன் சிறந்த முறையில் ஆட்சி செய்யவே வெறுப்புற்ற மந்திரபில்லமதல்லவாவு கபடமாய்ச் செயல்பட முனைந்தான். பிரிட்டிசார் கண்டியைப் பிடிக்க முயன்று தோற்றுப்போன சமயம் அது. மன்னன் தமிழனாக இருந்தாலும் சில அதிகாரிகள் சிங்களவர்களும் இருந்தனர். மக்களைக் கொடுமைப்படுத்தும் வேலையில் மந்திரி இரகசியமாய்ச் செயல்பட்டான். இத்துடன் கண்டியைப் பிடிக்க முயன்ற பிரிட்டிசாரும் மந்திரபில்லமதல்லவாவுக்கும் உடன்பாடு உண்டு. கண்டி மன்னன் மீது பெரும் பழிகளை ஆங்கிலேயரும் மந்திரியும் சேர்ந்து சுமத்தினார்கள். மக்களைத் தம்வசப்படுத்தப் பலதிட்டம் தீட்டினர். மன்னன் ஒருநாள் தெல்தெனியாவுக்கு அருகே மெதமகநுவர என்னுமிடத்தில் தன் குடும்பத்துடன் ஓய்வெடுத்துக் கொண்டு இருந்த நேரத்தில அங்கே திடீரென வந்த

ஆங்கிலேயர் மன்னனையும் குடும்பத்தையும் சிறைப்படுத்தினர். இஃது 1815 மாசி 18ந் தேதி நிகழ்ந்தது. சிறைப்பட்ட மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் குடும்பம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டது.

கொழும்பு சிறையில் ஓராண்டு காலம் வைத்தார்கள். அப்போது மக்கள் ஆங்கிலேயருக்கு எதிராகத் தாங்கள் எதிர்ப்பைக் காட்டினார்கள். மன்னன் இங்கு இருக்கும் வரை மக்களின் எதிர்ப்பும் தொந்தரவும் இருக்கும் என்பதை உணர்ந்தவர்கள் மன்னனையும் குடும்பத்தையும் கப்பல்மூலம் தமிழ் நாட்டுக்கு அனுப்பினார்கள் ஆங்கில அரசு மன்னன் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனையும் குடும்பத்தையும் வேலூர்ச் சிறையில் வைத்தனர். அந்த மன்னன் சிறை வைக்கப்பட்ட இடம் இன்று காவல்துறை அதிகாரிகள் பயிற்சிப் பள்ளியாக இருக்கின்றது. சிறைப் பட்ட மன்னன் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் 1836 ம் ஆண்டு தை 30ந் தேதி காலமானான். ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனுக்குக் கண்ணுச்சாமி என்ற பெயரும் உண்டு.

வேலூர்ச்சிறையிலே 36 ஆண்டு காலத்தைக் கழித்த மன்னன் தனது 56 வது வயதில் காலமானான் அம்மன்னனின் கல்லறை வேலூரிலுள்ள பாலாற்றங் கரையிலே இன்றும் உள்ளதென கலைஞர் கருணாநிதி அவர்கள் 28-08-83 ல் ஓர் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார்.

கண்டியில் தமிழ் மன்னர்கள் ஆட்சியில் இருந்த சிங்கள மந்திரிகள் அரசு ஆணைகள் யாவற்றிலும் தமிழிலேயே கையொப்பமிட்டனர் என்பது தான் முக்கிய அம்சம். பலநாடுகளுக்கு அனுப்பப்படக் கடித ஓலைகள் தமிழிலேயே இருந்தன என்பதும் வரலாற்றுச் சான்றுகள். இதற்கான ஆதாரம் யாவும் கண்ட நூதனசாலையில் இன்றும் உள்ளன. மந்திரியாக இருந்த சிங்களவர்களும் ஆங்கிலேயர்களும் செய்த ஒப்பந்தங்களிலும் ஒப்பம் தமிழிலேயே இடப்பட்டன.

இலங்கையில் தமிழர்களுக்கு உரிமை இல்லை என்று சொல்வதில் அர்த்தமே இல்லை. தமிழ் மன்னர்கள் இலங்கையில் தமிழர் பகுதியை மட்டுமே ஆளவில்லை; அவர்கள் சிங்களவர்கள் பெரும் பான்மையாக வாழ்ந்த பகுதிகளையும் ஆண்டு வந்தார்கள். என்பது வரலாற்று உண்மை இலங்கையில் சிங்களவரைவிட தமிழர்கட்கே அதிக உரிமை உண்டு.

விக்கிரம ராஜசிங்கனின் கொள்ளுப் பேரன் கே. ஜி. எஸ். ராஜசிங்கன் என்பதாகும். இவர் பெங்களூரில் வசித்து வருகிறார். கனியவளங்கள் ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

---

- வாழ்க்கை என்பது ஒரு போராட்டம். மனிதன் போராடிக்கொண்டேதான் இருக்கு வேண்டும். நான் போர்புரிந்தே வாழ்வேன், போர்புரிந்தே மடிவேன்.

— சுவாமி விவேகானந்தர்


- போர்க் குணமில்லாமல் ஜீவிப்பது எப்படி? அகிம்சையின் பெயரால் மகாத்மாஜி என்ன செய்தார்? போராடினார்! அதுதானே அவரது சிறப்பு. அவர் இறுதிவரை போராடினார். போராட்டத்தின் வடிவங்கள்தான் வேறு வேறு,

— ஜெயகாந்தன் (எந்தையும் தாயும்)

- மனிதர்களின் திறமைகள் எங்கே சுதந்திரமாகப் பிரயோகம் செய்யப்படுகின்றனவோ அங்கேதான் அழகும், புத்துணர்வும், கலையும் முழுமையாகப் பிறக்கின்றன.

— அகஸ்தியர் (மண்ணில் தெரியுதொரு தோற்றம்)

## கட்டைவேலி, யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் — ஆசிரியர் குழு - 1993



இருப்பவர்கள் : ( இடமிருந்து வலம் )
திரு. பொன்னான்டோம்பால அந்தோனிப்பிள்ளை, திரு. க. கந்தையா, திரு. சி. சிவபாதசுந்தரம், திரு வீ. செல்வதுரை, திரு. வ. கணபதிப்பிள்ளை (அதிபர்), திரு. பாலசுப்பிரமணியம் (உதவி அதிபர்), திருமதி நா. ஜீவரத்தினம், திருமதி இரகுநாதன்.

நிற்பவர்கள் : (இடமிருந்து வலம்)
திருமதி. ச. மார்க்கண்டு, செல்வி. சு. ராஜகுமாரி, திருமதி யோ. ராஜகோபால், திரு. எஸ். அரியகுலதேவன், திரு. க. ஜெயானந்தம், திரு. பாலசுந்தரம், செல்வி த. பவானி செல்வி வ. இந்துமதி, திருமதி செ. ரட்ணராஜா

படத்தில் இல்லாதவர்கள் : திரு. எஸ். தம்பையா, திருமதி சி. இராமலிங்கம்

# தமிழர் பண்பாடும் சைவ மடங்களும் ஓர் அறிமுகம்

எம். வேதநாதன், எம். ஏ.
முதுநிலை விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

தமிழர் பண்பாடு வளம் பெறுவதற்கு சைவமடங்கள் கணிசமான பங்களிப்பை நல்கியுள்ளன. எமது பண்பாட்டு விழுமியங்களான சமயம், தத்துவம், கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்கும், தமிழர்களின் சமூக மேம்பாட்டிற்கும் சைவமடங்கள் தொன்று தொட்டுத் தொண்டாற்றி வருகின்றன. 'பண்படுதல்' என்ற வினைச்சொல் வழியாகத்தான் 'பண்பாடு' என்ற பதம் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வழக்கத்திற்கு வந்திருக்க வேண்டும். பண்படுதல் என்பதற்குத் திருந்துதல், செம்மைப்படுத்துதல், தகுதியாதல் எனப் பல பெயர்கள் இருக்கின்றன. தமிழர் பண்பாடு தமிழ் மக்களுக்கேயுரிய திருந்திய, செம்மையான மாண்பாடாகும். இத்தகு தமிழர் மாண்பை வளர்த்த பெருமைபெறும் நிறுவனங்களாகச் சைவத் திருமடங்கள் திகழ்கின்றன. அத்தகு சைவமடங்கள் பற்றியும், அம்மடங்களின் பன்முகப்பட்ட பண்பாட்டுப் பணிகளையும் பற்றிச் சுருக்கமாக இக்கட்டுரை ஆராய்கின்றது.

## 'மடம்' என்ற சொல்

'மடம்' என்ற சொல்லுக்கு முனிவர் வாழிடம் என்று பிங்கலம் என்ற நிகண்டு நூல் குறிக்கிறது. நைஷ்டிக பிரமசாரிகளும், சந்நியாசிகளுமான ஆசாரியர் வாழுமிடம் 'மடம்' என்ற பல்கலைக்கழகப் பேரகராதி பொருள் விரிக்கின்றது. அங்கு நைஷ்டிகப் பிரமசாரிகளாக உள்ளோர் ஆசாரியர்க்கும், பெற்றோர்களுக்கும் பணிவிடை செய்து கொண்டு மரணம் வரை பிரமசரியம் கொண்டிருப்பவர் என்றும் இது மேலும் விளக்கியுள்ளது. 'அமரம்' என்ற வடமொழி நூலில் 'மடம்' என்ற சொல்லுக்கு மாணவர் வசிக்கும் இடம் என்று பொருள் கூறப்பட்டிருக்கின்றது. பட்டோஜி தீட்சித ரின் குமாரராகிய தானோஜி தீட்சிதர் என்பார் இச்சொல்லுக்குப் பரிவிராசக சமணருடைய இடமென்றும், பௌத்த விகாரமென்றும் பொருள் கூறி இறுதியில் மாணவர் வசிக்கும் இடம் என்பதே சரியான பொருள் என்று முடிவு காண்கிறார். ஆதியில் மடம் என்பது துறவி ஒருவரின் குடில் என்றே பொருள்பட்டது. பின்னர் பல துறவிகளின் கூட்டத்தைக் குறிப்பதாயிற்று. சாகுந்தல நாடகத்தில் கண்ணுவ முனிவரின் ஆச்சிரமம் அத்தகையது. நாளடைவில் பல துறவிகள் ஒன்றாகச் சேர்ந்து வாழும் இடம் மடம் என்பதாக ஆயிற்று என்று தமிழ்க் கலைக்களஞ்சியம் இச்சொல்லுக்கு விளக்கம் தருகின்றது. மடமாவது பெரியோர்கள் இருந்து கொண்டு கல்வியறிவையும், ஒழுக்கத்தையும், சமயத்தையும் வளர்த்தற்குரிய இடம் என்கிறார் ஆறுமுக நாவலர்.

மடம் பற்றிய இக்கருத்துக்களைத் தொகுத்து நோக்கும்போது மடம் என்ற சொல் அறிவுநெறி நிற்கும் ஆசிரியர்களும், சீடர்களுமாகிய சான்றோர் இணைந்து கல்வி, ஒழுக்கம், சமயம் என்பவற்றை வளர்க்கும் இடம் என்று பொருள் படுவதனை அறிந்து கொள்ள முடிகின்றது. தமிழகத்து மடங்கள் இன்று ஆலயம் எனத்தக்க வகையில் 'மடாலயம்' என்று பெயர் பெற்று விளங்குகின்றமை குறிப்பிடற்பாலதாகும்.

## பண்டைய சைவத் திருமடங்கள்

இந்தியாவில் தொன்று தொட்டு நிலவி வரும் சைவத் திருமடங்கள் பதினைந்து என்று அறிஞர்கள் கருதுகின்றனர். அவை களாக கைலாசமடம், பௌண்ட்ரகமடம், வலாக்கமடம், கற்பகிராமமடம், பதரீ மடம், தேவதாருவனமடம், கந்தர்ப்பமடம், உத்தராரண்யகம், தக்ஷணாரண்யகம், கோவிதாரமடம், ஆமந்தகமடம், மத்த மடம், மாயூரமடம், ரணபத்திரமடம், சோழகமடம் என்பனவாகும். இந்தக் குறிப்பானது அகோர சிவாசாரிய பத்ததிமகோத்ஸவ விதிப்படலத்தில் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் சோழகம், மாயூரம், தக்ஷணாரண்யகம் ஆகிய மூன்றும் தென்நாட்டு மடங்கள் என்றும், ஏனையவை வடநாட்டில் நிலவியவை என்றும் அறியப்படுகின்றன. தென்னாட்டில் நிலவிய மடங்களுக்குச் சில நேரங்களில் வடநாட்டிலிருந்து மடபதிகள் வரவழைக்கப்பட்டனர் என்று முதலாம் இராஜராஜன் கல்வெட்டு ஒன்று அறிவிக்கின்றது.

## குப்தர்கால சைவமடங்கள்

குப்தர் காலத்தில் கோதாவிரியாற்றங் கரையில் மந்த்ரகலேஸ்வரர் என்ற இடத்தில் மந்த்ரகலேஸ்வரர் என்ற கோவிலைச் சுற்றி நான்கு சைவமடங்கள் இருந்தன. அந்நான்கு மடங்களிலும் ஆகமச் சைவர்கள் இருந்தார்களென அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே அம்மடங்களிலிருந்த ஆகம அறிவு நிரம்பிய சைவர்கள் வடஇந்தியாவில் சைவசித்தாந்த வளர்ச்சிக்குக் குப்தர் காலத்தில் பணியாற்றியுள்ளனர் எனலாம். சைவசித்தாந்த அடிப்படைச் சிந்தனைகள் சிவாகமங்களில் இருப்பது குறிப்பிடற்பாலதாகும்.

## திருமூலர் கால சைவத்திருமடங்கள்

திருமூலர் காலத்தில் சைவத்திருமடங்கள் தமிழகத்தில் நிலவியதற்கான சான்றுகள் உள்ளன. அவர் காலத்தில் ஏழுமடங்கள் இருந்தன என்றும், அவை ஒவ்வொன்றிலும் ஒரு குருநாதர் இருந்தார் என்றும் கூறப்படுகிறது. இவர்கள் முறையே மூலர், (திருமூலர்) காலாங்கர், அகோரர், மாளிகைத்தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகதேவர் என்போராகும். திருமூலர் மடத்துவழி வந்த சீடர்கள் மூலன் மரபினர் எனப்பட்டனர். அவர்கள் பல நூற்றாண்டுகள் தமிழ்நாட்டில் இருந்து வருகின்றனர். அவர்களுள் ஒருவரே கி.பி. 17ஆம் நூற்றாண்டினராகிய தாயுமானவ சுவாமிகளுக்குக் குருவாக விளங்கிய மௌனகுருவாவர்.

'மந்த்ர குருவே யோக தந்த்ர குருவே
மூலன் மரபில் வரு மௌன குருவே'

என்பது தாயுமானவர் தமது குருவைப் போற்றிய திருப்பாட்டாகும். திருச்சி மலை மீதுள்ள இந்த மௌன குருமடம் திருமூலர் மரபினது என அறிஞர் கருதுகின்றனர். இவ்வாறு தமிழ் முனிவர் திருமூலர் காலம் தொடக்கம் தவத்திரு தாயுமானவ சுவாமிகள் காலம் வரை தமிழர் பண்பாடு சைவ மடங்கள் மூலம் வளர்க்கப்பட்டு வந்ததை அறிந்து கொள்ள முடிகின்றது.

## கல்வெட்டுக்கள் கூறும் சைவமடங்கள்:

சங்ககாலம் தொடக்கம் சிவஞானபோத ஆசிரியரான மெய்கண்டதேவர் காலம் வரை தமிழ்நாட்டில் பல்வேறு கொள்கைகளை வளர்க்கும் மடங்கள் இருநூற்றுக்கும் மேற்பட்டனவாக இருந்ததாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இவை பற்றிய குறிப்புக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றனவேயன்றி அம்மடங்கள் தொடர்பான பிற செய்திகள் விபரமாகக் கிடைக்கவில்லை. இம்மடங்களை எவர் தோற்றுவித்தனர் என்பது பற்றியோ, அவையாற்றிய சமய, சமூகப்பணிகள் யாவை என்பது பற்றியோ திட்டவட்டமான குறிப்புக்கள் எவையும் இல்லை.

தேவாரமுதலிகள் பெயராலும், மணிவாசகர் பெயராலும், நூற்றிற்கு மேற்பட்ட சைவத்திருமடங்கள் இருந்தமை பற்றிக் கல்வெட்டுக்கள் குறித்துநிற்கின்றன. அவ்வகையில் சீர்காழி ஞானசம்பந்தர் திருமடம், ஆச்சாள்புரம்,பரசமய கோளரிமடம், சிதம்பரம், அம்பலநாயகர் பெருந்தெருவில் கோப்பெருஞ் சிங்கன் அமைத்த திருநாவுக்

கரசு நாயனார் பெருமடம், திருப்பாற்றுறை திருநாவுக்கரசு தேவன் மடம், திருப்புத்தூர் திருத்தொண்டத் தொகையான் திருமடம், திருவிடைவாயில் திருத்தொண்டத் தொகையான் திருத்தகை, திருவாசகன் மடம் போன்றவை கல்வெட்டுக்கள் கூறும் சில சைவத் திருமடங்களாகும். இத்தகைய சைவத்திருமடங்கள் மக்களுக்கு சமய-சமூகப் பணிகளைச் செய்வதன் மூலம் தமிழர் பண்பாட்டை வளம்படுத்தின எனலாம்.

இம் மடங்கள் சைவசமயாச்சாரியர்களால் தோற்றுவிக்கப்பட்டவை அல்ல. சைவநாயன்மார்களது பண்பாட்டுப்பணிகளை எதிர்காலத்தில் வாழ்வோரும் நன்கு அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக நாயன்மார்களது பணிகளால் கவரப்பட்ட சைவ அன்பர்களே இத்தகைய திருமடங்களை நாயன்மார்பேரில் ஏற்படுத்தி இருக்க வேண்டும். ஏதோ காரணத்தால் இத்திரு மடங்கள் நீண்டகாலம் நிலைத்திருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் கல்வெட்டுக்களில் பெருந்தொகையானவை மடங்கள் பற்றிய குறிப்புக்களை நோக்கும்போது தமிழர் பண்பாட்டை வளர்ப்பதற்கு மடங்கள் பெருமளவு தொண்டாற்றியுள்ளமை புலனாகின்றது.

## சோழர்கால மடங்களின் பணிகள்

சைவசமயம் பலவழிகளாலும் புகழ் பூத்து விளங்கிய காலம் சோழப் பேரரசு நிலவிய காலமாகும். சோழர்காலத்தில் தமிழர் பண்பாடும், சைவசமயமும் சிறந்த வளர்ச்சி பெற்று விளங்கியதற்கு அக்காலத்தில் ஏற்பட்ட மடங்களின் பணிகள் குறிப்பிடத்தக்கவை எனலாம். கி.பி 12 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சைவத்துறவிகளின் தலைமையில் பலமடங்கள் தோன்றின. அவை தமிழ்மக்களிடம் செல்வாக்கைப் பெற்று விளங்கின. சோழர்காலத்து மடங்கள் கல்விச்சாலைகளாகவும், அமுதளிக்கும் அன்னசத்திரங்களாகவும், அறநிலையங்களாகவும், அடியார்கள் உறைவிடங்களாகவும், மருத்துவச்சாலைகளாகவும் விளங்கி சமூகப் பணியாற்றின.

சோழ மகாராஜனான இராஜராஜனின் குருவான ஈசான சிவபண்டிதர் சித்தாந்த சாரம் என்ற நூலை இயற்றினார். இராஜேந்திர சோழமன்னனின் குரு சர்வசிவபண்டிதராவர். விக்கிரமசோழ மன்னனுடைய குரு சுவாமிதேவர் ஸ்ரீகண்டசிவன் என்பர். "இவரே சித்தாந்த ரத்நாகரம்" என்ற நூலை இயற்றியவர். திரிலோசன சிவாசாரியர் "சித்தாந்த சாராவளி" என்ற நூலை இயற்றினார். இக்குறிப்புக்கள் அரசர்களின் ஆதரவுடன் மடாதிபதிகள் சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஆற்றியபணிகளை அறிந்து கொள்ள உதவுகின்றன.

கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் விளங்கிய சைவ மடங்களாக திருச்சத்தி முற்றது முதலியார் சந்தானம், (திருஞான சம்பந்தன் மடம்), திருவிடை மருதூர் மாளிகை மடத்து முதலியார் சந்தானம் திருவானைக்கா செண்பைக்குடி முதலியார் சந்தானம் (ஆண்டார் - எம்பிரானார் திருமடம்) திருவாரூர் ஆசார மழகியான் திருமடம், திருப்புத்தூர் ஆசார மழகியான் திருமடம், மருதப்பெருமாள் சந்தானம் என்பனவற்றைக் குறிப்பிடலாம். சோழர் காலத்தில் சைவசமயம் பல வழிகளாலும் பெருவளர்ச்சி பெற்று விளங்கியதற்கு இம் மடங்களின் சமய, சமூகப் பணிகளும் பிரதான காரணங்களாகும்.

## ஆதீனங்களில் தமிழர் பண்பாடு:

தமிழகத்துத் திருமடங்கள் பொதுவாக "ஆதீனம்" என்ற சொல்லால் அழைக்கப்படுகின்றன. "ஆதீனம்" என்பது "அதினம்' என்ற சொல்லடியாகப் பிறந்ததாகும். 'அதினம் என்ற வட சொல்லிற்கு உரிமை. என்பது பொருளாகும். திருக்கைலாயத்தில் சிவபெருமான் உபதேசித்த சிவஞானோபதேசத்தை வழிவழியாக உரிமையோடு போற்றிப் பாதுகாத்து வருவதால் இவை சைவாதீனங்கள் என அழைக்கப்பெற்றன. சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி இந்தத் தொடருக்குச் சைவமடம் என்று பொருள் உரைக்கின்றது. "குகை" என்ற சொல் ஒன்றும் "மடம்" என்ற சொல் வழங்கும் பொருளில் வழங்கி வருகின்றது.

தொடக்கத்தில் ஞான உபதேசம் செய்தவர்கள் மலைக்குகைகளில் தங்கியிருந்து உபதேசித்தமையால் இச்சொல் இப்பொருளில் வழங்கியிருத்தல் கூடும்.

''தமிழர் தத்துவக் கொள்கை'' எனப்படும் சைவசித்தாந்தப் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஆதீனங்கள் அருந்தொண்டாற்றியுள்ளன. சந்தானாசாரியர் நால்வர்கட்குப் பின்பு மெய்கண்ட சந்தானமானது திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம் என்னும் இரண்டும் ஞானபீட ஆதீனங்களாய் வழிவழியாக விளங்கிச் சைவசித்தாந்தத்தை உபதேசவாயிலாகவும், நூல்கள், உரைநூல்கள் என்பவற்றின் மூலமாகவும் விளக்கி வருகின்றன. இவ்வாதீனங்களில் அவ்வப்போது ஞானபீடத்தில் வீற்றிருந்த குருமகாசந்நிதானங்களில் பலநூல்கள் அருளிச் செய்யப்பெற்றது 'பண்டார சாத்திரங்கள்' எனப் போற்றப் பெறுகின்றன. திருவாவடுதுறை ஆதீனத்தாபகர் ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள ஆவார்.

தருமபுர ஆதீனம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஸ்ரீ குருஞானசம்பந்தமூர்த்தி என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இவர் சிவபோக சாரம், முத்தி நிச்சயம், ஞானவரண விளக்கம் என்னும் நூல்களை அருளிச் செய்துள்ளார். அவற்றுள் பின்னிரண்டு நூல்களுக்கும் தருமையாதீன வெள்ளையம்பலவாண முனிவர் பாடியம் செய்துள்ளார். சிவபோக சாரத்திற்கு தருமையாதீனப் புலவர் சி. அருணைவடிவேல் முதலியார் உரை ஒன்று செய்துள்ளார். தருமையாதீனமானது தமிழர் பண்பாட்டு நிறுவனங்கள் எனப்படும் இந்துக்கோயில்கள் இருபத்தேழினை, நிர்வகித்து வருவதும் குறிப்பிடற்பாலதாகும். இவற்றைவிட மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், காஞ்சிகாமகோடி பீடம், அகோபில மடம், வானமாமலை ஜயர் மடம் முதலிய சமய ஸ்தாபனங்கள் தமிழர் பண்பாடும், மதமும் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஈழத்தில் நல்லூரில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் சைவப் பண்பாட்டைப் பரப்பும் சமயநிறுவனமாக இயங்கி வருவது குறிப்பிடற்பாலதாகும். சைவசித்தாந்த வகுப்புக்கள், புராண படனம் நால்வர் குருபூசை என்பன இங்கு நடைபெற்று வருகின்றன. இவ்வாறே யாழ்ப்பாணத்தின் தொன்மைமிகு ஆதீனமாக வரணி ஆதீனம் விளங்கிற்று. ஆனால் அது தற்போது செயலிழந்து காணப்படுகின்றது. தமிழகத்திலுள்ள வேதாரணி மடத்திற்கும் இவ்வாதீனத்திற்கும் தொடர்பிருந்தமை குறிப்பிடற்பாலதாகும்.

## கோயில்களும் மடங்களும் ஆதீனங்களும்

தமிழர் பண்பாட்டை வளர்த்த நிறுவனங்களாக கோயில்கள் விளங்குகின்றன. கோயில்கள் அவ்வாறு விளங்குவதற்கு அக்கோயில்களை அடுத்துள்ள மடங்களினதும் ஆதீனங்களதும் சமய – சமூகப் பணிகளே பிரதான காரணங்களாகக் காணப்பட்டன.

ஏறத்தாழ பத்தாம் நூற்றாண்டிலிருந்து கோவிலை அடுத்து மடங்கள் ஏற்பட்டு வந்தன. இம்மடங்கள் சமுதாயத்தில் மிக்க செல்வாக்கைப் பெற்றன. பெரும்பாலான இடங்களில் கோயில் ஆட்சியை மடங்களே கவனித்து வந்தன. நிருபதுங்கவர்மனின் 25 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று காவிரிப்பாக்கத்து வரதராசப்பெருமாள் கோவிலுக்கு ஏற்படுத்தப்பட்டதொரு நிபந்தம் அவ்வூர் மடத்துச் சத்தப்பெருமக்கள் கண்காணிப்பில் இருக்க வேண்டுமென்று கூறுகின்றது. (சத்தம்-நூல்) இக்குறிப்பானது திருக்கோயில்களின் பராமரிப்பு திருமடங்களின் பணிகளுள் ஒன்றாக இருந்து வந்ததைக் குறித்து நிற்கின்றது. பல்லவர் காலத்திலும் கோயில்கள் அமிர்தகணத்தார் அல்லது மடத்துப் பெருமக்கள் அல்லது ஊரவையார் ஆட்சியில் செவ்வனே பாதுகாக்கப்பட்டன என்ற செய்தியும் இதனை வலியுறுத்தும்.

மடங்கள் கோயிலைச் சார்ந்திருந்தன. அக்கோயில் மடங்களில் சமயக்கல்வி, பொதுக்கல்வி, ஒழுக்கக்கல்வி என்பன புகட்டப்பட்டன. தலயாத்திரை செய்யும் அடியவர்களுக்கும், துறவிகளுக்கும் உணவும், உறையுளும் கொடுக்கும் அறச்சாலைகளாக அவை விளங்கின.

'அற்றார் அழிபசி தீர்த்தல்' தமிழர் பண்பாட்டின் தனித்துவமாகும். இதனை நன்கு உணர்ந்தமையாற்றான் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் பஞ்சத்தால் மக்கள் பட்ட துயரத்தைக் கண்டு மனம் வருந்தி தனித்தனியே மடம் அமைத்து இறைவன் கொடுத்த பொற்காசை மாற்றி உணவுப்பொருள் வாங்கி வருந்திவந்தோர் அரும்பசி தீர்க்கும் அன்னதானப்பணி செய்தார்கள் என்ற செய்தியைப் பெரியபுராண வாயிலாக அறிகின்றோம். இந்நாயன்மார்கள் இறையின்பத்தில் ஈடுபட்ட அதே நேரத்தில் மக்கள் துயர்துடைக்கும் பணியிலும் முழுமையாக ஈடுபட்டமை அவர்கள் சமூக சேவையாளர்களாகவும் விளங்கினார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

தமிழ் நாட்டில் தோன்றிய மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ், கந்தர் கலி வெண்பா, நீதிநெறி விளக்கம் முதலியவற்றை இயற்றிய குமரகுருபர சுவாமிகள் காசித் திருத்தலத்திற்குச் சென்று வழிபாடு புரிந்த பின்னர் காசிப்பெருநகரில் திருமடம் ஒன்றை நிறுவினார். குமரகுருபர சுவாமிகள் பெயரால் விளங்கிய மடத்தையே பெயர் திரிந்து குருபரர் திருமடம் என்றும் குமாரசுவாமி மடம் என்றும் இன்று வழங்கி வருகின்றனர். அத்திருமடமானது கேதார கட்டடத்தின் அருகே அமைந்த திருக்கேதாரநாதன் திருக்கோயிலின் அருகே இன்றும் விளங்குகின்றது. அக்கோயிலை இம்மடமே இன்னும் நிர்வகித்து வருகின்றது. இம்மடத்தில் உச்சிவேளையில் ஏழை எளியவர்களுக்கு உணவளிக்கும் தொண்டு இன்றும் நடைபெற்று வருகின்றது. மேலும் அத் திருமடத்தில் மார்கழி மாதம் முப்பது நாட்களிலும், மாசி மாதம் முப்பது நாட்களிலும் ஆயிரக்கணக்கான அடியார்களுக்கும் ஏழைகளுக்கும் விசேடமாக அன்னதானம் வழங்கி வருகின்றார்கள். அம்மடத்தில் பல திருவிழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

காசித்தலத்தை வழிபடச் செல்கின்றவர்கள் இத் திருமடத்திலும் தங்கியிருந்து மகிழ்ந்து வருவது குறிப்பிடற் பாலதாகும். இவ்வாறு தமிழர் பண்பாட்டுச் சின்னமாக வடநாட்டில் இம்மடம் விளங்குவது குறிப்பிடற்பாலதாகும்.

ஈழத்திலும் சைவ ஆலயங்களை அண்டி பல மடங்கள் காணப்படுகின்றன. அம் மடங்களில் குறிப்பாக திருவிழாக் காலங்களில் பெருமளவில் அன்னதானப் பணி நடைபெற்று வருவது குறிப்பிடற்பாலதாகும் இவ்வகையில் செல்வச்சந்நிதி ஆலயத்தை அண்டியுள்ள மடங்களையும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய அமுதசுரபி அன்னதான மடத்தையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

கோயிலை அண்டியிருந்த மடங்கள் கல்விப்பணி, அன்னதானப்பணி ஆகிய பணிகளோடு கலைப் பணிகளையும் செய்து வந்தமை குறிப்பிடற்பாலதாகும். பல்லவர் காலத்தில் தமிழர் பண்பாட்டின் கலை மரபுகளை வளர்க்கப் பல்வேறு சைவ மடங்கள் இருந்தன.

இசைக்கலை, நடனக்கலை என்பனவற்றை வளர்க்க பாடகிகள், நடன மாதர், வாத்தியக்காரர் என்போர் மடங்களில் பணியாற்றினர். கலை வளர்க்கும் மடங்களாக காபாலிகர் மடம், பரசுபத மடம், காளாமுகமடம் என்பனவும் விளங்கின. இம்மடங்களில் சைவக் கல்வியோடு இசை, நடனம் நாடகம், ஓவியம் முதலிய கலைகளும் கற்பிக்கப்பட்டு வந்தன,

பண்ணிசையானது தமிழர் பண்பாட்டில் மலர்ந்ததாகும். இப்பண்ணிசை மரபினை மறையாது பாதுகாத்து வருபவை சைவ மடங்களும், ஆதீனங்களுமே எனலாம். இன்றும் தருமபுர ஆதீனத்தில் பண்ணிசைப் பயிற்சி நடைபெற்று வருகின்றது. இப்பயிற்சியைப் பெற்றவர்கள் ஆலயங்களில் ஓதுவார்களாக இருந்து தமிழ்ப் பண்பாட்டை வளர்த்து வருகின்றனர்.

பண்டைய கோயிற் திருமடங்கள் பல்வேறு சமய சமூகப் பணிகளை இயற்றிடும் பெரிய சமூக நிலையங்களாகத் திகழ்ந்தன. மடத்தில் வேலை செய்ய சூல முத்திரை இடம்பெற்ற ஆண்களும் பெண்களும் இருந்

தனர். மடத்திற்கு 36 பேர் ஒரே சமயத்தில் மட அடிமைகளாக விற்கப்பட்டனர் என்றெல்லாம் வரும் கல்வெட்டுத் தொடர்கள் மடங்களில் பல வகை வேலைகளைக் கவனிக்க எண்ணற்ற அடியவர்கள் தேவையாக இருந்தனர் என்பதை உணர்த்துகின்றன.

நோயாளிகளுக்கு மருந்து கொடுக்கும் வைத்திய நிலையங்களாகவும் கோயிலை அண்டிய மடங்கள் விளங்கின. சேரநாட்டு மடம் ஒன்று விலங்குகளுக்குக் கூட மருந்து அளித்தது? திருப்பதிகம் ஓதுவாரைத் தயாரித்தலும் இம்மடத்தின் பிரதான கொள்கையாக விளங்கிற்று.

குருடர், செவிடர் போன்ற அங்கவீனர்களுக்கு உதவுவதும் ஆதரவற்ற அனாதைகளுக்கு உதவுவதும் ஆலய மடங்களின் அடிப்படைக் கொள்கையாக விளங்கிற்று. ''அம்மணி அம்பாள்'' என்னும் பெண் துறவியால் திருவண்ணாமலையார் கோவிலில் ஒரு மடம் காணப்படுகின்றது.

திருவாவடுதுறை ஆதீனம் பல இந்துக் கோயில்களின் ஆட்சியைக் கவனிப்பதுடன் பொதுக்கல்வி, சமயக்கல்வி என்பனவற்றையும் வளர்த்து வருகின்றது. இவ்வாறே கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஸ்ரீ குருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப் பெற்ற தருருமையாதீனத்தின் சைவம் வளர்க்கும் மாண்பினையும், அங்கே எழுந்தருளியிருந்த குருமூர்த்திகளின் சீலத்தையும் உணர்ந்த அக்கால ஆட்சியாளர்களும், பிறரும் பல திருக்கோயில்களை தருமையாதீனத்தின்பால் ஒப்புவித்தனர். சைவசித்தாந்த சாத்திர நெறி வளர்க்கும் தருமபுர ஆதீனம் 'மால்அற நேயமும், மலந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே' எனற சாத்திர வாக்குக்கு ஏற்பத் திருக்கோயில்களின் பராமரிப்பையும் மகிழ்வோடு ஏற்றுச் செயற்பட்டு வருகின்றது. தருமையாதீனத்தின் பராமரிப்பில் உள்ள 27 திருக்கோயில்களில் பல எப்போது, யாரால் இவ்வாதீனத்தினரால் ஒப்புவிக்கப் பெற்றன எனத் திட்டவட்டமாகக் கூறமுடியாது இருந்த போதிலும் கி. பி 17 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திற்கு முன்பாக அதாவது இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னரே பல திருக்கோயில்கள் தருமையாதீனப் பராமரிப்பின் கீழ் வந்துவிட்டன என்பதற்கு ஆவணச் சான்றுகள் பல உள்ளன.

இன்று தமிழகத்தில் தருமையாதீனத் திருக்கோயில்கள் என்றாலே, யாவருக்கும் அக் கோயில்களின் தூய்மையும் பராமரிப்புத்திறனும், ஆகம நெறிமுறை தவறாத பூசை முறைகளுமே நினைவுக்கு வரும். தமிழ் நாட்டில் பல பெரிய கோயில்களின் தூய்மையான நிர்வாகத்திற்கு வழிகாட்டியாக தருமையாதீனத் திருக்கோயில்கள் விளங்குகின்றன. தருமையாதீனத்தின் பராமரிப்பில் உள்ள 27 திருக்கோயில்களில் 17 திருக்கோயில்கள் தேவாரப் பாடல் பெற்றவை. ஆறு திருக்கோயில்கள் பாடல் பெறாதன, மூன்று திருக்கோயில்களில் ஒவ்வோர் கட்டளை மட்டும் தருமையாதீனத்தின் கீழ் உள்ளன.

அட்டவீரட்டத் தலங்களுள் திருக்கடவூரும், திருப்பறியலூரும், திருக்குறுக்கையும் தருமையாதீனத்தின் பராமரிப்பில் உள்ளன. சடாயு, முருகப்பெருமான், சூரியன் முதலியோர் வழிபட்ட புள்ளிருக்குவேளூர் என்ற பழம் பெயர் கொண்டிலங்கும் வைத்தீஸ்வரன் கோயிலும், திருஞானசம்பந்தர் திருமுலைப்பால் உண்டு சிவஞானம் பெற்ற சீகாழித் திருக்கோயிலும், அவர் சிவசோதியில் கலந்த ஆச்சாள்புரத்திருக்கோயிலும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றோடு தொடர்புடையதும், சப்தவிடங்கத் தலங்களில் ஒன்றுமாகிய திருக்கோளிலி என்னும் திருக்குவளையும், தென்கயிலாயம் என்ற சிறப்புப் பெற்றதும் திருநாவுக்கரசு நாயனார் கயிலாயக் காட்சி கண்டு மகிழ்ந்ததுமாகிய திருவையாறும், இரணியனைக் கொன்ற இரத்த வெறியால் சுழன்ற திருமாலைப் பிளந்து உலகைக் காத்த சாபமூர்த்தி வடிவாய் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருபுவனமும் இவை போன்ற சிறப்புக்கள் பல உடைய பிற தலங்களும் தருமையாதீனத்தின் அருளாட்சியில் நாளும் நாளும் தழைத்து வருகின்றன.

இவ்வாதீனத் திருக்கோயில்களில் முறையான வேதசிவாகமப் பயிற்சி பெற்ற சிவாசாரியர்கள் பூசை புரிந்து வருகின்றனர். தேவாரத் திருமுறைகளில் முறையான பயிற்சி பெற்ற ஓதுவார்மூர்த்திகள் இவ்வாதீனக் கோயில்களில் நியமிக்கப்பெற்றுள்ளனர். வழிபாட்டு வேளைகளில் தமிழ் மறையாகிய திருமுறைகளை ஓதி வழிபாடாற்றும் முறை ஆதீனக்கோயில்களில் நிலவிவருகின்றது. தமிழில் அர்ச்சனை செய்யப்படுதலும் வழக்கில் உள்ளது. ஆதீனத் திருக்கோயில்களுக்கு தலபுராணங்கள் இயற்றுவிக்கப்பெற்றுள்ளன.

தருமையாதீனத்துப் பசுமடமானது அவ்வாதீனக் கோயில்களில் நடைபெறும் அபிஷேகப்பாலைப் பாதுகாத்து ஏழை மக்களுக்கு வழங்கிவருகின்றது.

இவ்வாறு தருமையாதீனமானது தன் அருளாட்சிக்குட்பட்ட கோயில்களின் மூலமாக தமிழ்பண்பாட்டை வளர்த்து வருகின்றது.

சைவக்கோயில்களில் 'குகைகள்' என்ற பெயரிலும் மடங்கள் காணப்பட்டன. மூன்றாம் குலோத்துங்கன் காலம் முதல் பல சைவக்கோயில்களில் குகைகள் என்னும் ஒருவகை மடங்கள் இருந்தன என்பது கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றது. அவற்றுள் திருத்துறைப் பூண்டி குகை, சீகாழி திருமுறைத் தேவாரச்செல்வன் குகை, திருவிடைவாய் திருத்தொண்டத் தொகையான் குகை, திருப்புகலூர் குகை திருமணஞ்சேரி ஆலாலசுந்தரன் குகை, முணியூர் திருஞானசம்பந்தன் குகை, சிதம்பரம் குகை, சதுர்வேதிமங்கலம் திருஞானசம்பந்தன் குகை என்பன குறிப்பிடத்தக்கவை. நாயன்மார் பெயரில் இக்குகைகள் அமைந்து விளங்கியமை எமது பண்பாட்டைப் புலப்படுத்தி நிற்கின்றது.

இக்குகைகள் பெரும்பாலும் சிவன் கோயில்களுக்குள்ளே கட்டப்பட்டவையாகவும் பாதுகாப்பு மிக்கவையாகவும் விளங்கின. இக்குகைகள் திருமுறைகளில் வல்ல சைவத்துறவிகளைத் தலைவர்களாகக் கொண்டு திகழ்ந்தன.

திருச்சிற்றம்பலமுடைய முதலியார், தவசி தம்பிரான்தோழர், புகலிவேந்தர், இருதயதேவர் என்ற பெயர்களைக் கொண்ட துறவிகள் சில குகைகட்குத் தலைவர்களாக இருந்தார்கள். சீகாழியில் இருந்த குகையில் முதலியார் – திருவையாறுடையார் என்பவர் இருந்தார். அவருடைய சீடர்கள் திருமுறைகளைப் பண்ணுடன் பாடுவதில் சமர்த்தர். அவர்கள் திருவிடைவாய்க் கோயிற் குகையில் திருமுறைகளை ஓதினார்கள். சில குகைகளில் தவசிகள், ஆண்டார்கள், யாத்திரிகர் என்பவர் உண்பிக்கப்பட்டனர். மூன்றாம் குலோத்துங்கன் 22 ஆம் ஆட்சியாண்டில் (சுமார் கி.பி. 1200 இல்) 'குகையிடி கலகம்' தோன்றியது அக்கலகம் எதற்காக யாரால் ஏற்பட்டது என்பதோ, அக்கலகமானது திருத்துறைப் பூண்டியில் மட்டும் நடந்ததா அல்லது நாடு முழுவதும் நடந்ததா என்பதே தெரியவில்லை. ஆனால் மூன்றாம் குலோத்துங்க மன்னனின் காலத்திற்குப் பிற்பட்ட காலத்திற்றான் குகைகள் அதிகமாக இருந்தன என்பதைக் கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன. இக்குகைகளும் பொதுக்கல்வியையும், சமயக்கல்வியையும் வளர்க்கப்பட்டதுடன், கோயிலுக்கு ஓதுவாரை பயிற்றுவிப்பதற்கும் உறுதுணைபுரிந்தன.

இவ்வாறு தமிழர் பண்பாட்டுக் கோலங்களை வளர்க்கும் நிறுவனங்களாகவும், சமூகசேவை நிலையங்களாகவும் கோயில் மடங்களும், ஆதீனங்களும், குகைகளும் விளங்கின எனலாம்.

### வீரசைவமடங்கள்

பஞ்சபூதத் தலங்களில் திருவண்ணாமலை தேயுத்தலம் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. திருவண்ணாமலையிற்றான் ஞானமடங்கள் பிறந்தன என்பர். அங்கு அநேக மடங்கள் உள்ளன. திருவண்ணாமலையில் உயர்ஞானமடம் தாபித்தவர் அருள் திரு ஆதி சிவப்பிரகாசசுவாமிகளாவர். இவர் துறையூரில் (திருச்சிமாவட்டம்) பெரிய வீரசைவமடம் ஒன்றை நிறுவினர். சிதம்பரத்தில் வடக்குமாடி வீதிக்கு வடபால் சிறிது தூரத்தில் தில்லைக்காளி அம்மன் கோயிலுக்குச் செல்லும் வழியில் குகைமடம் உள்ளது. இக்குகை மடம்

வீரசைவக் கொள்கையுடைய குருநமச்சி வாயரால் ஏற்படுத்தப் பட்டதாகும். இவர் தம்குருவான குகைநமச்சிவாய மூர்த்தி களின் கட்டளைப்படி நடராசப்பெருமான் ஆலயத்திருப்பணி புரியும் நிமித்தம் வந்து தங்கியிருப்பதற்கு அமைத்த இடமே 'சிதம்பரம்' குகைமடம் எனப் பெயர் பெற்றது. இது சுமார் 700 ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாகத் திருச்சிராப்பள்ளி மாவட்டம் உடையார் பாளையம் வட்டம் இளங்கம்பூர் கிராமத்திலுள்ள ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. '(ஞானசம்பந்தம், 10. 12. 1975, பக். 25 – 26)

வீரசைவமடத்தினர் சமணரைச் சைவ ராக்கவும், சைவர்களுக்குத் திட்டமான கல்விக் கொள்கையினை உருவாக்கவும், சைவசமயத்தவர்கள் ஒரு துறையில் வாழவும் பாடுபட்டது.

## சிதம்பரத்தில் ஈழத்தவர்களின் மடங்கள்

யாழ்ப்பாணத்தில் உள்ள சைவப் பெரு மக்கள் சிதம்பரம் சிவகாமி அம்பாள் சமேத நடராசப் பெருமானுக்கு நிலங்களையும், கட்டிடங்களையும் தருமசாதனம் செய்தி ருக்கின்றார்கள். அவர்கள் அங்கு சைவ மடங்களையும் அமைத்து தமிழ் பண் பாட்டை பரப்பியுள்ளனர்' சிவஞானசித்தி யார் சுபக்கவுரை எழுதிய யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஞானப்பிரகாசர் (சுமார் கி.பி. (1550–1610) சிதம்பரத்தில் 'ஞானப் பிரகாசர் மடம்' ஒன்றை அமைத்தமை குறிப்பிடற்பாலதாகும். மேலும் ஈழத்தவர் கள் சிதம்பரத்தில் மானாமுதலிமடம், சிவபுரிமடம், புண்ணியநாச்சிமடம் முதலிய மடங்களை யாத்திரீகர்களின் பொருட்டுக் கட்டிவைத்திருகின்றார்கள். அம்மடங்கள் இப்பொழுது நன்றாகப் பரிபாலிக்கப் படுவ தில்லை என்று அறியமுடிகின்றது.

## வேதாந்த மடங்கள்

அத்வைதம் போதித்த ஆதிசங்கரின் அரிச் சுவட்டில் நின்று வேதாந்தமடங்கள் தோற்றம் பெற்றன. தமிழர் பண்பாட்டை சைவமடங்கள் வளர்த்தமை போன்று வேதாந்த மடங்களும் வளம்படுத்தி வருகின்றன எனலாம். தமிழகத்தில் சமண, பௌத்த, சைவ, வைணவ மடங்கள் தோற்றம் பெற்ற சமூக நோக்கங்களின் அடிப்படையிலேயே வேதாந்த மடங்களும் உருவாக்கப் பெற்றன எனலாம். ஆன்மீக பண்பாட்டு வரலாற்றில் இத்திருமடங் களின் பங்களிப்புக்களும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

ஆதிசங்கரர் வைதிகமத்தைப் புனருத் தாரணம் செய்து காஞ்சி காமாட்சியின் சந்நிதானத்தில் மடம் ஒன்றை நிறுவினார். அந்தமடம் வேதாந்த கொள்கைகளைப் பரப்பியது. காஞ்சிகாமகோடி பீடத்தின் 68 வது ஆசார்யரான ஸ்ரீமத்சந்த்ரசேக ரேந்தர் ஸரஸ்வதிகள் அவதரித்த விழுப் புரத்திலுள்ள அவர் பிறந்தவீடு இன்று வேதபாராயணப் பயிற்ச்சிக்கும், 'தர்மகாரி யங்களுக்கும் உபயோகமாகும். பெரிய மடமாகக் கட்டப்பட்டிருக்கின்றது.

சென்னையில் நிறுவப்பட்ட ஸ்ரீ இராம கிருஷ்ணமடம் (1897), சென்னை ஸ்ரீ சாரதாமடம் (1965), சாரதா சமிதி என்பன வேதாந்த தத்துவக் கொள்கை களைப் பரப்புவதுடன் சமுதாயப் பணிக ளையும் நன்கு செய்து வருகின்றன. சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினர்க்கும் ஏற்றத்தாழ்வு எதுவும் இன்றி கல்வி, மருத் துவம் மற்றும் எல்லாவிதமான சமூகத் தொண்டுகளைச் செய்வதே இம்மடங்களின் அடிப்படைக் கொள்கையாக இருந்தது. இலங்கையில் கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் இராம கிருஷ்ண மடங்கள் காணப்படுகின்றன. பருத்தித்துறையில் ஸ்ரீ சாரதாமடம் ஒன்று காணப்படுகின்றது. இம்மடங்களும் வேதாந்த தத்துவக்கொள்கைகளைப் பரப்புவதுடன் சமூகப்பணிகளையும் செய்து வருகின்றமை குறிப்பிடற்பாலதாகும்.

யாழ்ப்பாணத்தில் கந்தர்மடம் குமார சுவாமி வீதியில் ஒரு வேதாந்தமடம் இருக்கின்றது. அதில் மகாதேவசுவாமிகள் போன்ற வேதாந்திகளின் சமாதிக் கோயில்கள் காணப்படுகின்றன. இந்தமடத்தில் நடைபெறும் குருபூசை தினங்களில் அன்ன தானம் நடைபெறுகின்றது. சமயசம்பந்த மான கருத்தரங்குகள் ஒவ்வொரு பூரணை தினங்களிலும் நடைபெறுகின்றன. இவ் வேதாந்தமடத்தில் சைவசித்தாந்த விரிவுரைகள், திருமந்திர முற்றோதல் என்பனவும் தற்போது நிகழ்த்தப்படுகின்றன.

ஒட்டு மொத்தமாக நோக்கும்போது தமிழர் பண்பாடு பட்டொளி வீசுவதற்கு இந்துசமய மடங்கள் பொதுவாக தொன்று தொட்டு தொண்டாற்றி வருகின்றபோதும் சிறப்பாகச் சைவமடங்களின் சமய சமூகப் பணிகளின் மூலமே தமிழர் பண்பாடு மேன் மேலும் மேம்பாடடைந்துள்ளதெனலாம்.


உசாத்துணை நூல்கள்!

1. இராசமாணிக்கனார், மா., சைவசமயவளர்ச்சி, பாரிநிலையம், சென்னை. 1972.
2. செல்வக்கணபதி இரா., தமிழ் வளர்க்கும் தருமபுரம், தருமையாதீனம், தருமபுரம், 1981.


---

# செல்வம்

❋ செல்வமுள்ள இடத்தில் சோகம் சேர்ந்திருக்கும்

— இந்தியா

❋ வறுமை மனிதர்களை உண்டாக்கும்; செழிப்பு அரக்கர்களை உண்டாக்கும்

— பிரான்ஸ்

❋ செல்வம் மூடுபனி போன்றது; திமிடத்தில் சிதறிப்போம்

— ஆபிரிக்கா

❋ செல்வர்களின் இன்பங்கள் ஏழைகளின் கண்ணீரை விலையாகக் கொடுத்து வாங்கப் பெறுகின்றன.

— இங்கிலாந்து

❋ செல்வர்களும் ஒரேவாயால் தான் உண்ணமுடியும்

— ஜேர்மனி

# நமது தாய்மொழி தமிழ்

சி. வானதி
எக்கட்டியான்
கரவட்டி கிழக்கு, கரவெட்டி.

இன்று உலகில் நாலாயிரத்திற்கு மேற்பட்ட மொழி உண்டு. இவற்றுள் பண்டைய பெருமையும், இலக்கண இலக்கிய வளமும் உயர்தனிச் சிறப்பும் கொண்டு விளங்குபவை ஒரு சில மொழிகளே. அவற்றுள்ளும் தலைசிறந்ததாக திகழ்ந்து கொண்டிருப்பது நமது தாய் மொழியாம் தமிழே. தமிழ் என்றால் அமிழ்து என்பதே பொருள். தமிழ், தமிழ் என அடுத்தடுத்து தொடர்ந்து சொன்னால் அமிழ்து என ஒலிக்கும். வேறு எந்த மொழிக்கும் இராத பொருளிலக்கணத்தை தெளிவாக எடுத்துரைக்கும் தொல்காப்பியம் என்னும் தன்னிகரற்ற தண்டமிழ் நூலைத் தன்னகத்தே கொண்டு இளங்கிக் கொண்டிருப்பது நமது தாய் மொழியாம் தமிழே.

பேராசிரியர் P. சுந்தரம்பிள்ளை அவர்கள் தமது மனோன்மணியம் என்னும் புகழ் பெற்ற நாடக நூலின் பாயிரத்தில் நமது தாய்மொழியாம் தமிழை தெய்வமாக மதித்து பின்வரும் பாடல்களில் போற்றி வணங்குகிறார்.

### தமிழ்த் தெய்வ வணக்கம்

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும் சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில் தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந் திலகமுமே தெக்கணமும் அதிற்சிறந்த திரவிட நல் திருநாடும் அத்திலக வாசனை போல் அணைத்துலகும் இன்பமுற எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினு மோர் எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பது போல் கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமுந்துளுவும் உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும் ஆரியம் போல் உலக வழக் கழிந்தொழிந்து சிதையா உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே.

உலகின் பல மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டு உலகெங்கும் போற்றப்படும் நூல்களிலே திருவள்ளுவரின் திருக்குறளும் ஒன்றாகும். திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்பை படித்த மகாத்மா காந்தி அதன் அருமை பெருமையை உணர்ந்தமையால் அந்நூலின் மூலமொழியாகிய தமிழிலேயே படித்து உட்பொருளை யுணர்ந்து தெளிந்திடத் தாம் தமிழனாகப் பிறக்க விரும்புவதாகக் கூறியுள்ளார்.

வைத்திய கலாநிதி, தத்துவ கலாநிதி இலக்கிய கலாநிதி, சங்கீத கலாநிதி, சமய கலாநிதி ஆகிய ஐந்து கலாநிதி பட்டங்களைப் பெற்ற டாக்டர் சுவெற்சர் என்னும் ஜெர்மனிய நாட்டுப் பேரறிஞர், தாம் தென்னாபிரிக்கா சென்று அங்குள்ள அவதியுறும் பூர்வீக குடிமக்களுக்குத் தன்னலமற்ற தொண்டாற்றத் தூண்டியது திருக்குறளே என நன்றியுணர்ச்சியுடன் பகர்ந்துள்ளார். திருக்குறள் ஜெர்மன் மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

ஆங்கில நாட்டு பேரறிஞர் வணக்கத்துக்குரிய டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் உலகின் மிகச் சிறந்த பக்தி நூலாகிய மாணிக்க வாசகரின் திருவாசகத்தை அழகான ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலகிற்கு ஈந்துள்ளார்.

மனித இனத்தின் மகத்தான சாதனைகளுக்கு அடிப்படையாய் அமைந்து உதவுவது மொழியே. அரசாட்சி, சமுதாய வாழ்வு, கலை, நாகரீகம், அறிவியல் யாவும் மொழியின்றேல் இல்லை. அறிவையும், உணர்வையும் அனுபவத்தையும் தலைமுறை தலைமுறையாக மக்கள் சமுதாயத்திற்கு கொண்டு செல்வது மொழியே. எனவே சமுதாய வாழ்விற்கும் குடும்ப வாழ்விற்கும் மொழியே உயிர் மூச்சாகும் எனவேதான்.

''தமிழ் எங்கள் உயிர் என்பதாலே -
வெல்லும்
தரமுண்டு தமிழருக்கு இப்புவி மேலே''

என்று பாவேந்தர் பாரதிதாசன் உணர்ச்சி பொங்கப் பாடினார்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை அவர்கள் தாய்மொழி பற்றிக் கூறிய சில கருத்துக்கள் பின்வருமாறு

''சமயம், இனம், தேசம் ஆகியவற்றில் உயர்வு தாழ்வுக்கு இடமிருக்கிறது. ஆனால மொழியில், தாய் மொழியில் எத்தகைய அடிப்படை உயர்வு தாழ்வும் இருக்க முடியாது. எத்தகைய உயர்வு தாழ்வும் நீடித்து நிற்கவும் முடியாது. பேச்சுத் திறத்தில் குன்றிய பண்டிதரையும், அதில் மிஞ்சிய குதிரைக் காரரையும் தாய்மொழியிலே மட்டும்தான் காணமுடியும்.

தாய் மொழி வாழ்வில் அரசனும் ஆண்டியும், புலவனும் புலமையற்றவனும் வணிகனும், துறவியும் ஒரு நிலைப்பட்டவர்களே. அவர்கள் யாவரும் எவ்வகை ஏற்றத்தாழ்வும் இல்லாமல் அதன் புகழில் தங்கு தடையின்றி சரிசம நிலையில் போட்டியிட முடியும்; போட்டியிட்டிருக்கின்றனர். எடுத்துக் காட்டாக இருந்து திரிந்த மேலை நாட்டுப் பெரும் புலவன் சோமர் புகழை மாமன்னனாகத் திகழ்ந்த யூலியஸ்சீசர் அத்துறையில் வென்றுவிடவில்லை. கல்லா நடிகனாகிய ஆங்கில நாட்டைச் சேர்ந்த செக்ஸ்பியர் புகழுடன் கற்றறிந்த புலமைக் கவிஞன் மில்டன் போட்டியிட முடிந்ததே தவிர வெல்ல முடியவில்லை. வணிகராகிய தமிழ்நாட்டுப் புலவராகிய கூலவாணிகன் சாத்தனாருடன் அரசந் துறவியாகிய இளங்கோவும், துறவியாகிய திருத்தக்கதேவரும் சரிசமமாகவே போட்டியிட்டனர்.

ஒரு நாட்டின் உரிமைப் போர் வெறும் கல்லுக்கும் மண்ணுக்கும் உரிமை பெற்றுத் தரும் போர் அன்று. கருத்துக்கும் வாழ்வுக்கும் உரிமை பெற்றுத் தரும் போரே ஆகும். கருத்திலும் வாழ்விலும் மொழியே உயிர் போன்ற கருவியாகக் கலந்து நிற்கிறது. ஆகவே நாட்டு உரிமை என்பது நாட்டு மக்களின் வாழ்வுக்கு இன்றியமையாத மொழிக்கும் உரிமையாகும். இதனாலேயே நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் இணைந்து செல்வன என்று கருதுவர். ஆகவே நாட்டுப்பற்று கொண்டவர் மொழிப்பற்றுடையவராக விளங்குவர் என்று எதிர்பார்க்கப்பட்டது.''

''செலவு தந்தைக் கோராயிரம் சென்றது
தீ தெனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன
நலமோ ரெட்டுணையும் கண்டிலேனிதை
நாற்பதாயிரம் கோயிலிற் சொல்லுவேன்
சில முன் செய் நல் வினைப்பயனாலும் நந்
தேவி பாரதத் தன்னையருளினும்
அலைவுறுத்துநும் பேரிருள் வீழ்ந்துநான்
அழிந்திடா தொருவாறு பிழைத்ததே''

மக்கள் கவிஞராய்த் திகழ்ந்த மகாகவி பாரதியார் தமது பால்யப் பருவத்தில் ஆங்கிலம் பயின்ற அவலநிலையை தமது சுயசரிதையில் கூறியுள்ளார். அவர் பாடிய பாடல்களில் ஒன்றுதான் மேலே தரப்பட்டுள்ள பாடல். ஆங்கிலம் பயின்றதால் நலம் ஓர் எள்துணையும் கண்டிலேன்; இதை நாற்பதாயிரம் கோயிலிற் சொல்லுவேன் என வெளிப்படையாகவே எடுத்துரைக்கின்றார். பாரதியார் ஆங்கிலக் கல்விப் பயிற்சியினால் பாரதியாரின் தந்தை பாரதியின் ஆங்கிலக் கல்விக்கு ஓராயிரம் செலவு செய்ய நேர்ந்தது. பாரதிக்கோ ஆங்கிலப் பயிற்சியினால் தீது பல்லாயிரம் சேர்ந்தனவாம். வடமொழி, இந்துஸ்தானி, பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய பல மொழிகளையும் கற்றுத்தேர்ந்த அறிஞரான பாரதியார் கூறுவதில் அர்த்தம் இல்லாது இருக்காது. பாரதி வாழ்ந்த காலத்தில் அந்நிய மொழியாம் ஆங்கிலம் அரசோச்சியமையால் ஆங்கிலம் பயின்று, சிறந்த பட்டங்களைப் பெற்று, உயர்ந்த பதவிகளில் வீற்றிருந்து பொருளீட்டுவதே பலரது குறிக்கோளாக இருந்தது. உரிமை உணர்ச்சியால் உந்தப்பட்ட பாரதியாரின் குறிக்கோள் இதற்கு நேர்மாறானது.

அந்நியர் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டு அடிமைப் படுகுழியில் வீழ்ந்து, தனது நாடு, தனது மொழி, தன்து இனம் என்பவற்றை மறந்து போலி வாழ்வில் மயங்கிய கயவர்களைக் கண்டு நாளும் நைந்து நொந்தார். பாரதியார் இழந்த உரிமையை மீண்டும் பெறுவது எப்படி? இன்பகத் தாயகத்தை, இன்தமிழ்த் தாயை மீட்பது எங்கனம்? என்று நீண்டகாலம் இடையறாது சிந்தித்தார். தமிழ் மொழிக் கூடாக கல்வி புகட்டப்பட்டால் அன்றி நாட்டு மக்கள், நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று கொள்ளமாட்டார்கள் என்பதையுணர்ந்தார். எனவே தான் தாய் மொழிப்பேச்சு மூலமும் எழுத்து மூலமும் மக்களிடையே பல அரிய கருத்துக்களைப் பரப்பி உணர்ச்சியூட்டினார்.

இன்று எமது ஈழத்தமிழகத்தில் எமது இன்னுயிராம் தமிழ்த்தாயையும், தமிழ் ஈழத்தையும் மீட்கவே விடுதலை வேள்வியில் ஆயிரக்கணக்கில் விறகென வெந்து மடிந்து கொண்டிருக்கிறார்கள். எமது தன்னலமற்ற விடுதலை வீரர்கள். அவர்களின் ஈடு இணையற்ற தியாகத்தினை நினைத்து நாளும் நாம் அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்துவோம்.

# ஓவியக் கலை

இ. யோகாம்பிகை
(சித்திர ஆசிரியர்)

ஓவியம் என்பது சித்திரம். கலை என்பது கல்வி. கலைகள் பல. ஓவியக்கலை கருத்தின் உறைவிடம். அழகின் பிறப்பிடம் கற்பனையின் சிகரம். இதன் பயன் இன்பம். அறிவின்மையையும், துன்பத்தையும் அகற்றி இன்பத்தையும், மகிழ்ச்சியையும் தந்து இரச ஞான உணர்ச்சியை ஊட்டி அமைதியை நிலவச் செய்து ஆத்ம வளர்ச்சியை அடையச் செய்வது.

இக்கலை அழகிய பொருட்களை ஆக்குவதற்கும், செயற்கைப் பொருட்களைச் செய்வதற்கும் உள்ளத்தில் ஊறிப் பெருகும் அழகுணர்ச்சியை வெளிப்படுத்தவும், இயற்கை, செயற்கைப் பொருட்களின் வேறுபாட்டை ஆராய்ந்து அவற்றிற் கண்டறிந்தவற்றைக் கொண்டு செயற்கைப் பொருட்களான அருங் கலைப் பொருட்களின் ஆக்கத்தில் முடிவடைகின்றது.

இயற்கை கடவுளின் ஆக்கம். கலை மனிதனின் ஆக்கம். ஆகவே கடவுளுடன் போட்டியிட்டு இயற்கையைப் பிரதிபண்ணாது அதை இரசித்து ஆராய்வதால் உண்டாகும் அனுபவத்தைக் கொண்டு அதன் தன்மைகளைச் சொந்த உருவங்களினால் வெளிப்படுத்தி, அந்த அழகுணர்ச்சியைப் பிறரும் அனுபவிக்கத் தூண்டுவதே இக்கலையின் செயலாகும். கலையின் இன்ப நுகர்ச்சிகளே நாகரிகம், கலாசாரம், பண்பாடு என்பனவாகும். ஒரு நாட்டின் சிறப்பை உணர்த்துவது அங்குள்ள கலைச் செல்வங்களே.

மக்கள் மொழி, நீர்ப்பரப்பு என்பவற்றால் பிரிவு பட்டிருந்தாலும் மக்களின் கருத்துக்களை ஒருவருக்கொருவர் வெளியிடுவதற்கு ஓவியக்கலை ஒரு சர்வதேச மொழியாக அமைந்துள்ளது. ஆதிகால மக்கள் தங்கள் மனக்கருத்துக்களைச் சித்திரக் கலை மூலமாகவே புகட்டினார்கள். பின்னர் கல்வியும், சித்திரம் மூலமாகவே புகட்டப்பட்டது. ஆகவே கலைகளில் சிறந்தது சித்திரக் கலை.

கலையொரு கொடை. கலை மேன்மை மிக்க ஆன்மாக்களின் ஆக்கம். ஆன்மாக்கள் எல்லாம் ஒரு தன்மையுடையவர்கள் அல்லர். இதனால் கலையும் ஒரே தன்மையுடையதன்று. கலையும், சமயமும் மனிதனை உலக பாசங்களிலிருந்து விடுவித்து, பேரின்பத்திற்கு இழுத்துச் செல்லும் இரு பாதைகளாகும். கலை பற்றிய சரித்திரங்களைப் படிப்போர் இவ்வுண்மையை உணரமுடியும். இந்தியக் கலைகளில் கலையும், சமயமும் இரண்டறக் கலந்திருப்பது புலனாகும். இவை இந்து சமயக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். கலையின் உட்தோற்றம் சமயமாகவும், வெளித்தோற்றம் அழகுக் கலையாகவும் காட்சி அளிக்கின்றன. கலை தரும் இன்பம் சொல்லுதற்கரியது. அவற்றை அனுபவித்தே உணரலாம்.

கலையில் எஞ்ஞான்றும் ஆக்குவோனும் ஆக்கப்படும் பொருள் ஒன்றுமிருக்கும். ஆக்குவோனாகிய கலைஞனின் செயலும், ஆக்கப்படும் பொருளாகிய கலையின் தன்மையும், இவ்விரண்டிற்குமுள்ள தொடர்பும் தனிப் பண்புடையன. கலைஞனின் ஆக்கம் கற்பனை. இதனாலே தான் கலையை ஒரு கற்பனையென்று கூறுகின்றோம். கொள்கை இயல்பு, செயல் முறை இயல்பு, உணர்ச்சி இயல்பு ஆகிய மூன்றும் ஒன்றியிருக்கும் செயல்தான் கற்பனை. கற்பனையில் தோன்றும் காட்சிதான் ஆக்கப்படும் பொருளாகிய கலை. கலைப்பொருள் உண்மையபனதும் அன்று; பொய்யானதும் அன்று; இஃது ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த பொருள்; இப்பொருள் புதியதாகவும், அல்லது பழைய

தாகவும் இருக்கலாம். கலைஞன் தன் படைப்பில் புதுமை இது, பழமை இது என எண்ணுவதில்லை.

கலைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நோக்கமுண்டு. அவற்றுள் ஒப்பு, பயன், திறமை, அழகு, சுவை என்ற அம்சங்கள் உள்ளன. அது அழகு அம்சம் மட்டும் நோக்கமாகச் செயற்படுமாயின், நுண்கலையாகக் கருதப்படும்.

மனித சமுதாயத்தின் நாகரிக மேம்பாட்டிற்கு இது ஒரு தீபம் போன்று மிளிர்வதாகும். எனவே கலைஞன் ஒரு உண்மையான பேரறிவாளனாவான். மக்கள் வாழ்க்கையில் இன்பம் விளைவிப்பவன். ஆகவே ''ஓவியக் கலை'' ஒரு சிறந்த கலை என்பதற்கு ஐயமில்லை என்றே கூறலாம்.

---

# நான் யார்?

**தமிழகத்தான்**

படிக்காதவன் படித்தவற்கும் வழிகாட்டும்
பண்பாளன் பாரில் ஏதும்
குடிக்காதவன் குரல் விட்டுப் பேசாதவன்
குற்றம் புரியாதவன், சும்மா
நடிக்காதவன் நான் கைகாட்டும் வழியில்
பலர் நடப்பதுண்டு நாவுப் பாதை
நடக்காதவன் நல்லவரும் பொல்லாதவரும்
நாடுபவன் நானோர் ஏழை.

தனிமரம் நான், தளிரில்லை, தவநிலை,
துணையில்லை, வேருமில்லை,
மனிதர் எனை நாடிவந்து நின்று மெல்ல
மனத்தளவில் ஏதோ சொல்லி மீளவதுண்டு
கனிமரமுமல்ல, காய்ப்பதில்லை, பூப்பதில்லை
கண்மூடாக் கடமை விரன்,
தனிமையிலே நின்றிடுவேன் வீதியிலே,
தறுதலையும் நானல்ல அல்ல

கைகாட்டி நிற்பதுண்டு, ஆனாலும் நான்
கை கட்டும் பழக்க மில்லை,
கைநீட்டும் பழக்கமுண்டு, இரப்பதில்லை,
கடும் வெயில் மழையில், என்
கையில் ஒரு குடையில்லை, காலம் காலம்
கருணை கொண்டு என் நிலையுணர்ந்து
கவலை கொள்வாராருமிலை, எந்நாட்டவரும்
கவனித்து மதிக்கின்றார், நீகண்டதுண்டோ?

# தாவரத்தைத் தாக்கும் நோய்களும் அவற்றைக் கட்டுப்படுத்தலும்.

க. பாலசுந்தரம்
(விவசாய விஞ்ஞான ஆசிரியர்)

எமது நாட்டைப் பொறுத்த வரையில் விவசாயத்துறையில் தற்போது முன்னேற்றம் அடைந்து வருவது நாம் எல்லோரும் அறிந்ததே. நாம் தரையை நன்கு பண்படுத்தி பசளைகள் இட்டு தாவரத்தைச் செழிப்புடன் வளர்த்து வந்தாலும் தாவரம் வளரும் காலங்களில் நோய்கள் ஏற்படுவதனால் அதிக லாபத்தையும் தரமான விளை பொருட்களையும் எம்மால் பெற முடிவதில்லை. எனவே விவசாயிகள் நோய்களை அறிந்து அதற்கு ஏற்ற முறையில் கட்டுப்படுத்துவதனாலும் விவசாயிகள் அதிக பலனைப் பெறமுடியும்.

ஒரு தாவரம் சாதாரண நிலையில் இருந்து காணக்கூடிய தீமை பயக்கும் மாற்றம் நோய் எனப்படும்.

### நோயினால் தாவரத்தில் ஏற்படும் மாற்றங்களாவன:

(அ) தாவரப் பகுதிகள் அழுகிக் காணப்படல்
(ஆ) இலையில் சித்திர வடிவம் தோன்றல்
(இ) இலை நரம்புகள் தெளிவாகத் தெரிதல்
(ஈ) இலை சுருளுதல்
(உ) வேர்களிற் கறுக்கள் உண்டாதல் (அவரைக் குடும்பப் பயிர்கள் தவிர)
(ஊ) தாவரம் குறள் நிலை அடைதல்

எனவே மேற் கூறப்பட்ட மாற்றங்களை நாம் தாவரத்தை நன்கு அவதானிப்பதன் மூலம் அறியலாம். முதலில் இந் நோய்களை ஏற்படுத்தும் காரணிகளை அறிதல் வேண்டும்.

### மேற்கூறிய நோய்களை ஏற்படுத்தும் காரணிகள்

(அ) பங்கசு (ஆ) பற்றீரியா (இ) வைரசு (ஈ) வட்டப்புழு (உ) உடற்றொழிலுக்குரியன (குறைவுக் குணக நோய்) என்பனவாகும்.

மேற்கூறப்பட்ட நோய்க்காரணிகள் தாவரத்தைச் சென்றடையும் முறைகளாவன:

### பங்கஸ்:

இவை வித்திகள் மூலம் இனப்பெருக்கம் அடைகின்றன. நூற்குவியல் அமைப்புடைய பூஞ்சண இழையங்களையுடையன. இவை தாவரத்தின் சிதைவடைந்த பகுதிகளுக்கு ஊடாக தாவரத்தினுள் சென்று தாவரக் கலன்களை சிதைவடையச் செய்கின்றன.

### பற்றீரியா:

இவை இலைவாய் வேர் மயிர்களினூடாக தாவரங்களினுட் சென்று இழையங்களைச் சேதம் செய்யும். இந்நுண்ணங்கி நுணுக்குக் காட்டியின்றிச் சாதாரண கண்களுக்கு புலப்படாது. இவை பல்வேறு வடிவங்களைக் கொண்டனவாக இருக்கும்.

**வைரசு:**

இவற்றை இலத்திரன் நுணுக்குக் காட்டியினூடாகத்தான் பார்க்க முடியும். மற்றைய நுண்ணங்கிகளைவிட மிகவும் சிறிதாகும். இவை சாற்றை உறிஞ்சும் பூச்சிகளினூடாகவும் (காவிகள் மூலம்) தாவரத்தின் காயம் அடைந்த பகுதிகளினூடாகவும் பரப்பப்படும்.

**வட்டப் புழுக்கள்:**

இவை கண்ணுக்கு ஓரளவு தெரியக் கூடிய புழுக்களாகும். இவை தாவரப் பகுதிகளை சேதம் செய்யும் இவை தாவரங்களின் வேர்களில் கணுக்களை உண்டாக்கிக் கடத்தும் பகுதிகளைத் தாக்கும். இதனால் தாவரங்கள் வாடும்.

**உடற்றொழிலுக்குரியன (குறைவுக் குணக நோய்)**

சுற்றாடலில் ஏற்படும் மாற்றங்களினால் தாவரத்தின் பிரதான போசனப் பதார்த்தங்களின் குறைபாட்டாலும் இவ்வாறான நோய் ஏற்படும்.

நோய்களைக் கட்டுப்படுத்தும் முறைகள்

(அ) தடுத்தல் முறை

(ஆ) அழித்தல் முறை

**தடுத்தல் முறை:**

(அ) மண்ணை நன்கு தொற்று நீக்கல்

(ஆ) நோயை எதிர்த்து வளரக் கூடிய இனங்களைப் பயிரிடல்

(இ) சிபார்சு செய்யப்பட்ட இனங்களைப் பயிரிடல்

(ஈ) பயிர் செய்யக்கூடிய நிலத்தைச் சுற்றியுள்ள களைகளை அழித்தல் (களை நோய்க் காரணிகளின் விருந்து வழங்கியாகும்)

(உ) தகுந்த முறையில் பயிர்களுக்கு வளமாக்கி பயன்படுத்தல்

(ஊ) நோயற்ற தூய வித்துக்களைப் பயன்படுத்தல்

(எ) வித்துக்களை தொற்று நீக்கல்

மேற் கூறப்பட்டதை விட அழித்தல் முறையில் கட்டுப்படுத்தல்.

**அழித்தல் முறை:**

**பங்கஸ் நோய்:**

இதனைக் கட்டுப்படுத்தும் நாற்று மேடையாயின்

(அ) பிராசிக் கோல் — 20 தூள்

(ஆ) கப்டான் 50% தூளும் பயன் படுத்தலாம்

**விதைப் பரிகரிப்பிற்கு:**

அக்ரோசான் ஜி . என்.
செரசான் ஈரம்.
ரில் லெக்ஸ் திரவம்.
கப்ரான்.
பென் லேற்.

போன்றவை பயன்படுத்தலாம். இவற்றைவிட நிலத்தை அரித்து சுகாதார முறையைப் பேணுவதன் மூலமும் கட்டுப்படுத்தலாம்.

## பற்றீரியா நோயைக் கட்டுப்படுத்தல்

ஒரே குடும்பப் பயிர்களை தொடர்ச்சியாக ஒரேதரையில் தொடர்ந்து பயிரிடுவதனாலும் இந்நோய் ஏற்படும். இதனைக் கட்டுப்படுத்த மாற்றுப் பயிர்ச் செய்கை அதாவது சுழற்சி முறைப்பயிர்ச் செய்கையினை மேற் கொள்ளுவதினாலும் இதனைக் கட்டுப்படுத்தலாம்.

## வைரசு நோயைக் கட்டுப்படுத்தல்

இந் நோயின் அறிகுறி கண்டதும் அப்பயிரை எரித்து அல்லது பூரணமாக அழித்தல் வேண்டும். எதிர்க்கும் இனங்களைப் பயிரிடல் வேண்டும். இந்நோயைப் பரப்பும் காவிகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

**கோவா, பூக்கோவா, முள்ளங்கி, பீற்றுட், கரட், உருளைக்கிழங்குப் பயிர்களைத் தாக்கும், நோய்கள் :**

கோவாவைத் தாக்கும் குண்டாந்தடி நோய் இந்நோய் பிளாஸ் மோடியோ போஹா பிறசிக்கா என்னும் பங்கசினால் ஏற்படுகிறது. இரண்டாவதாக ஒல்ரனேறியா, பிறசிக்கே என்னும் பங்கசினால் ஏற்படும் இலைப்புள்ளி நோய். மூன்றாவது மைக்கோஸ், பெரல்லா, பிறாசிக் கோலா எனும் பங்கசினால் ஏற்படும் ஒரு புதிய இலைப்புள்ளி நோய். குண்டாந்தடி நோய் (பிளாஸ் மோடியோ போறா பிறசிக்கா. இது மேற்கூறப்பட்ட பங்கசினால் ஏற்படுகின்றது) இந்நோய் மண்ணுள் காணப்படும். வேர்ப் பகுதியை மட்டும் தாக்குகிறது. இப்பங்கஸ் சாதகமற்ற நிலைமைகளில் வித்திகளாக மண்ணுள் இருக்கும். நிலை சாதகமாகும் போது இவை தாவரங்களின் வேர்களினுள் செல்லும் இதனால் தாவர வேர்களில் கணுக்கள் உண்டாகின்றன. இந்நோய் குண்டாந்தடி நோய் எனப்படும். பொதுவாக நாற்று மேடைப் பருவத்தில் ஆரம்பித்தாலும் விவசாயிகள் இதனைக் கவனத்தில் எடுக்காது, நாற்றுக்களைப் பிடுங்கி நடும்போது மண்ணில் பங்கஸ் பரவ வாய்ப்பு ஏற்படுகின்றது. தாக்கப்பட்ட பயிர்கள் வளர்ச்சி குன்றி குட்டையாகக் காணப்படும்.

### தடுப்பு:

தாக்கப்பட்ட பயிர்களை அகற்றுவதும் குருசிபரே குடும்பப் பயிர்கள் அல்லாத மற்றைய பயிர்களை சுழற்சி முறையில் பயிரிடுவதுமே சிறந்த பலனைத் தரக்கூடியதாகும். தரையைத் தூபமாக்கி மூலமும் தொற்று நீக்கலாம். பிஸி என்பி பென் அமினோசல்ப் (PCNB Fenamino Sulph) போன்ற இரசாயனங்களைச் சுண்ணாம்புடன் சேர்த்துப் பிரயோகிக்கலாம்.

## இலைப்புள்ளி நோய்:

இந்நோயை ஏற்படுத்தும் ஒல்ரனேறியா பிறசிக்கா எனப்படும். பங்கஸ் காற்றிலே வாழ்கின்றது. தாக்கப்பட்ட பயிர்கள் கபில நிறமாகவும் ஊத்தை நிறமாகவும் காட்சி அளிக்கும்.

### தடுப்பு:

பங்கஸ் நாசினி விசிறுவதும் பயிர்ச் சுழற்சி முறைகளைக் கைக்கொள்வதும் தோட்டத்தில் தாக்கப்பட்ட பயிர்களை ஒழுங்காக அகற்றுவதும் அவசியமாகும்.

### பீற்றூட்:

பீற்றூட்டைத் தாக்கும் நோய்களில் மிகப்பிரதானமாக காணப்படுவது சேக்கஸ் போறா இலைப்புள்ளி நோய். இந்நோய் சேக்கஸ் பொறா பீற்றிக் கோலா என்னும் பங்கசினால் ஏற்படுகின்றது. இதனால் ஏற்படும் புள்ளிகள் முதிர்ச்சியடையும்போது உதிர்வதனால் இலைகள் துளைகள் கொண்டனவாகவும் மத்தியில் வெள்ளி நிறமாகவும் காணப்படும்.

### தடுப்பு:

பயிர்கள் மிகுதிகளை தோட்டத்திலிருந்து அகற்றுவதும் சுழற்சி முறைப்பயிர்ச் செய்கையை மேற்கொள்வதும் சிறந்ததாகும். இதனைக் கட்டுப்படுத்த செப்புப் பங்கசு நாசினி அல்லது காபமேற்ஸ் கொண்ட இரசாயனப் பொருட்கள் விசிறல் வேண்டும்.

### கரட்:

ஓல்ரனேறியா, டோசி சேக்கஸ் போறா கறோரீ என்னும் இப் பங்கசினால் தாக்கப் பட்டு இலைவெளிறல் நோய்க்கு உட்படுகின்றது. அத்துடன் ஏர்வீனியா கறறோ. போறா என்னும் பற்றீரியாவினால் வேர் அழுகல் நோய்க்கும் உட்படுகின்றது.

### தடுப்பு:

பயிர் மீதிகளை அழிப்பதும் பயிர்ச் சுழற்சி முறைகளைக் கைக்கொள்வதும் சிறந்தது விதைகளை 5 நிமிடம் 1: 1000 மேக்கி யூரிறிக் குளோறைட் கரைசலில் ஊறவிடுவது சிறந்தது. அல்லது ஒகனோ மேக்கியூறித் தூளில் பரிகரிப்பது விதைகள் மூலம் வித்திகள் பரவுவதைத் தடுக்கும்.

### உருளைக்கிழங்குப் பயிர்களைத் தாக்கும் நோய்கள்

பிற்கூற்று வெளிறல் — பைற் ஒவ் தோறா இன்பெஸ்ரான்ஸ். இந்நோய் இரண்டு நாட்களுக்கு மேல் 90% அல்லது அதற்கு மேலாக ஈரப்பதன் இருக்கும் போதும் வெளிறல் நோய் ஏற்படும், மேலும் இலைகளில் பரப்புக்களில் 13 மணித்தியாலங் களிற்குமேல் நீர் தங்கி இருக்கும் போது வெளிறல் நோய் பயிர்களைத்தாக்கும்.

இப்பங்கஸ் வித்துக்களினால் பரவுகின்றது. இவை இலைகளில் காவற்கலன்களினூடாக உட்சென்று பெருக்கத் தொடங்குகின்றன. முதலில் இலைகளில் கபிலப்புள்ளி தோன்றும். பின்முழு இலையும் இறந்துவிடும். இறுதியாக இலைகளும் தண்டுகளும் அழுகி முற்றாக கருமை நிறம் அடைந்து காணப்படும். பயிர்களின் இலைகளின் கீழ்ப்பகுதியில் இப்பங்கஸ் வெள்ளைப்பஞ்சு போன்று படர்ந்து இருப்பதை நீங்கள் அவதானிக்கலாம். மழை பெய்யும் போது இவ்வித்திகள் கழுவப்பட்டு நிலத்தை அடைந்து பின் கிழங்குகளுக்குத் தாவி கிழங்குகள் அழுக ஆரம்பிக்கும்.

### இந் நோயைக் கட்டுப்படுத்தல்:

எதிர்க்கும் இனங்களைப் பயிரிடல் வேண்டும். பனால் எனப்படும் இனம் 100 % இந்நோயை தாக்கக் கூடியதாக இருக்கின்றது. தோட்டத்தைத் துப்பரவாக வைத்திருத்தல். சல்பூரிக்கமிலத்தை பயன்படுத்தலாம். 3. க.ச.மீ அமிலத்தை 17.க.ச.மீ நீரில் வீதம் கரைத்து விசிறவும்.

### பற்றீரிய வாடல்:

சியூடோ மோனாஸ் — சொலனேசியாரம். இந்நோயைக் கபில அழுகல் என அழைப்பதும் உண்டு. இந்நோய் பயிர் முளைத்து ஒரு மாதத்தினால் ஏற்படுகின்றது.

பகற்காலத்தில் பயிர்கள் வாடி மடிந்து காணப்படும். மாலை நேரம் புத்துயிர் பெற்று நிமிர்ந்து காணப்படும். இறுதியில் நிரந்தரமாகவே வாடிக் காணப்படும். இந்நோயினால் தாக்கப்பட்ட தண்டொன்றினை கிழங்கு ஒன்றினை வெட்டி நீரினுள் இட்டால் வெண் சளியம் போல் பற்றீரியத் திரவம் வெளிவருவதை அவதானிக்கலாம்.

**கட்டுப்படுத்தல்:**

சுழற்சி முறைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல். சொலனேசியப் பயிர்களை அதிககாலம் பயிரிடாமல் விடுதல். எதிர்க்கும் இனங்களைப் பயிரிடல்.

**கருங்காய் நோய்—ஏவீனியா ஏறொஸ்ப்ரிகா:**

இதுவும் ஒரு பக்றீரியா நோயாகும். இவை விதைகிழங்குகள் மூலமே பரவுகின்றன. இந்நோயினால் தாக்கப்பட்ட பயிர்கள் இலைகள் மஞ்சள் நிறமடைந்தும் தண்டுகள் கருமை நிறமடைந்தும் கெந்தக மணமுடையனவாகவும் நிலமட்டத்திற்கு மேல் சளியம் சுரந்தும் காணப்படும்.

**தடுப்பு:**

தாக்கப்பட்ட பயிர்களை அகற்றல். சுழற்சி முறையில் பயிரிடல். நோய் தொற்றிய கிழங்குகளை நடுகைக்கு பயன்படுத்தாமை.

**பங்கஸ் சுருக்கம்:**

தாவர நோய்களில் பெரும்பாலானவை பங்கசுக்கள் எனப்படும் நோய் காரணிகளினால் ஏற்படுகின்றன. ஏறக்குறைய எல்லாப் பயிர்களும் பங்கஸ் நோய் ஒன்றின் பாதிப்பிற்கு உட்படுகின்றது.

பங்கசுக்களின் கலன்கள் தாவரக்கலன்களைப் போன்றே கடினமான கலச்சுவரைக் கொண்டிருக்கும். ஆனால் இவை பச்சையத்தைக் கொண்டிருக்காது. இவை அழுகல் வளியாகவோ அன்றி ஒட்டுண்ணியாகவோ பிறபோசணை முறையை மேற்கொண்டு வாழ்கின்றன. இவற்றின் உறைவிடம் பெரும்பாலும் மண், நீர்நிலைகள் தாவரங்கள் விலங்குகளாகும். சில பங்கசுக்கள் திராட்சை, றோசா போன்றவற்றின் இலைகளில் பவுடர் தூவப்பட்டது போல் காணப்படும். இவை இலிங்க முறையில் வித்திகளை உற்பத்தி செய்தும் இலிங்கமின் முறையிலும் வித்திகளை உற்பத்தி செய்தும் இனத்தைப் பெருக்குகின்றன.

பங்கசுக்களில் எமக்கு நன்மை பயர்ப்பனவும் உண்டு. அழுகல் வளரிப் பங்கசுக்கள் இறந்த விலங்குகள் தாவரங்கள் என்பவற்றை உக்கச்செய்து மண்ணின் வளத்தை கூட்டுவதுடன் அவற்றை வளரும் பயிர்கள் உபயோகிக்கக் கூடியதாக மாற்றியும் விடுகின்றன. நுண்ணுயிர்க் கொல்லியாக மருத்துவத் துறையில் முக்கியம் பெற்று விளங்கும் பெனிசிலின் என்னும் மருந்து பெனிசீலியம் எனும் பங்கசுவில் இருந்தே உற்பத்தி செய்யப்படுகிறது. சில உணவுப் பொருளாகவும் பயன்படுகிறது. (உதாரணம்: களான்கள்)

இரசாயன நாசினிகள் மனிதனுக்கோ விலங்குகளுக்கோ தீமை பயர்க்கக்கூடின. எனவே இவற்றைப் பயன்படுத்தும் போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். மேற்கூறப்பட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டு கட்டுப்பாட்டு முறைகளை மேற்கொண்டால் விவசாயிகள் அதிக பலனைப் பெறமுடியும் என்பது என கருத்தாகும்.

# ஆசிரியத்துவம் - சிறு நோக்கு

திரு. கி. நடராசா
B. A. (Cey); Dip. in Ed; M. A.
பிரதி அதிபர், யா/நெல்லியடி ம. ம. வி.

கல்வி முறைமையின் குறிக்கோள்கள் எவ்வளவு மேம்பாடு உடையனவாயினும், உபகரணங்கள் எவ்வளவு நவீன மயமாக இருந்தாலும், கல்வி நிர்வாகம் சிறப்பும் சீருடையனவாகக் காணப்பட்டாலும் மாண வர் பெறும் கல்விப் பெறுமானம் ஆசிரிய ரிலேயே தங்கியுள்ளது. சமூகத்தின் மிகக் குறைந்த படித்தரத்தில் நின்றுகொண்டு, அச் சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பின ரையும் பெரும்பெரும் பட்டங்கள் பதவிகள் பெறச்செய்து, தான் மட்டும் இருந்த இடத் திலேயே இருந்துகொண்டு, தன்னால் உயர்த்தி விடப் பட்டவர்களைப் பார்த்து, நான் விதைத்த விதைகளல்லவா என மகிழ்வுறும் புனிதமான தொழில்தான் ஆசிரியத்துவம்.

ஒவ்வொரு நாடும் தனது மொத்தத் தேசிய வருமானத்தில் சராசரியாக 5% திற்குக் குறையாமல் கல்விக்காகச் செலவு செய்கின்றது. இச்செலவு நாட்டின் நீண்ட கால முதலீடு என்று கூறப்படும். இம்முத லீட்டின் அறுவடையை நல்ல முறையில் பெறுவதற்குத் தகுதியானவர்களைத் தேவைக்கேற்பத் தெரிவு செய்து, அவர்க ளுக்கு சிறப்பான பயிற்சியளித்து, தொழி லின் முதன்மையை உணரச் செய்வதன் மூலமே பெற்றுக்கொள்ள முடியும். கல்விப் பயன்பாட்டையும் நிலையானதாக ஆக்கிக் கொள்ள முடியும். ஆனால் இன்று நடப்ப தென்ன? பள்ளிக்கூடங்கள் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைப் போராட்டத்திற்கு பயிற்சியளிக்கும் ஒரு பாசறை என்பதை மறந்து, வேலை வாய்ப்புக்கள் வழங்கும் தொழிற்சாலைகளாகக் கருதப்படுகின்றன. வறுமையை ஒழிப்பதற்கும் வேலைவாய்ப்பு வழங்குவதற்கும் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுவதாயின் அது மிகப்பெரும் தவ றான செயலாகவே கருதப்படவேண்டும்

ஆசிரியத்துவம் ஒரு நாட்டின் நிலை யான அத்தியாவசிய சேவை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சிறப்பு வாய்ந்த புனிதமான இப்பணியில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள் தாம் வாழும் சமூகத்தின் நலனைப் பேணுவதற்காக தம்மைத்தாமே அர்ப்பணிக்கக்கூடிய இலட்சியவாதிகளாக விளங்குதல் வேண்டும். வருங்கால சந்ததி யினரின் அறிவு, திறன், மனப்பாங்கு முத லியவற்றை வளர்த்து சமுதாய மேம்பாட் டிற்காக வாழுதல் வேண்டும். உரிமையி லும் பார்க்கக் கடமையிலே கரிசனை மிகுந் தவர்களாகக் காணப்படல் வேண்டும். சிறந்த மானிடநேயம், பரந்த மனப்பாங்கு, தளர்வில்லாத விளக்கமுடைமை, சிறந்த ஆசிரியத்துவத்தின் பண்பு நலன்களாகும். தன்னம்பிக்கையும், நாட்டுப் பற்றும் ஆசிரி யத்துவத்தின் இரு கண்களாகும். வள மாக்கப்பட்ட துணிவுள்ள மனிதர்களை சமு தாயத்திற்கு அளித்தல் வேண்டும். மணிக் கூட்டின் பிரகாரம் வேலை செய்யும் இயந் திரங்களாகத் தொழிற்படாது சேவையைப் பெரிதாக மதித்து சமுதாயத்தை வளம் படுத்துவதே ஆசிரியரின் நற்பணி ஆகும்.

''இது எனது பாடசாலை; என்னால் பாடசாலை உயர்வடைய வேண்டும். பாட சாலையால் நானும் உயர்வடைய வேண்டும்'' என்ற இக்கருத்து ஒவ்வொரு நல்லாசிரியரின் உள்ளத்திலும் ஊற்றெடுத் தல் வேண்டும்.

ஆசிரியர் ஒருவர் எவ்வாறு பாடம் சொல்லுதல் வேண்டும் என்பதனை ஐந் நூறு வருடங்களுக்கு முன்னர் நன்னூலார் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். அதில் சமகால கற்பித்தல் முறையின் உள்ளடக் கங்கள் சிலவும் இடம்பெற்றிருந்தன.

,'ஈதல் இயல்பே இயம்பும் காலைக்
காலமும் இடமும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப்படும் பொருள் உள்ளத்தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங்கொளக்
கோட்டமில் மனத்தின் நூல் கொடுத்தல் என்ப''

என்ற அப்பாடலில் காலமும் இடனும் என்பது இக்காலத்தில் தகுந்த சூழ்நிலை எனப் படுகிறது. ''உரைக்கப்படும் பொருள் உள்ளத்தமைத்தல்'' என்பது பாட ஆயத்தத்தைக் குறிக்கின்றது. ''கொள்வோன் கொள்வகை அறிந்து'' என்பது மனதைத் தயாரித்தல் எனப் பொருள்படுகின்றது. ''விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து'' என்பது ஆசிரியரின் குணவியல்புகளை எடுத்துக்காட்டுகின்றது.

இறுதியாக ஆசிரியத்துவத்தின் மூலம் சமுதாய எதிர்பார்ப்புக்கள் எவை என்பதைப் பின்வருமாறு சுருக்கமாக வகைப் படுத்தலாம்.

1. கல்விசார் மூலவளங்களை ஒழுங்கமைத்தல்.
2. அறிவு, திறன், மனப்பாங்கினை வளர்த்தல்.
3. சமுதாயத்தின் தேவைகள் எதிர்பார்ப்புகள் என்பனவற்றில் கல்விச் சூழலை உருவாக்குதல்.
4. சிறந்த மனித தொடர்புகளை ஏற்படுத்துதல்.
5. தலைமைத்துவப் பண்பை வளர்த்து சமூக முன்னேற்றத்துக்கு அடி கோலுதல்
6. மேற்குறிப்பிட்ட வகையில் ஆசிரியர் ஒருவர் நண்பராய், வழிகாட்டியாய் ஆலோசகராய் ஒழுக்கத்தையும் அறநெறியையும் பாதுகாப்பவராய் அமைந்து தொழிற்படுதல் வேண்டும்.

---

## தகைமையும் தத்துவமும்

- சிலவேளைகளில் கௌரவமும் அந்தஸ்தும் பெரிய விலங்குகளாகி நம் மேலுதட்டையும் கீழுதட்டையும் இறுக்கிப் பூட்டி விடுகின்றன.

— நா. பா. (நெருப்புக் கனிகள்)

- துன்பத்தைப் பிறர்க்குக் கூறிக்கொள்வதில் மனத்துக்கு நிம்மதி ஏற்படவே செய்யும். ஆனால் அதே துன்பம் அவனுக்காக இரங்குபவர்களையும் வேதனைப்பட வைத்தால்......!

- சூரியனை இழந்ததும் கண்ணீர்விட்டால், நீ நட்சத்திரங்களையும் இழந்துவிடுவாய்

— செங்கை ஆழியான்
(அலைகடல்தான் ஓயாதே?)

- இன்னொருவர் நம்மைப் புரிந்துகொள்ளவில்லையே என்று வாழ்க்கையில் தயங்கி நிற்பதைவிட. அந்த இன்னொருவரை நாம் சரியாகப் புரிந்துகொண்டு மேலே நடப்பது நல்லது.

— நா. பா. (வரவேற்பு)

# பாடசாலைகள் எதிர்நோக்கும் சவால்களும் நவீன கல்விப் போக்குகளும்

திருமதி. செ. இரட்ணராஜா

அண்மைக்காலத்தில் எமது பிரதேசம் கல்வித்துறையில் முன்னேற்றமடைந்து வருகின்றது. எனினும் இப்பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் போதுமானதா? அல்லது இன்னும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ளதா? என்பதை நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஏனெனில் இன்று நாம் எதிர்நோக்கும் சவால்களுக்கு ஈடுகொடுக்கக்கூடியதாக 21ம் நூற்றாண்டிற்குரிய மனிதர்களை உருவாக்குவதற்கு ஏற்றதாக இன்று எமது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் அமைகின்றனவா? என்பதை கல்வியில் அக்கறை உடைய ஒவ்வொருவரும் சிந்திப்பதோடு மட்டுமன்றி நடைமுறைப்படுத்த வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம்.

இவ்வடிப்படையில் நவீன கல்விப்போக்குகள் எவை? என்பதை விளக்கிக் கொள்வதாலும் நாம் எதிர்நோக்கும் சவால்கள் எவை என்பதை இனங்கண்டு கொள்வதாலும் நாம் விரும்புகின்ற கல்வித்தர அபிவிருத்தியை ஓரளவுக்கு ஏற்படுத்தலாம்.

இன்று எம்மை எதிர்நோக்கும் மிகப் பெரிய சவால் என்னவெனில் குறிப்பிட்ட காலத்திற்குள் எம்மால்பாடத்திட்டத்தினை பூரணமாக கற்பிக்க முடியாமல் இருப்பது தான். உலகின் அறிவு விஞ்ஞான தொழில் நுட்ப பெருக்க வேகத்திற்கு ஏற்ப இன்று பாடசாலைப் பிள்ளைகளின் பாடப்புத்தகங்களின் தொகையும், பருமனும் சுமக்க முடியாத அளவுக்கு பெருகி வருகின்றன. மறுபுறத்தில் பாடசாலையிலே செலவழிக்க வேண்டிய மனித மணித்தியாலயங்களின் அளவு குறைந்துகொண்டு வருகின்றது. இவ்விரண்டும் முரண்பட்ட அம்சங்களாகும். இது இன்று நாம் எதிர்நோக்கும் மாபெரும் சவால்களாகும்.

இந்த நெருக்கடியான நிலைமை காரணமாக பல்வேறு கிளைப்பிரச்சனைகள் தோன்றியுள்ளன. தனியார் கல்விப் போதனை நிலையங்கள் காளான் வேகத்தில் உருவாகின்றன. பாடசாலைகளும், ரியூட்டரிகளாக மாறி வருகின்றன. மாணவர்களுக்கு கல்வி சுமக்கமுடியாத சுமையாகி விடுகின்றது. உத்தியோகத்திற்கு தராதரப் பத்திரங்கள் பெறும் போட்டிநிலை அதிகரிக்கின்றது. கல்வி வாழ்க்கைக்காக அல்ல தொழிலுக்காகவே என்ற நிலை சகலரிடத்திலும் காணப்படுகின்றத.

இதனால் அறிவுக்கும் கல்விக்குமிடையில் உள்ள வித்தியாசத்தை உணரமுடியாததினால் கல்வித்தரம் குன்றிவிட்டது. இப்பிரச்சனைகளுக்கு அடிப்படைக்காரணம் ஆகிரியர்களாகிய நாம் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் நவீன யுத்திகளைக் கையாளத் தவறியமையேயாகும். எமது கற்பித்தல் யுத்திகள் பெரும்பாலும் பழைய முறையிலான வகுப்பறைப் போதனைகளாகவே அமைகின்றன. இன்றைய நவீன கற்பித்தற் போதனைகளில் சுயமாகக் கற்றல் என்ற அம்சத்திற்கு இடமே இல்லாத வகையில் மாணவர்களை அறிவுதேடும் விடயத்தில் எப்போதும் ஆசிரியர்களிலேயே தங்கியிருக்கின்ற ஒரு பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதிலிருந்து நாம் அவர்களை விடுவிக்க வேண்டுமாயின் சுயமாகக் கற்றல் உத்திகளையும் நாம் பின்பற்றல் மேண்டும்.

நவீன பாடசாலைச் செயற்பாடுகளில் முகாமைத்துவம் குறிப்பிடக்கூடிய ஒரு அம்சமாக முக்கியம் பெற்று வருகின்றது. முகாமைத்துவத்திலே நிர்வாகமும் அபி விருத்தியும் இணைந்து இருப்பதனால் குறை விருத்தி நாடான எமது இலங்கைப் பாட சாலைகளிலும் திட்டமிட்ட அபிவிருத்தி தேவைப்படுகின்றது. ஏனெனில் வளங்கள் குறைவாக இருப்பதனால் அவற்றின் மூலம் உச்சப்பயனை அடைவதற்கு திட்டமிட்ட முகாமைத்துவமே ஒரேயொரு வழியாகும். எனவே பாடசாலைச் செயற்பாடுகளை அதிபர், ஆசிரியர்கள் முகாமைத்துவ உத்தி களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இன்றைய கல்விப் போக்கில் சமூக ஈடு பாடு பாடசாலையைப் பொறுத்தவரையில் ஒருமுக்கிய அம்சமாகும். சமூகத்திற்காகத் தான் பாடசாலை என்பதை பெரும்பாலான அதிபரும், ஆசிரியர்களும் மறந்துவிடுகின் றார்கள். எந்தப் பாடசாலை தன்னைச் சேர்ந்த சமூகத்தின் கலாச்சாரப்பாரம் பரியங்களைப் பேணத் தவறுகின்றதோ அல்லது விஞ்ஞான, தொழில்நுட்ப, பொருளாதார, ஆத்மீக, பண்பாட்டு அபிவிருத்தியை வளர்ப்பதற்குத் தவறு கின்றதோ அப்பாடசாலை இருப்பதனால் எந்தப்பிரயோசனமும் இல்லை. ஏனெனில் ஏட்டுக்கல்வியை மட்டும் போதிப்பதாக இருந்தால் இதைச் செய்வதற்கு இங்குள்ள தனியார் டியூட்டரிகளே போதுமானது. இதற்கொரு பாடசாலை தேவையில்லை. எனவே பாடசாலைகளில் தலையாய பொறுப்பினை அதிபர்களும் ஆசிரியர்களும் கல்வி நலன்விரும்பிகளும் அறிந்து செயற் பட்டால் எமது பெரும்பாலான சவால் களை எம்மாலேயே சமாளித்துக் கொள்ள முடியும். இதற்கு முகாமைத்துவ விளக்கம் எல்லோருக்கும் தேவை.

இளைஞர்கள் மத்தியில் காணப்படு கின்ற அமைதியின்மை பெரும்பாலும் பாடசாலைக்கல்வி போதிய வழிகாட்டல் இன்மையினால் என்பது இப்போது உணரப் படுகின்றது. இதனாலேயே நவீன கல்விப் போக்குகள் வழிகாட்டலுக்கு முக்கியத் துவம் கொடுக்கப்படுகின்றது. வெறும் ஏட்டுக் கல்வி முறை சமூக விழுமியங்களை இனங்கண்டு ஊட்டத் தவறுகின்றது. இணைப்பாடவிதான செயற்பாடுகளை பாடசாலைகளில் அமுல் நடத்துவதன் மூலமே உடன்பாடான மனப்பான்மைகளை யும், பழக்கவழக்கங்களையும் ஏற்படுத்தக் கூடியன.

அடுத்து எமது கற்பித்தல் செயற்பாட் டில் ஊனமுள்ள ஒரு பகுதியாக எமது மதிப்பீட்டு முறைகள் அமைந்து விடுகின்றன அதாவது சோதனைகள் வைப்பதும், புள்ளி களைப் பதிந்து வைப்பதும் மட்டுமே எமது கடமை என்று ஆசிரியர்கள் கருதிவிடு கின்றனர். சோதனை என்பது மருத்துவத் துறையிலே இனங்காண்பதற்கு நடத்தப் படுவதாகும். கல்வித்துறையிலும் அவ்வாறே எந்தப்பாட அலகில் என்ன குறைபாடுடை யவர்களாக மாணவர்கள் இருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்வதற்காகவே சோதனைகள் நடத்தப்படுகின்றன. வைத் தியர் ஒருவர் சோதனை செய்து நோயை இனங்கண்டு ஒரு தாள்துண்டில் குறித்து விட்டால் மட்டும் நோய் தீர்ந்துவிடாது பாடசாலைகளிலும் சோதனைகள் நடத்தி புள்ளிகள் பதிவதிலேதான் முழுக்கவனமும் இருக்கின்றதேயொழிய தவறுகளுக்குரிய பரிகாரங்களைச் செய்யத் தவறிவிடு கின்றனர்.

எனவே எமது பிரதேசத்திற் காணப்படும் மேலே கூறப்பட்ட சில பிரச்சினைகளை நீக்கும் முகமாக அதிபர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள் கல்விப்பகுதியினர், மாண வர்கள், மற்றும் நலன் விரும்பிகள் யாபேரும் ஒன்று சேர்ந்து சிந்தித்துச் செயற் பட்டால் 21ம் நூற்றாண்டிற்குரிய ''மனி தர்களை'' எம்பால் உற்பத்தி செய்ய முடியும்.

# கல்விச் செல்வம்

வ. மாலினிதேவி
பழைய மாணவி

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' எனவும்,

''கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே
உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்கை நன்றே''
எனவும்,

''இனியது கொடுத்தே எழுத்தைத் தானறி
ஈட்டிய நற்பொருள் எழுத்தே யாகும்''

எனவும் கல்வியைப் பற்றி விதந்து கூறப்படு வதிலிருந்து கல்வியின் மகிமை பற்றி நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது இலக்கிய காலத்திலிருந்தே நம் முன்னோர் குருகுலத் தில் ஆசிரியர் வாயிலாக கல்வியை வளர்த்து வந்தனர். வாய்மொழியாகவும் ஏடுகள்மூல மாகவும் விருத்தி செய்தனர். கல்வியின் பெருமைபற்றி நாலடியார்

''குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்
டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவுநிலைமையால்
கல்வி அழகே அழகு.''

என நவில்கிறது. ஒருவர் ஆடை அணிகலன் களால் அலங்கரித்து ஆடம்பரமாக நின்றா ரேனும் கற்றவர் குழுமி இருக்கும் ஒரவை யில் அவர் பகட்டு மங்குவது திண்ணம். அதனாலே தான் பொருளுடையவனுக்கு அவனிருக்குமிடத்தில் சிறப்பு; கற்றவர்க்கு அவர் செல்லுமிடமெல்லாம் சிறப்பு என்பர் சான்றோர். பார் ஆளும் மன்னன் கூட தன் செல்வத்தினை செந்நாப் புலவனின் காலடியில் தந்து வழுத்துவானென்றால் மணிமுடியும் கல்விக்குப் பணிகிறது என்று தான் பொருள்.

திரைகடலோடி திரவியம்தேடி வரம் பின்றி பொருளைக் குவிக்கிறான் தமிழன். அப்படிக் குவியும் பொருள் எடுக்க எடுக்கக் குறைந்து மறைந்து மூன்றாம் நான்காம் சந்ததியினருக்கே இல்லாது விடுகின்றது. கல்வியோ எனின்...
வள்ளுவர் விள்ளுகிறார்–

ஒருமைக் கண் கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமைக்கும் ஏமாப்புடைத்து.

எடுக்க எடுக்க, அதாவது மற்றவர்க்கு ஓத ஓத வளரும் கல்வியானது ஒரு பிறவியில் கற்றால் எழு பிறவிக்கும் தொடருமாம். பணத்தால் இறுமாப்படைபவன் தான் பணக்காரன், அடுத்தவன் ஏழை என பாகு படுத்தி அவனை ஒதுக்குகிறான். கல்வி யைச் செல்வமாகப் பெற்றவன் என்ன செய் கிறான்?

தாமின்புறுவது உலகின்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்.

செல்வந்தன் தன் செல்வத்தால் மனித நிலையிலிருந்து கீழ்நிலைக்குத் தள்ளப்படு கிறான். பணத்தின் செருக்கு அவனை நடுவு நிலைமையிலிருந்து வீழ்த்தி விடுவ தோடு மிருகங்கள் போலும் ஆக்கி விடுகின் றது. ஆனால் எல்லோர்க்கும் கல்வி என் றாலோ நாமனைவரும் கற்றோர் என்ற மேதாவிலாசம் வந்துவிடும்.

புத்தகங்களோடு சம்பந்தப்பட்ட அறி வைப் பெருக்கும் கல்வியோடமையாது மாணவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டக்கூடிய தொழிற்கல்வியும் சேர்ந் திருப்பதால் அதுவும் மாணவர்க்கு அத்தி யாவசியமாகிறது. கல்வி கற்கவென பாட சாலை செல்லும் மாணவர்கள் தத்தமக்கு ஏற்ற துறைகளில் ஈடுபடுவதால் அதில்

வல்லுநராகி பிற்காலத்தில் பெரும் தொழில் நிபுணராகி தாமும் முன்னேறுவதோடு தன் சமூகத்துக்கும் உதவ முனைகிறான்.

நல்லொழுக்கம், பண்பாடு, ஈகை, பிறர் நலம் விழைதல் ஆகிய நற்பண்புகளெல்லாம் கல்வியினால் பெறப்படுவது கண்கூடு. ஈன்று புறந் தருதல் அன்னைக்குக் கடனாயிருக்க சான்றோனாக்குதல் ஆசிரியர் தம் கடனாகின்றது. அன்னையின் மடியை விட்டகன்று தளர்நடைக்குப் பின் கல்விக்காக நல்லாசானிடத்தில் ஒப்படைக்கப்படுகின்றோம். கொஞ்சுமொழி பேசும் பிஞ்சுப் பருவத்தில் ஆசிரியரின் நல்லுபதேசமும் நன்னெறியும் சிலையிலெழுத்தாகின்றன. மாணவர் தம் வயது வளரவளர ஆசிரியரின் அறிவுரைகளும் வேரூன்றி வளர்ந்து அவர்தம் வாழ்க்கையை நிர்ணயிக்கிறது. வாழ்நாளின் இறுதிக் காலத்தில் அவன் பெறும் லாபமும் நட்டமும் இதனால்தான் பெறப்படுகின்றது.

நம் மூதாதையர் போற்றி வளர்த்த கல்வியை நாமும் நன்கு பேணவேண்டும். கல்வியிலேயே சமுதாய முன்னேற்றமும் தங்கி உள்ளது. பணமுடையோர் கல்வி கற்க ஏழைகள் அதைப் பெறமுடியாத வேளையில் இலவசக் கல்விமுறை கொண்டு வரப்பட்டதால் பெரும்பாலோர் முன்னேற்றமடைந்து வருவது உணருதற்பாலதாயுள்ளது. சமூகத்தில் துரிதமான மாற்றங்கள் ஏற்படும் சமயத்தில் கல்வி அதற்கு எடை போட்டு மட்டாக வைத்திருத்தல் அவசியமாகிறது. பொருத்தமான வேண்டத்தக்க மாற்றத்துக்கு ஆதரவு தந்து அதனை வழிப்படுத்தல் வேண்டும் கல்வி நிலையங்கள் பழைய பண்பாடுகளைத் தொடர்புபடுத்துவதோடமையாது எதிர்கால சமூக மாற்றத்துக்கும் வழிகோல வேண்டும்.

''கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடல்ல மற்றையவை.''


பொன்விழா மலர் சிறப்புற

எமது நல்வாழ்த்துக்கள்

கட்டைவேலி, உடுப்பிட்டி

தெங்கு பனம்பொருள்
உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கம்

# இசையின் மகிமையும் அதன் அம்சமும்

செல்வி சு. இராஜகுமாரி

கலை என்பதை நோக்கும் போது ஒரு செயல்மீளாக்கம் செய்ய முடியாத நிலையினைப் பெறுமிடத்து, அதுவும் ரசனைக் குரியதாகும் போது கலையாகிறது. கலை என்றால் Arts என்று ஆங்கிலத்தில் கூறுகின்றோம். Arts என்பது, இலத்தீன் சொல்லில் இருந்து பிறந்ததாகும். கலை என்பது திறமை சாதுரியம் எனப் பொருள்படும். சிந்தனை செயற்றிறமை, கைத்திறமை மிக்க ஒருவனே கலைஞனாகத் திகழமுடியும். அவனது கருத்துக்குட்பட்ட காட்சியே கைத்திறமை வழியாக வெளிவந்து பிற உலக கைப் பொருளாக உருப்பெறும் காணும் காட்சி, ஓசை, தாளம், குரல்வளம் இவற்றை நினைவிருத்தி ஆழ்ந்த சிந்தனையால் மனத்திரையில் பதியச் செய்ய வேண்டும். இவ்வாறு பதிந்த காட்சி பின்னர் புறவடிவமாக உருப் பெறும்போது கலை எனப் பெயர் பெறும் என்று சிற்பரத்தினம் என்ற நூல் கூறுகின்றது. மேலும் புத்தர் பயின்ற கலைகள் பற்றி லலித விஸ்தாரம் கூறுகின்றது இவ்வாறு புதிதாகப் படைக்கப்படும் படைப்புகள் கலை என்ற பிரிவினுள் அடக்கப்படுகின்றது. ஆய கலைகள் அறுபத்து நான்கில் உருவான இசைக் கலையும் பல சிறப்பம்சங்களை வெளிக்காட்டி இன்றைய இசையுலகில் பல கிளைவிட்டு இசைத்துறை வளர்ச்சியடைவது கண்கூடானது.

இசையானது பல மொழிகளிலும் பல பாவங்களிலும் பல அம்சங்களை பொதிந்து உலகிற்கு சுடர்விடும் ஒளியாக மிளிர்கிறது. பல கலைஞர்கள் மும்மூர்த்திகளின் வழித் தோன்றல்களில் உருவான சிஷ்ய பரம்பரையினர் இசையின் மகிமையை உலகறியச் செய்கின்றனர். எவ்வாறான ஜீவராசிகளினாலும் முதல் முதல் கண்கண்ட தெய்வமாக அன்னை ஆனவள் தோற்றமளிமளிக்கிறாள்.

''தாயிற் சிறந்த கோவிலுமில்லை'' எனத் துதிக்கிறோம். அதேபோல இசையிலும் மாதா என்பது முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மாதா, பிதா, குரு இம்மூன்று அம்சங்களையும் உணராதவர் இல்லை. உணராதவர் மனிதரும் இல்லை. இசையிலும் இவையே கண்களாகத் தோற்றமளிக்கின்றது. இசையின் மாதாவாகத் திகழ்வது ஸ்ருதி ஆகும். தாயில்லாமல் சேயில்லை. அதேபோல சுருதி இல்லாது இசையில்லை. இசையின் பக்கபலமான சுருதியின் தோற்றத்தில் இறைவரே ஆதாரமாவதைக் காணலாம்.

அம்பிகை கொலு வீற்றிருக்கிறாள். ஒருபுறம் திருமகள் சாமரை வீசுகிறாள்; மறுபுறம் வீணையுடன் அமர்ந்திருக்கிறாள் கலைவாணி. அம்பிகை வீணையை வாசிக்கச் சொல்கிறாள். கலைவாணி அமுதமெனப் பொழிகிறாள். இசையை மெல்ல வரும் விரல்களினின்றும் எத்தனை நாத வர்ணம். அந்த மதுரமான இசை எல்லோரையும் மயக்குகிறது. ஆகா – ஆகா என்று தேவலோக மாந்தர்கள் வியக்கும் ஒரு கட்டத்தில் அன்னையும் அந்த இசையில் மயங்கி ஸபாஸ் என்கிறாள். மறுகணம் வீணை வாசிப்பதை நிறுத்திய கலைவாணி மயங்கிச் சாய்கிறாள். மயக்கம் தெளியக் கலைவாணி ஏன், என்ன நடந்தது? என வினவ ஜெகன் மாதர் என் வாசிப்பை ரசித்து ஸபாஸ் சொன்ன குரலின் இனிமையில் என்னை மறந்து மயக்கமுற்றேன். எனது கச்சபி வீணையில் பிறந்தது இசை தானா? எனச் சந்தேகம் கொண்டேன். என் வீணை இசை எங்கோ மறைந்துவிட்டது. தங்கள் குரலின் எழுந்த நாதம் எங்கும் நிறைந்துவிட்டது. அதன் தடுமாற்றம் தான் காரணம் எனக் கூறினாள். அன்னை கலைவாணியை தேற்றுகிறாள்.

அன்று அன்னை கூறிய ஸ பா ஸ் என்ற மொழி தான் ஸ்ருதி ஆயிற்று. அன்று தான் இசையில் ஸ்ருதி பிறந்தது. பார்த்தீர்களா? எங்கள் மாதாவின் படைப்பும் இறைவன் தான். இசையின் மாதாவின் படைப்பும் இறைவன் தான். ஆம், ஸபாஸ் என்ற சொல்லின் அழுத்தத்தைக் கூர்ந்து கவனித்தால் சுருதி சேர்ப்பதற்கு நாம் உபயோகப்படுத்தும் ஸபாஸ் என்னும் சங்கேதாட்சரங்களைக் காணலாம். அதனால் தான் சுருதி மாதா என்ற பெயர்பட்டது. இசையின் மகத்துவத்தில் இறைவரே சஞ்சரிக்கிறார். ஆதாரம் பூஜிய ஸ்ரீ ஹரி தாஸ் சுவாமி.

இவ்வாறான இசையில் மரம், செடி கொடிகளான தாவர வஸ்துக்களுக்கு உயிரில்லாவிடில் அவைகளில் ரூபங்கள் மாத்திரம் அப்படியே இருந்து இலைகளை உதிர்ந்து கட்டைகளாகவும் சுள்ளிகளாகவும் காணப்படுகின்றன. அதேபோல் மானுடனுக்கும் ஆவி போனபின் ரூபம் அப்படியே இருந்தபோதிலும் உணர்ச்சியற்றும் அசைவற்றும் சகல தாதுக்களும் ஐம்புலன்களும் நலிவுற்று இருப்பதுபோல சங்கீதத்திலும் உயிர்நிலையாகிய பாவம் இல்லாவிடில் சங்கீதம் ஸ்வாரஷ்யமில்லாமலும் உணர்ச்சி இல்லாமலும் வெறும் வரட்டு ஸப்தமாகி விடும்.

பாட்டில் பாவமே இல்லை எனக் கூறுகின்றோம். சிலரது பாட்டு பாவ புஸ்தியுடன் இருக்கிறது என்று சொல்கிறோம். பாட்டில் பாவம் என்ன என்பதை ஆராய்தல் வேண்டும். பாவம் என்பது முதிர்ச்சியடைந்த பாட்டில் தான் இருக்கும். இளம் பாட்டில் இருப்பது அரிது. இங்கு கூறும் இளமை முதுமை என்பது வயதைக் குறிப்பது இல்லை. அனுபவத்தையும் ஞானத்தையும் பாட்டின் உயர் தரத்தையும் குறிக்கும். சங்கீதத்தில் நாதம் மூலம் பாவத்தை உண்டு பண்ணுவது ராகமே. இவ் ராகத்தில் தான் பாவம் என்பது பூரணமாய் உள்ளது. இது எம் மொழியையும் மீறியது. முதலில் நாத ரூபமாய் உள்ள ராகத்தில் த்வனி விமரிசைகளே நம்மைக் கவர்ந்த பிறகு தான் சாகித்தியத்திலுள்ள பொருளையும் அனுவவிக்கிறோம். உதாரணமாக சங்கராபரண ராகத்தை எடுத்துக்கொண்டால் இறைவன் சூடும் எழில் அணியாம் என்று அறையப்படுவது சங்கராபரணம் என ராக லட்சணச் சூத்திரத்தில் கூறப்படுவதிலிருந்து இவ் ராகப் பெருமையை அறியலாம். இவ்வாறு தான் எல்லா ராகமும் பெருமை மிக்கது.

உதாரணமாக எம்மொழியிலும் பாவம் மிக்க இசையை அனுபவிக்கலாம்.

உதாரணமாக தியாகராஜரின் கிருதியை ஆராய்ந்தால்,

இராகம் – தர்பார் தாளம் – ஆதி

**பல்லவி**

யோசனா கமல லோசனா நறுப்ரோவ

**அனுபல்லவி**

ஸ சன தெரியக நொருல
யாசன சேது நறுசு நீகு
தோசன த்யுதி விஜிதா யுதி வி
ரோசன நறுப் ரோவ நிங்க (யோ)

**பல்லவி**

தாமரைக் கண்களையுடையவனே என்னை காப்பதற்கு இன்னும் யோசனையோ?

இரகசியம் அறியாமல் நான் உன்னை அன்றி வேறொருவரை இரப்பேன் என்று உனக்கு தோன்றியதா? கணக்கற்ற சூரியர்களின் ஒளியையும் வெல்லக்கூடிய தெசோமயமானவனே! என்னைக் காத்தருள வேண்டும்.
(யோசனா)

மேலே கூறிய கிருதிகளில் இருந்து அம் மொழியை அறிந்தவர்கள் தான் கருத்தை விளங்கும் இசையுடன் இரசிப்பர்.

இதிலிருந்து சங்கீதத்தை எப்பாஷையிலும் பாடலாம். வாத்யம் மூலம் கேட்கும் சங்கீதத்தையும் சாகித்தியம் தெரியாமலே கேட்டு அனுபவிக்கிறோம். புஷ்பமாகிற ராகத்தோடு நா ரா கி ற வார்த்தைகளும் சேர்ந்து அவ்ராகத்தால் ஏற்படும் உணர்ச்

சியில் இருந்து வார்த்தைகளில் பொதிந்து கிடக்கும் தத்துவம் இன்னும் அதிகமாகப் பிரதிபலிக்கின்றது.

பண் தமிழ் இசை வரலாறு மிகப் பூர்வீகம் வாய்ந்தது. ''துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்கு சங்கத்தமிழ் மூன்றும் தா'' என ஔவைப் பிராட்டியின் வேண்டுகோளுக்கிணங்க, சங்கீத காலத்திற்கு முற்பட்ட தனித்துவமான கலப்பற்ற வளர்ச்சியையும் நுணுக்கங்களையும் இசை மரபையும் கொண்டு விளங்குவது பண், தமிழ் ஆகும். இச் சங்கத்தமிழ் மூன்றிலும் இறைவனுக்குப் பிரியமான இசையானது சங்கீதமாக வலுப்பெற்று நிற்கிறது இச் சங்கீதங்களில் சில செவிக்கு இன்பத்தைக் கொடுக்கும். சில சங்கீதம் கலையின் மேன்மையைக் காட்டும். சில புத்திக்கு அதிக வேலையைக் கொடுக்கும். சில பக்தி ரசத்தை உருவாக்கும். இவ் யுத்திகளைக் கையாளக் காரணமானது ஒவ்வொரு கானத்திலும் காணப்படும் பாவமே. பாவம் என்பது கானத்தில் ஜீவன் இருப்பதாகவும் அந்த ஜீவன் கேட்பவர்களுக்கு ஜீவனைக் கொடுப்பதாயும் கொள்ளவேண்டும். இதைக் கொண்டுதான் பிராணிகளும் சிசுக்களும் சங்கீதத்திற்கு வசப்படுகிறதென்றும், வியாதிகளை சங்கீதத்தினால் குணப்படுத்தலாம் எனவும் சொல்லப்படுகின்றது. மழை எவ்வாறு பெய்கிறது? அதனை அடைமொழியாக கானமழை எனக் கூறுகிறோம். சங்கீத கலாநிதி முடிகொண்டான் வெங்கட் ராமஐயரும் ஆதாரத்தைக் காட்டிக் கூறியுள்ளார்.

இச்சிறப்பம்சம் மிக்க கர்நாடக இசை பாரத நாட்டின் அரும் பொக்கிசமாக விளங்குகின்றது. ஆனாலும் இசையானது இறைவனால் நமக்கு அருளப்பட்டதன்றி தனியொரு மனிதனால் தானாக உருவாக்கப்பட்டதல்ல. இதை நாம் பக்தி பூர்வமாக இறைவனுக்கு அர்ப்பணம் செய்வோமேயானால் அதன் மகத்துவம் தனிதான். இதன் அடிப்படையில்தான் தற்காலத்தில் இசையில் நாட்டம் மிக்கவர்கள் சங்கீத பூஷணங்களாகவும் மிளிர்கின்றனர். இந்நெறியில் திகழவேண்டியவர்களுக்கு சில தகுதிகள் அடக்கப்பட்டிருக்கவேண்டும்.

தன்னடக்கம்
கடவுளிடம் பற்று
குருவிடம் என்றும் மாறாத பக்தி

அயலவரையோ மாணவரையோ பெரியார்களையோ கௌரவிக்கத்தான் இசை பிறந்தது எனக் கருதக் கூடாது.

இவ் இசையினால்தான் எல்லாம்வல்ல பரம்பொருளை ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' என மெய்யுருகிப் பாடவேண்டும். இசை கேட்டு எழுந்தோடி வந்தது யார்? அவனே இறைவன். ஏனெனில் இசையினையே தஞ்சமாகக் கொள்பவனை இறைவன் தன் வசப்படுத்துகிறான். இதனை நாம் இந்நிமிடமே வெளிப்படையாகக் காணப்படக்கூடியதாக உள்ளது. ஏனெனில் அவ்வாறானவர்கள் தமது வாழ்வை இறைவனுக்கு சமர்ப்பிக்கின்றனர்.

தனது இளமையை மறந்து, அழகு நிலையற்றது என இறைவனை வேண்டி இசையினால் இறைவனை அடைந்தார். அவ்வாறு இறைவனை நாம் அடைய எண்ணும்போது நான் என்ற ஆணவமும், செய்தேன் என்ற மனப்பாங்கும் அழிய வேண்டும். இந்நிலைமை மாறவேண்டும். இறைவா எல்லாம் நீ எனக்கு அருளியது என்ற மனப்பான்மையுடன் செயல்படுவோமேயானால் மக்களுக்கும் ஊறு வராது, சங்கீதத்திற்கும் ஊறு வராது.

# அந்தநாள் ஞாபகம்......

திருமதி நா. சிவரத்தினம்
பழைய மாணவி ஆசிரியை

ஏறக்குறைய நாற்பத்தெட்டு ஆண்டுக ளுக்கு முன் எனக்கு ஐந்து வயது. அறியாப் பருவம். பிஞ்சு மனம். பள்ளிக்குக் கள்ளம். திடீரெனப் பிள்ளை பிடிகாரர் போல் சில கிழவர்கள் வீடுவீடாய்ப் புகுவார்கள். பருந்து கோழிக்குஞ்சைத் தூக்குவதுபோல் எங்களைத் தூக்கி, துள்ளித்திரிகின்ற காலத் திலே எங்கள் துடுக்கடக்கித் தோளிலே சுமந்து சென்று பள்ளிக்கு வைத்த, தெடுத் தனை ஊரைச் சேர்ந்த அந்தப் பெரியார் களை ஒருமுறை நினைத்துப் பார்க்கிறேன்.

அவ்வாறு உருவாக்கிய கலைக் கூடந் தான் எங்கள் யார்க்கரு விநாயகர் வித்தி யாலயம். தெற்கே யார்க்கரு விநாயகரும், வடக்கே பத்திரகாளியம்மனும் காவல் காக் கும் தெய்வீகச் சூழலிலே, கன்னலும், செந் நெலும், கதலியும் செழித்தோங்கும் கீழ் கரவையிலே, நெய்தல் நிலமும் அணித்தாக இருக்க மருதநிலக் கழனிகள் நடுவே காட்சி யளிக்கிறது எம் கலங்கரை விளக்கம். அதன் மூர்த்தி சிறிது எனினும் கீர்த்தி பெரிது.

''காணிநிலம் வேண்டும் பராசக்தி காணிநிலம் வேண்டும்'' என்று பாரதி பாடியது போல, கரவாது, வரையாது வாரிவழங்கும் வள்ளல்கள் நிறைந்த கீழ் கரவையிலே இப்பாடசாலைக்குக் காணி வழங்கி, அத்திவாரம் இட்டு அடிகோலிய வள்ளல் ஒருவரை எனக்கு ஞாபகம் வருகிறது.

நரைத்த தலையில் கன்னவகிடு எடுத்து, தூயவெள்ளை வேட்டியுடன், வெண்துகில் உத்தரீயத்தினால் ஒரு போர்வையுடன் காட்சிதந்த அந்த வள்ளல், எல்லோராலும் அன்பாக 'கிளாக்கர்' என்று அழைக்கப் படும் திரு. சி. வல்லிபுரம் அவர்களே. இந்த வள்ளலை, பெருந்தகையை இலகுவில் எவராலும் மறந்துவிட முடியுமா? இப் பொன்விழா நாயகன் புண்ணியவான் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பட வேண்டிய ஒருவர்.

கீழ்கரவை, துன்னாலை, கப்புது, அந்தணந்திடல் போன்ற இடங்களில் இருந்து பலபதவிகளை வகிக்கும் கல்விமான் களுக்குக் ஆரம்பக்கல்வி அளித்து, அவர் களை உருவாக்கிய பெருமை யார்க் கருவுக்கே உரியது. இதனை எவராலும் மறுக்க முடியாது.

அத்தகைய கல்விமான்களை உருவாக் கிய அதிபர், ஆசிரிய மணிகளை ஒருகணம் சிந்தித்துப் பார்க்கிறேன்.

யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் கொடிகட்டிப் பறந்த ஒருகாலம் இருந்தது. அந்தப் பொற்காலத்தை உருவாக்கிய, சிறந்த அதிபர் என்ற உருவம் ஒன்று என் கண்முன் நிழலாடுகிறது.

நடுவகிடு எடுத்து வாரி இழுத்த தலை; பரந்த நெற்றி; விரிந்த மார்பு; மாசுமறு வற்ற பூரணசந்திரமுகம்; சங்குப்பற்கள், பொன்னிறமேனி, களிறன்னநடை; பெருத்த தோற்றம்; தெய்வீகச் சுடர்விடும் கண்கள், முல்லைச்சிரிப்பு. இவையே அவரது தோற் றம். ஆயிரம்பேர் கூடியிருக்கும் சபையிலும் அவர்உருவம் புறம்பாய்த் தெரியும். அவர்தான் எல்லோராலும் வித்துவான் என் றழைக்கப்படும் திரு. சி. இ. கந்தசாமி.

கவிச்சக்கரவர்த்தி என்றால் கம்பன். பாட்டுக்கு ஒருபுலவன் பாரதி. வித்துவான் என்றால் திரு. எஸ். ஆர். கந்தசாமிதான். இது நடந்தறிந்த உண்மை.

''நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே'' எனக் குற்றங் கண்ட இடத்தில் கண்டிப்பதில் அவருக்கு நிகர்

அவரே. தாளையடியில் இருந்து பிரம்பு வரும். ஆனால் அவர்பார்வை ஒன்றே போதுமே மாணவர் நிலம் நோக்க.

இன்றைய அரும்புகளாகிய நீங்கள் மலர்ந்து ஆசிரியத் தொழிலில் மணம் வீசும் போது, மாணவசமுதாயத்தை மண்ணாக்கக்கூடாது. நீங்கள் ஆசிரியர் கலாசாலையில் இடர்படக் கூடாது. என்று அறிவுரை கூறி, க. பொ. த. சா. வகுப்பிலே, வேம்பாகக் கசக்கும் நன்நூலை, அணியிலக்கணத்தை, யாப்பிலக்கணத்தை கொஞ்சு மொழியிலே, விஞ்சு தமிழிலே எம் நெஞ்சு நிறைய அள்ளித்தந்த அந்த அறிவுச்சுடரை எம்மால் மறக்க முடியுமா?

மலையில் ஊற்றெடுக்கும் ஆறு. வித்துவான் வாயில் ஊற்றெடுக்கும் இலக்கிய ஆறு.

கந்தபுராணம் படிப்பிக்கும் போது முருகன் அப்படியே இறங்கி வருவான். அவர் தொடாத துறையே இல்லை. ஏழை மாணவர்க்கு இரங்க எப்பொழுதும் அவர் மேலங்கிப் 'பொக்கற்' றுக்குள் பணம் காத்திருக்கும்.

தன்னுடைய ஆளுமையினாலும், அன்பினாலும் அரவணைத்து, அனுசரித்து எத்தனையோ அகல் விளக்குகளை அறிவுச் சுடர்களை, அணையாத தீபங்களை ஏற்றி வைத்த அறிவுக்கடல். தூண்டாமணி விளக்கு இன்று இல்லையே! அவர் யார்க்கரு இருக்கும் வரை, பழைய மாணவர் இருக்கும் வரை நெஞ்சில் நிறைந்திருப்பார். அவரை இன்று நினைத்தாலும் எம் நெஞ்சில் உதிரம் கொட்டும்.

வித்துவான் காலத்திலே எங்களை உருவாக்கிய ஆசிரியமணிகள் சிலரையும் நான் நினைத்துப் பார்க்கிறேன். அன்பான வார்த்தைகளால் அணைத்து, அறிவையூட்டி பலகாலம் ஆசிரியராகவும், சிலகாலம் அதிபராகவும் கடமையாற்றிய வியாபாரி மூலையைச் சேர்ந்த திரு. மூ. பொன்னையா அவர்களின் பொன்மொழிகள் என் செவிகளில் ஒலிக்கின்றன. மாணவர் தவறு விடும் போது பல ஏச்சுக்கள் விழும். அடுத்த நிமிடம் அவர் சிரிப்புத் தவழும்.

தந்தையாக, தாயாக எம்மைப் புரந்து அறிவக்கண்ணைத் திறந்த அந்த ஆசிரியப் பெருந்தகை நோயற்ற வாழ்வு வாழ யார்க்கருவானை வேண்டுகிறேன்.

ஆடம்பரமற்ற, எளிமையான செம்மையான வாழ்வு வாழ்ந்து வருபவர் தெருத்தனை ஊரைப் பிறப்பிடமாகவும் முடக்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள் அடுத்த ஆசிரிய முத்தாகும். "ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி பெண்ணே" என்று இல்லாமல் தானே வாழ்ந்து காட்டும் உத்தமர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்கவர். ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதுபவர். மாணவரிடம் அதனையே எதிர்பார்ப்பவர். மாணவர் ஒழுக்கந்தவறும் சந்தர்ப்பம் கண்டால் உருத்திர மூர்த்தியாகி விடுவார். திறமையான மாணவரிடம் அன்புவைத்திருப்பார். ஆனால் வெளிக்காட்டமாட்டார், பிறர் எவர்க்கும் தெரியாத கருணை அவர் உள்ளத்தில் உண்டு. நெருங்கிப் பழகியவர்களே கண்டுபிடிப்பர். மொட்டவிழ்ந்த அமைதியான சிரிப்பு அவர் வாயில் தவழும். அவர் அறிவின் ஆழத்தை அளக்கமுடியாது. சைவசித்தாந்தக் கடல் சகல பாடங்களையும் போதிக்கும் சர்வ வல்லமையுள்ளவர். தேவாரத்தை இசையுடன் பாடினால் மெய்சிலிர்க்கும். இரத்தினச் சுருக்கமான பேச்சு. இந்த ஆசிரிய மணி நீடூழிவாழ இறைவன் அருள்பாலிப்பானாக.

கன்னத்தில் குழிவிழ வாய்விட்டுச் சிரிக்கும் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த திரு. மு. நமசிவாயம் ஆசிரியர் அவர்களையும் எம்மால் மறக்கமுடியாது. எங்களுக்கு ஆரம்பக் கல்வி அளித்து அத்திவாரம் இட்ட அந்த ஆசிரியப் பெருந்தகை பூரணசுகத்துடன் இருக்க வேண்டும் என இறைவனிடம் வேண்டுகிறேன்.

மேனை, எனஅன்பாக அழைத்து தந்தை போல எம்மைப் புரந்து, தாயாக அரவணைத்துக் கல்வியூட்டிய திரு. க. கந்தசாமி அவர்களும் என் நினைவுக்கு வருகிறது.

இந்தவரிசையில் சில பெண்ணாசிரியைகளையும் நாம் மறக்க முடியாது.

பத்தாவுக்கேற்ற பதிவிரதையாக, அமைதியாக வாழ்க்கை நடாத்தி, அன்புடன் எமக்கு ஆங்கிலக் கல்வியை யூட்டி, எங்களை வழிநடத்திய திருமதி. கனகாம்பிகை. கந்தசாமியையும் எம்மால் மறந்து விட முடியாது.

ஆடலுடன் பாடல், கும்மி. கோலாட்டம், உடற்கல்வி, தையல் முதலிய சகலதுறைகளையும் எங்களுக்குச் சொல்லித் தந்து, ஆசிரியத் தொழிலுக்கே இலக்கணமாக வாழ்ந்தவர் திருமதி. மாணிக்கம், சிவகுருநாதன். பொறுமை என்னும் நகையணிந்து பெருமை கொள்பவர். சகிப்புத் தன்மை வாய்ந்தவர். கல்விபோதிப்பதில் சிறந்தவர். ஒழுங்கு, ஒழுக்கம் என்பவற்றிற்கு முன்மாதிரியாகத் திகழ்பவர். மாணவிகளின் ஒழுக்கத்தைக் கண்ணுங் கருத்துமாகக் கவனிப்பவர். எங்களுக்குச் சகலகலைகளையும் போதித்து 'அ' சொல்லித்தந்து ஆரம்பக்கல்வியூட்டிய அந்த அருமையான அன்னையை நினைவு கூர்கிறேன். அவர் நோய்வாய்ப் பட்டிருந்தாலும், பூரண சுகமடைய அவர் குல தெய்வம் யார்க்கரு விநாயகர் அருள் பாலிப்பார்.

தற்போது புதிய அதிபர் தலைமையின் கீழ் ஆசிரியர் குழு. பழைய பொற்காலத்தை மீண்டும் கொண்டுவரும் என்பது திண்ணம்.

---

# 'சிறுசுகளின் பிரகடனம்'

குப்பிளான் ஐ. சண்முகம்

விலங்கிட வேண்டாம்
வீணாக எம்மை
வகுப்பறைச் சிறையில்
பூட்டிட வேண்டாம்

எங்கள் சிறுவீடு
அம்மாவும் அப்பாவும்
அன்பாய் அரவணைக்க
அக்கா அண்ணாவுடன்
அடித்தோடி விளையாட
சின்னப் பாப்பாவின்
பொக்கை வாய்ச்சிரிப்பை
மறுபடியும் மறுபடியும்
பக்கத்தேயிருந்து பார்த்திருக்க
மாமா மயிர்க்கரத்தால்
பந்தாகத் தூக்கி பரவசமூட்டிவிட
பாட்டியின் பாயில்
பலநூறு கதைகேட்க

விலங்கிட வேண்டாம்
வீணாக எம்மை
வகுப்பறைச் சிறையில்
பூட்டிட வேண்டாம்

நீல வானம்;
பஞ்சாய் திரண்டுவரும் முகிற்கூட்டம்
பாடிப் பறக்கும் குருவிக் குலங்கள்
வீசுங் காற்றில்
சலசலக்கும்
பச்சை படர்ந்த மரஇலைகள்
குளிர் நிலா
கண் சிமிட்டும் தாரகைகள்
உதயத்து மஞ்சளில்
ஆயிரங் கரம்நீட்டும் தங்கச் சூரியன்
வடிவான பூக்கள்
வண்ணத்துப் பூச்சிகள்
வாலாட்டும் நாய்குட்டி
இவையே எம் தோழர்களாக...

விலங்கிட வேண்டாம்;
வீணாக எம்மை
வகுப்பறைச் சிறையில்
மாட்டிட வேண்டாம்.

# கட்டைவேலி,

# யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் வரலாறு

ஈழநாட்டின் சிரம்போல விளங்குவது வடமராட்சிப் பகுதி. இப்பகுதியின் பாரம்பரியக் கிராமங்களில் கரவெட்டியும் ஒன்று. கரவெட்டி என்னும் பாரம்பரியக் கிராமம் நிர்வாக வசதிக்காகக் கிழக்கு, மேற்கு, மத்தி, வடக்கு எனப் பகுக்கப்பட்டுள்ளது. கரவெட்டி என்னும் கிராமத்திலே வாழ்ந்த வேலாத்தை உடையார் எனும் வேலாயுத உடையார் மீது நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பாடிய கரவை வேலன் கோவை ஈழத்து இலக்கிய வரலாற்றிலே குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது. புலவர் பாடும் புகழுடைய கரவெட்டியிலே அறிஞர்கள், புலவர்கள், வரகவிகள், சிந்தனையாளர்கள், பரோபகாரிகள், முன் முயற்சியாளர்கள் எனப் பல திறத்தினர் காலத்திற்குக் காலம் தோன்றியுள்ளனர்.

சைவமும் தமிழும் நன்கு பேணப்பட்ட கரவெட்டிக் கிராமத்திலே ஆலயங்களிலே புராணப் படிப்பு, திருவிழாக்கள் முதலியன காலத்திற்குக்காலம் சிறப்பாக நடைபெறுவது வழக்கம். யாழ்ப்பாணத்திலே கந்த புராண கலாசாரம் ஆழமாக வேர் விட்ட பகுதிகளில் கரவெட்டியும் ஒன்றாகும்.

நாவலர் மரபிலே சைவத்தமிழ் எழுச்சியின் வெளிப்பாடாகப் பாடசாலைகள் நிறுவத் தொடங்குவதற்கு முன்னரே வடமராட்சிப் பகுதியில் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் நிறுவப்பட்டுவிட்டன. இந்த வகையில் உடுப்பிட்டியிலே அருளம்பல முதலியார் நிறுவிய சைவத் தமிழ்ப் பாடசாலையைச் சுட்டிக் காட்டலாம்.

மேலைத் தேயத்தவர்கள் ஈழத்திற்கு வந்து பாடசாலைகள் நிறுவுவதற்கு முன்னர் திண்ணைப் பள்ளிகள் பல இப்பகுதியிலே நிலவியமைக்கான சான்றுகள் பலவுள.

திண்ணைப் பள்ளிகள் நிலவிய பகுதிகளை மையமாகக் கொண்டே கிறிஸ்தவ மிஷனரிமாரின் கல்விப்பணியும் தொடர்ந்தது. கல்விப் பணியினூடு மதப்பிரசாரம் ஒன்று நிகழ்வதைக் கண்ணுற்ற சுதேசிகள் தம் மதாபிமானம் காரணமாகப் பாடசாலைகள் நிறுவும் பணியிலே ஈடுபட்டனர். இம் மதாபிமானப் பணியின் உச்சமாக அல்லது குவிமையமாக அக்காலத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கமே விளங்கியது.

வடமராட்சியில் சிறப்பாகக் கரவெட்டிப் பகுதியில் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் நிறுவப்பட்ட போதிலும், கரவெட்டி கிழக்கில் சைவப் பாடசாலைகள் நிறுவும் பணியில் எவரும் ஈடுபடவில்லை. கரவெட்டி கிழக்கு அக்காலச் சூழ்நிலையில் கல்வியிலும் பின் தங்கிய பகுதியாகவே விளங்கியது. ஆரம்பக் கல்வி பெறுவதற்குக்கூட இரண்டு மூன்று மைல்கள் நடந்து செல்லவேண்டி இருந்தது. சிறப்பாகக் குழந்தைகள் மழை, வெய்யில் காலங்களில் பாடசாலை செல்வதிற் பலவகையான சிரமங்களைக் கண்டனர். கரவெட்டியின் மற்றைய பகுதிகளோடு ஒப்பிட்டு நோக்கும்பொழுது, யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் நிறுவப்படுவதற்கு முன்னர் கரவெட்டி கிழக்கின் பெரும்பகுதியில் எழுத்தறிவுப் பாரம்பரியம் குறைவாகவே இருந்தது எனக் குறிப்பிடலாம்.

கரவெட்டி கிழக்கு மக்களுக்கு எழுத்தறிவுப் பாரம்பரியத்தை ஊட்டிச் செழுமையான ஓர் கல்வி மரபை உருவாக்க வேண்டுமென்று முதன்முதலாகச் சிந்தித்தவர் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த சிதம்பரநாதர்

வல்லிபுரம் அவர்களேயாவர். கரவெட்டி கிழக்கின் கல்விக் கண்ணாக விளங்கும் திரு சி. வல்லிபுரம் அவர்களை நன்றியுடன் நினைவு கூராதவர்கள் கரவெட்டி கிழக்கிலே இருக்க மாட்டார்கள். ஐம்பது வயதுகளைத் தாண்டித் தான் ஆக்கிய கலாசாலை கலைக்கோயிலாக உயர்ந்து பொன் விழாக் கொண்டாடுவதைச் சொர்க்கத்தில் இருந்து பார்த்து நிறுவுனரின் ஆத்மா நிச்சயமாக மகிழ்ச்சியடையும். ''ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்த புண்ணியம் எல்லாப் புண்ணியங்களிலும் மேலானது'' என்று பாரதி பாடிப் போனானே. பாரதியின் பரிந்துரையின்படி அமரர் சி. வல்லிபுரம் சொர்க்கத்தில் வாழ்வார் என்று நிச்சயமாக நாம் நம்புகிறோம்.

1939ஆம் ஆண்டு உலக வரலாற்றிலேயே மிகமுக்கியமான ஆண்டுகளுள் ஒன்றாகும். இந்த ஆண்டிலேதான் கரவெட்டி கிழக்கு யார்க்கரு விநாயகர் ஆலயச் சூழலிலே உயர்திரு. சி. வல்லிபுரம் அவர்களின் காணியில் பதினைந்தடி நீளமான ஓலைக் கொட்டில் ஒன்று போடப்பட்டது. கொட்டில் போட்டு வித்தியாலயத்தை நிறுவ முன்னின்றுழைத்த உயர்திரு சிதம்பரநாதர் வல்லிபுரத்திற்கு உதவியாகவும், உந்துசக்தியாகவும் தோளோடு தோள் நின்ற மூல கர்த்தாக்களாக உயர்திரு வல்லிபுரம் கந்தையா, உயர்திரு ஏரம்பர் வேலுப்பிள்ளை ஆகியோரைக் குறிப்பிடலாம். வெண்மணல் பரப்பப்பட்ட அந்த ஓலைக் கொட்டிலிலே தான் யார்க்கரு விநாயகர் வித்தியாசாலை எனும் பெயரோடு இன்றைய வித்தியாலயம் ஆரம்பமானது.

அரை நூற்றாண்டுகளைக் கடந்து பொன்விழாக் காணும் இவ்வித்தியாலயத்தின் வரலாறு ஒரு தலைமுறையின் கல்வி வரலாறாகவும், ஒரு பகுதி நிலப்பரப்பின் எழுத்தறிவு வரலாறாகவும் விளங்குகின்றது. அன்றைய காலகட்டத்திலே 'தெருத் திண்ணைப் பள்ளிக்கூடம்' என்று அழைக்கப்பட்ட இவ் வித்தியாலயத்தில் கரவெட்டி கிழக்கில் வசிக்கும், ஏறத்தாழப் பத்துச் சாகித்தியத்தைச் சேர்ந்த பிள்ளைகள் கல்வி பயின்றனர். மிஷனரிமாரின் பள்ளிக்கூடங்களுக்கு அடுத்தபடியாகச் சாதியமைப்பைப் பேணாத ஒரு வித்தியாலயமாகக் கரவெட்டி கிழக்கு யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் விளங்கியமையை அதன் பொன்விழா நாளிலே பூரிப்போடு நினைவு கூரவேண்டும். யாழ்ப்பாணச் சமூகவியல் வரலாற்றிலே இந்நிலை விதந்து குறிப்பிடப்படவேண்டிய ஒரு அமிசமாகும்.

1939ஆம் ஆண்டு சம்பிரதாயபூர்மாக ஆரம்பிக்கப்பட்ட வித்தியாலயம் 1943ஆம் ஆண்டு அரசாங்க உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. 39 – 43 காலப்பகுதியிலே பாடசாலை முகாமையாளருக்கும், அரசாங்கத்திற்குமிடையே சிற்சில நிபந்தனைகள் சார்பான நிர்வாகச் சிக்கல்கள் தோன்றின. முகாமையாளரான சி வல்லிபுரம் அவர்களின் குன்றா உழைப்பாலும், குறையா ஊக்கத்தாலும் தனித்துவம் மிக்க பாடசாலையாக இவ்வித்தியாலயம் விளங்கியது. அரசாங்கத்துடன் இணைந்து வித்தியாலயத்தை நடத்துவதிற் சிக்கல்கள் தோன்றியதால் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் இப் பாடசாலை ஒப்படைக்கப்பட்டது. ஒருசில நாட்களில் பாடசாலை நிறுவுனருக்கும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற்குமிடையே முரண்பாடுகள் தோன்றியதால் மீண்டும் நிறுவுனராலே இவ்வித்தியாலயம் பொறுப்பேற்கப்பட்டது.

1940ஆம் ஆண்டளவில் இந்துபோட் இராஜரத்தினம் அவர்களின் தலைமையில் இயங்கிய சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் இவ்வித்தியாலயம் ஒப்படைக்கப்பட்டது. அரசாங்க உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்ட தினத்திலிருந்தே இன்று இவ்வித்தியாலயம் பொன் விழாவைக் காணுகின்றது.

இவ்வித்தியாலயத்தின் ஆரம்பநாட்கள், எமது கிராமத்தின் ஒற்றுமையையும் தாராள மனப்பான்மையையும், அறிவுத் தேடலில் அவாவுற்றிருந்த ஒரு மானிட நேயத்தையும் நினைவுகூர வைக்கின்றன.

பாடசாலைப் பிள்ளைகளுக்கு மதிய போசனமாகச் சோறு வழங்கப்பட்டது. இச்சோறு வழங்கல் உதவிகளிலே முன்னின்றுழைத்த ஏரம்பர் சின்னத்தம்பி குடும்பத்தினரை நன்றியறிதலுடன் மனத்திருத்துதல் வேண்டும்.

உணவுவழங்கலிலும், பாடசாலைப் பணிகளிலும் முன்னின்றுழைத்த பல குடும்பத்தினரின் கல்வி மரபு இன்று வாழையடி வாழையாக வளர்ந்து வருவதையும் அவதானிக்கலாம்.

இப்பாடசாலை நிறுவப்பட்ட நாட்களில் இருந்து ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் கடமையாற்றிய பலரை இன்றைய தலைமுறையினர் அறிய வாய்ப்பிருக்கவில்லை. பாடசாலை நிறுவப்பட்ட காலத்திலே மட்டுவிலைச் சேர்ந்த எஸ். வேலுப்பிள்ளை என்பவருடன் இணைந்து வி. இராசையா, வரணி ( தம்பான் )யைச் சேர்ந்த திரு. கந்தையா ஐயர் என்போர் குறிப்பிடக்கூடிய பணிகளைச் செய்துள்ளனர். திரு. கந்தையா ஐயர் பாடசாலைக்குச் சில தளபாடங்களைக் கொடுத்துதவினார் என்றும் அறிய முடிகின்றது. 1939 ஆம் ஆண்டு முதல், அதிபர் என்ற பெயருடன் புலோலியைச் சேர்ந்த சுப்பர் சந்திரசேகரம் என்பவர் பணியாற்றினார். இக்காலப்பகுதியிலே இவருடன் இணைந்து கரவெட்டியைச் சேர்ந்த ம. வேலுப்பிள்ளை ( நெடுங்கேணி ) கரவெட்டி கிழக்கு மு. ஐயப்பிள்ளை ஆகியோர் பணியாற்றினர்.

1940 ஆம் ஆண்டு தும்பளையைச் சேர்ந்த திரு. நடராசலிங்கம் என்பவர் பணி புரிந்தார். இவரோடு பருத்தித்துறை வியாபாரி மூலையைச் சேர்ந்த மூ. பொன்னையா கரவெட்டியைச் சேர்ந்த சின்னனக்கா என அழைக்கப்பட்ட இசைபெல்லா, கரவெட்டி கிழக்கு பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த பண்டிதர் மயில்வாகனத்தின் மனைவி ஆசைப்பிள்ளை, கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த ஆ. நமசிவாயம் (மயில் வாகனம்) தற்போது மட்டக்களப்பிலே பிரபல நொத்தாரிசு ஆகவும் தொழிலதிபராகவும் திகழும் திரு. சிதம்பரப்பிள்ளை முதலியோர் இக்காலப்பகுதியிலே வேதனமின்றிச் சிலகாலம் கல்வி கற்பித்தனர் என்று அறிய முடிகின்றது. இத்தகைய சூழ்நிலையிலே கட்டைவேலி, யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் அரசாங்க உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக நிறுவுனரின் முயற்சியினாலே பதிவு செய்யப்பட்டது.

இக்காலப்பகுதியிலே தலைமையாசிரியராகக் கடமையாற்றிய வே. கணபதிப்பிள்ளையிடமிருந்து இவ்வித்தியாலய அதிபர் பதவியை வித்துவான், எஸ். ஆர். கந்தசாமி பொறுப்பேற்றுக் கொண்டதும் இவ்வித்தியாலயத்தின் பொற்காலம் தொடங்கியது. 1948ம் ஆண்டு தொடக்கம் 1962ம் ஆண்டு வரை வித்துவான் எஸ். ஆர். கந்தசாமி இவ்வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றினார். வித்துவான் எஸ். ஆர். கந்தசாமி புலமைக்கும், அறிவுக்கும் இருப்பிடமான புலோலியைச் சேர்ந்தவர். ஆஜானுபாகுவான தோற்றமுடைய அழகன். ஒரு காவியநாயகனுக்குரிய தோற்றப் பொலிவும், மதிநுட்பமும், அறிவும், ஆளுமையும் நிரம்பியவர். யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தின் புகழ்பூத்த காலப்பகுதியின் பிதாமகர் அவர்.

ஐந்தாம் வகுப்புடன் இருந்த வித்தியாலயம், வித்துவான் எஸ். ஆர். கந்தசாமியின் காலத்திலேதான் S. S. C வரை உள்ள வித்தியாலயமாக உயர்ந்தது. பாடசாலை பல்வேறு துறைகளிலும் பலவகையான வளர்ச்சிகளைக் கண்டது இக்காலப்பகுதியிலேயே எனலாம்.

ஆற்றலும், உழைப்பும், உறுதியும் ஒழுக்கமும் மிக்க ஆசிரியர் குழாம் ஒன்று இக்காலப் பகுதியிலேயே வித்துவான் எஸ், ஆர். கந்தசாமியுடன் இணைந்து பணியாற்றியது. சிறப்பாகக் க. கணபதிப்பிள்ளை, ஆ. நமசிவாயம், திருமதி. மாணிக்கம் சிவகுருநாதன், க. கந்தசாமி, திரு. சி. வீரகத்தி முதலிய பலரைக் குறிப்பிடலாம். இவர்கள் யாவரும் வேதனத்திற்காக வேலை செய்யும் ஆசிரியர்களாக

அல்லாது தங்கள் சமூகத்துப் பிள்ளைகளுக்கு கல்வியறிவு ஊட்டுகிறோம் என்ற தியாக உணர்வோடு பணியாற்றியவர்கள். குறிப்பாகத் தமிழ் இலக்கிய இலக்கணப் புலமை வாய்ந்தவரும் நிறுவுனரின் பெறாமகனுமாகிய க. கணபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் அதிபர் வித்துவான் எஸ். ஆர். கந்தசாமி அவர்களுக்கு வலக்கரம் போல இருந்து உதவி புரிந்தமையையும் பொன் விழா நாளிலே நினைவு கூரவேண்டும்.

இக்காலகட்டத்திலே இப்பாடசாலை கல்வி, விளையாட்டு, கலாசார நிகழ்ச்சிகள் முதலியவற்றிலே குடாநாடு கடந்த புகழைப் பெற்றிருந்தது. பல்வேறு சங்கங்களிலும், பலவகையான பதவிகளை வகித்து வந்த அதிபர் வித்துவான் எஸ். ஆர். கந்தசாமியினால் பாடசாலையின் புகழும், தரமும், வசதிகளும் பெருகியமையை விதந்து குறிப்பிட்டேயாகவேண்டும்.

1962 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 13ம் திகதி வித்துவான் எஸ். ஆர். க. அமரரான பின் சிலகாலம் பதில் அதிபராகக் க. கணபதிப்பிள்ளையவர்கள் கடமையாற்றினார்கள். வடமராட்சிப் பகுதியின் கவனத்தை ஈர்த்த பல அதிபர்களை யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் கண்டிருக்கின்றது. இந்த வகையிலே திருவாளர்கள் மூ. பொன்னையா, வே. செல்லையா, த. வடிவேலு, மு. கந்தப்பு (மன்னவன்) மு. வேலுப்பிள்ளை, பொ. சோமாஸ்கந்தசிவம், வீ. செல்லத்துரை என்போரை விதந்து குறிப்பிடலாம்.

இன்றைய அதிபர் திரு வ. கணபதிப்பிள்ளை இவ் வித்தியாலயத்தின் பழைய மாணவர். இப்பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுழைத்த ஒரு குடும்பத்தில் இருந்து வந்தவர். எல்லோரையும் அனுசரித்து நடாத்தும் ஆளுமை மிக்கவர். இப்போதைய வளர்ச்சிக்கும், விழாவுக்கும் உந்து சக்தியாகத் திகழுபவர். வயதில் இளைஞரான இவரின் காலத்தலேயே வித்தியாலயம் பலவகையான விழாக்களை கண்டு இன்புற வேண்டும்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக இன்றுபலர் முன்னின்று உழைக்கின்றார்கள். காணியும், காணி வாங்கப் பணமும், பாடசாலை வளர்ச்சிக்கான பல்வேறு வகையான உதவி ஒத்தாசைகளையும் இக் கிராமமக்கள் செய்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் எல்லாம் வல்ல யார்க்கருவிநாயகர் திருவருள் பாலிக்க வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகிறோம்.

— மலர்க்குழு

---

செய்கதவம்! செய்கதவம்! நெஞ்சே, தவம் செய்தால்
எய்த விரும்பியதை எய்தலாம் — வையகத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை, அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு.

— பாரதி

"சனப்பெருக்கம் நாட்டின் அபிவிருத்திக்குத் தடையாக இருத்தல்" என்ற கருத்தை ஆதரிக்கும் ஒருவருக்கும் இக் கருத்தை எதிர்க்கும் ஒருவருக்கும் இடையில் நிகழ்ந்த

# ஒரு உரையாடல்

சீ. ரேவதி
ஆண்டு 11

மதிவதனியும் சகீதாவும் நிவாரணம் எடுப்பதற்காக கூட்டுறவுக்கடை ஒன்றுக்கு சென்று கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு கடைக்கு சென்று கொண்டிருக்கும் இடை நடுவில் இருவரும் களைத்து விட்டார்கள். அதனால் இருவரும் ஒரு மரநிழலில் இருந்து இளைப்பாறினார்கள். அப்போது அவர்கள் இருவருக்குமிடையேயும் சனத்தொகை அதிகரிப்பினால் தானே நாங்கள் இப்படி கஷ்டப்படுகிறோம் என்ற கருத்து வேறுபாடுகள் எழுகின்றன. இப்படி அபிவிருத்தி நடவடிக்கைகள் தடைப்பட்டு இருக்கிறது என்று சகீதா கூறுகிறாள். அதற்கு பதில் அளிக்கும் முகமாக மதிவதனி.

மதிவதனி: ஏன் அப்படி சொல்கிறீர்கள் சகீதா, எப்படித்தான் சனத்தொகை அதிகரித்தாலும் எல்லோரும் தங்களுக்கு ஏற்றவாறு வாழ்கின்றனர்.

சகீதா: அப்படி சொன்னால் சரியா? சனத்தொகை அதிகரிப்பினால் உடை, உறையுள் ஆகிய அத்தியாவசிய வசதிகள் பெற்றுக் கொள்வதில் கஷ்டம் ஏற்படுகின்றது.

மதிவதனி: நன்றாக இருக்கிறது உமது கருத்து ...... சனத்தொகை அதிகரிப்பினால் அத்தியாசிய வசதிகள் குறையும் என்று யார் சொன்னது?

சகீதா: இல்லை மதி, சனத்தொகை அதிகரிக்க அத்தியாவசிய தேவைகள் அதிகரிக்கின்றது தானே.

மதிவதனி: யார் இல்லை என்று சொன்னது?

சகீதா: இப்ப நீர் தானே இல்லை என்று சொன்னீர்.

மதிவதனி: நான் சொல்லவருவது எப்படி சனத்தொகை அதிகரித்தாலும் மக்கள் தமக்கு தேவையான தேவைகளை எப்படியோ பெற்றுக் கொள்கின்றார்கள். தானே! அதனால் அபிவிருத்தி திட்டங்கள் பாதிக்கப்படுகின்றனவா? இல்லை, ஒரு போதும் இல்லை, சகீதா.

சகீதா: சனத்தொகைப் பெருக்கத்தினால் இடப்பிரச்சனை ஏற்படுகின்றது அதனால் காடுகள் அழிக்கப்படுகின்றன. இதனால் பல விளைவுகள் ஏற்படுகின்றன.

மதிவதனி: காடுகள் அழிக்கப்படுவதால் அந்த நிலங்கள் மக்களின் விளைநிலங்களாக மாறுகின்றன. இதனால் மக்களுக்கு நன்மைதானே கிடைக்கும்.

சகீதா: என்னதான் நீர் சொன்னாலும் உமது கருத்தை என்னால் ஒத்துக் கொள்ள முடியாமல் இருக்குது.

மதிவதனி: நீர் ஒத்துக் கொண்டாலும் விட்டாலும் எனது கருத்து இது தான்.

## பொன்விழா சிறக்க வாழ்த்துகிறோம்!


துர்க்கா வாச்வேக்

மகாத்மா தியேட்டர் வீதி,
நெல்லியடி.

முருகன் ஸ்ரோர்ஸ்

மத்திய சந்தை,
நெல்லியடி.

✻

அழகன்ஸ் ஸ்ரோர்ஸ்

மத்திய சந்தை,
நெல்லியடி.

விநாயகர் ஸ்ரோர்ஸ்

நவீன சந்தை,
நெல்லியடி.

✻

ஸ்ரீ முருகன் மருந்துக்கடை

பிரதான வீதி,
நெல்லியடி.

ஏ. பரமசிங்கம்

அரிசிக் கடை,
பிரதான வீதி, நெல்லியடி.

✻

நடன முருகன் மெடிக்கல்ஸ்

பிரதான வீதி,
நெல்லியடி.

சிவசக்தி ஸ்ரோர்ஸ்

பஸ் நிலையம்,
நெல்லியடி.

# Some English Teaching Strategies in the G. C. E. Ordinary / Advanced Levels and GELT Classes

**Mr. S. K. Paramsothy**
Academic Staff
Point Pedro - GELT

The mode of selection of students to universities in Sri Lanka calls for a fairly high degree of performance in general and a higher degree of performance in particular from most of the students of the North-East Province. This higher performance being the Sine qua non for gaining University Admission, it is nothing but fair on the part of any pedagogue to expect a fairly high degree of intelligence from the budding and would be undergrads;, and creditably though, they have lived up to this expectation. Teaching English to these students proves to be an enlivening and enlightening endeavour, if the teacher adopts a slightly variant and innovative method. It may be stranger than fiction, If I confess that I have had ample opportunities of keeping a very attentive class whilst teaching and a busily self-occupied class whilst doing 'Fixation' or 'Application' Tasks. This experience, no doubt, is mutually rewarding.

A well-attended, a well- attentive and a self-consciously working class was observed, many a time, when the class was taken along the 'High Roads Of Literature' and Pross Materials, both from within and without the prescribed text materials of the U. G. C.

Marcus 'Brutus' in defence of the murder of Caesar; the Funeral oration of Mark Antony in defiance of Caesar's assassination by the conspirators; Portia's eloquent oratoryon 'Mercy' but, on a comparatively lighter vein; tense emotion-packed gestures and the Selective Words of Othello and Desdimona before the bloody finale; pathetic soloquies of infirm Macbeth and firm but later to become a somnambulist Lady Macbeth; the enigmate words of Weird Sisters; lementations of King Lear; a more sober and simpler but very forceful words of Abraham Lincoln in his Getteysburg Address; Gray's Early In A Country Churchyard; Wordsworth's 'The Reaper; 'Lucy Poems' and 'I wandered Lonley As A Cloud'; Tennyson's 'The Charge Of The Light Brigade'; Yasmine Goonaratne's Big Matcq 1983'; Leigh Hunt's 'Abou Ben Adhem'; Byron's 'She Walks In beauty'; Keet's 'Ode To Autumn'; Shelly's 'Ode On A Grecian Urn'; excerpts from J. Krishnamoorthy's 'living Road'; 'Vasuvdhatha'; 'Anglimala'; and 'Upa Guptha' - The Disciple of Buddha' from the Jataka stories, were seen keeping the class in rapt attention and inducing them to some self-motivated meaningful writing tasks on the questions asked. They did really make the hidden fountains of creative nature in the students, to spout forth spontaneously.

The teachings in these areas were subsequently transferred into Paraphra-

sing and Summarising and Prose writing. These exercises made available to the students enough vocabulary in reasonably difficult situations, to enrich their experiences and to retain them in a new and endearing backdrop. It was observed with a reasonable degree of satisfaction by the tutors when students volunteered to 'Role Play' the parts of many Protoganists.

The obsolete words like 'Thy', 'Thee', 'Thou', 'Dost', were to be given their modern equivalents, to prevent their subtle impeding effect. It cannot be no more a surprising fact when we hear students expressing their willingness to learn 'raw grammar' – as it is despicably called by many–through Literature. A trait that comfortably settles those who advocate the teaching of 'raw grammar' and the still less familiar 'functioual grammar' have become playthings in the hands and minds of the students when grammar is taught in defence to their wished, via Literature.

A few words about the teaching of Conditionals (or if) Clauses, the miscellaneously verb forms and the Direct and Indirect Speeches either through Poems and Plays or Prose.

The conditional clauses were well driven home through the 'A Priori' Method with 'If Clause' as Cause and and 'Main Clause' as Effect.

Exercises on most of the Miscellaneous Verb forms, become a treat to students when the following self-innovative 'Five-Step-Formula' is adopted:–

Step 1: Read through the Sentene(s) as given (to get a rough meaning of it (them)

Step 2: Underline or note the Adverbs if any in the sentence (to know the Time, Place, or Manner of the idea in the sentence.)

Step 3: Underline the or note the full form of verb(s) if any in the body of the sentence (to know the tense of the action done by the verb(s) and to be done by the verb(s) in brackets.)

Step 4: Decide whether the subject word indicated by the verb is Active or Passive of the conveyed by the verbs(s) (to decide the voice of the sentence).

(Nearly ninety percent of the Verb Form exercises find their answers with the application of these four steps. If not, go on to the final fifth step).

Step 5: Fill in the blanks by convertng the verb in brackets as 'To Infinitive' or 'Infinitive+ing'.

Dramas provide ample examples in the Direct speech, to be converted into Reported Speech. This too was well understood and successfully applied by the class, on the more general principle of 'Nearness of meaning' (in Direct Speech) and 'Distance of Meaning' (in the Indirect Speech). These concepts 'nearness' and 'distance' of meaning are achieved through the correct conversion of words representing various parts of speech and the correct use of the conjunctives like 'that', 'to', 'not to', 'Whether / if'. I am deliberately reserving 'Simple Imperatives', 'Commands' and 'Exclamatoy' Patterns, for future writing.

Thus teaching English in the G.C E. Advanced / Ordinary Levels and GELT classes, is an inspiring and instructive exercise, from the points of view of both the teacher and the taught.

# Tragedies in Teaching English in our Homeland

**I. Selvarasa**
Teacher, J / Nelliady M. M. V.
President of old Boys' Association of
J / Kaddaively Yarkkaru Vinayakar Vidyalayam.

English teaching doesn't mainly depend on a teacher. It depends on the ocation of classrooms, texts, students and other facilities such as time, back up materials, and supplementary readers, library work shop etc.

In many schools the condition and location of classrooms aren't conducive to a better teaching. They seem noisy and unspacious. Some classrooms don't even have well-conditioned blackboards. It's understood that these are prime of all other factors needed for conducting a smooth class. Further it's regretable to note that some schools don't have adequate furniture and are often with unsuitable desks and benches to suit the physical needs and growth of the students.

Since English is an alien language the learners needing it, for communication and understanding are handicapped with what others say in the same language. But this very fact is not considered when preparing the text. They don't take into account the cultural and educational aspects and the interest of the language learners

In Sri Lanka as these texts are Colombo based ones they are prepared to suit only the students in town areas. and have included the usages of majority ethnic group. They are not with simple vocabulary and grammar patterns, and do not suit the standard of the various kinds of students on an Island wide basis. The texts don't fit in to the real life situations, and needs of the students who would be taking up careers, where the learners should be practically benefited when they leave their schools. For example these texts must contain functioning methods and ways of diverse public and private offices and departments. This sort of inclusion would not only benefit learners in their future careers and enterprises but also motivate them in their studies On the other hand when a text motivates a student, it reduces the burden of a teacher from motivating him. Besides, in designing materials on literature, it should be accompanied with proper guides for teachers who teach to lessen their tasks of preparing the pedagogic implications, otherwise it should be given by holding seminars' and inservice classes, and common discussions. The texts with literature should be explained in straight-forward language avoiding archaic words considering the reading habits and speed of the learners. If this is not done the teaching of such materials would be counter-productive.

In most places the students are seen in heterogenous group. It's because as there are no adequate teachers and in

some cases some schools don't have even a single English-teacher. If one were to be posted to these schools it would be more difficult task to that teacher. In this case the teacher becomes help-less as he carries somebody else's baby having to help from the foundation, but is bound to the rules and regulations of his superiors and department. Unless the Ministry of Education or the Department of Education cares for the well-being of the students and take concrete measures to remedy the set backs, the teacher can't adapt his own methods as he often becomes vulnerable to questions and quaries of superiors for not sticking to the texts.

When considering the other aspects the time allotted to Englsh is not enough to complete the teaching task. t's notable that though they speak their mother tongue round the clock' a good number fail the test in their own mother tongue. Then how can we expect the same students to learn a foreign language within the span of 40 minutes a day and 200 minutes in a week ?

In addition schools in Colombo or in urban areas do have libraries and language learning workshops that are fully equipped with ample of back-up materials, such as supplementary readers audio-video cassettes and other teaching aids. In comparison rural areas don't have these at all.

Therefore unless and until these are considered for remedial measures we can't expect a successful learning process and a meaningful teaching of English as a second language in our homeland.

---

இயற்கையின் விளக்கைத் தொடர்ந்து செல்பவன் ஒருகாலும் வழி தவறான்.

— ஜெர்மனி

ஒரு மரத்திலுள்ள கனிகளை எண்ண முடியும்; ஆனால் ஒரு கனியினுள் இருக்கும் மரங்களை எண்ண முடியாது.

— ஆங்கில நாடோடிகள்

உப்பை உண்டவன் தண்ணீர் குடிப்பான்.

எறும்புக்குப் பனித்துளியே வெள்ளமாகும்.

ஆறுகள் இயற்கையில் இனிய நீருடன் ஓடுகின்றன, அவை கடலில் கலந்த பிறகே உவர்ப்பாகின்றன.

காற்றில் ஆடாத மரமில்லை.

— இந்தியா

நாரையின் வெண்மை பறக்கும் போதே தெரியும்.

மரத்தடியுயிலே இரட்டிப்பு மழை.

— இலங்கை

பொன் விழா சிறப்புற

வாழ்த்துகிறோம்!

சுதர்சன் விற்பனை நிலையம்

பிரதான வீதி, நெல்லியடி.

ஆனைமுகன் பிடவை மாளிகை

பிரதான வீதி, நெல்லியடி.

ஹப்பி ரெக்ஸ்ரைல்ஸ்

பிரதான வீதி, நெல்லியடி.

## வாழ்த்துகிறோம் !

**ஸ்ரீ சாயி மெடிக்கல்ஸ்**

ம.ம. வித்தியாலய வீதி,
நெல்லியடி.

**உதயம் பலசரக்கு மாளிகை**

பிரதான வீதி,
நெல்லியடி.

✲ ✲

**கௌரி அழகுசாதன மாளிகை**

பிரதான வீதி,
நெல்லியடி.

**யூபிலி விற்பனை நிலையம்**

யாழ் வீதி,
நெல்லியடி.

---

கல்வியே மனிதரை உருவாக்குகின்றது.
இதனை மேம்படுத்த பொன்விழா நிகழ்வு
அமையும் என வாழ்த்துகிறோம்.

✲

**உடுப்பிட்டி**

**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

உடுப்பிட்டி, — வல்வெட்டித்துறை.

யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தின்

50 ஆம் ஆண்டு நிறைவை

வாழ்த்துகிறோம் !


ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி,
நெல்லியடி.

நாதன் மெடிக்கல்ஸ்

பிரதான வீதி,
நெல்லியடி.

ஜெகா மோட்டோஸ்

பிரதான வீதி,
நெல்லியடி.

எஸ். கே. சாமி புத்தக சாலை

பிரதான வீதி,
நெல்லியடி.

வலம்புரி ரெக்ஸ்

பிரதான வீதி,
நெல்லியடி.

திருமகள் புத்தகசாலை

பிரதான வீதி,
நெல்லியடி.

கட்டைவேலி, கரவெட்டி கிழக்கு

யார்க்கரு விநாயகர் வித்தியாலய

# பொன் விழா

சிறப்புற வாழ்த்துகிறோம்!

பழைய மாணவர் சங்கம்

பாடசாலை அபிவிருத்திச் சபை

## பொன்விழா சிறப்புற
## வாழ்த்துகிறோம்!

**ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்**

இல. 1, மத்திய சந்தை நெல்லியடி.

*

**சுபாஸ் பாண் விற்பனை நிலையம்**

பிரதான வீதி, நெல்லியடி.

*

**ஜமுனா றேட் சென்ரர்**

பிரதான வீதி, நெல்லியடி.

# உளம் மகிழ வாழ்த்துறோம்!

பூமா பிடவை மாளிகை

பிரதான வீதி, நெல்லியடி.

*

நவீன களஞ்சியம் (மொடேண் ஸ்ரோர்ஸ்)

நெல்லியடிச் சந்தி, கரவெட்டி.

*

ராதா கிருஷ்ணன் மெடிக்கல் சென்ரர்

பிரதான வீதி, நெல்லியடி.

## பொன்விழா சிறப்புற
## வாழ்த்துகிறோம்!

**மலர்ஸ் பாதணி விற்பனை நிலையம்**
பிரதான வீதி,
நெல்லியடி.

❊ ❊ ❊

**கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம்**
பிரதான வீதி,
நெல்லியடி.

❊ ❊ ❊

**செல்லத்துரை சைக்கிள் உதிரிப்பாக விற்பனை நிலையம்**
மத்திய மகாவித்தியாலய வீதி.
நெல்லியடி.

❊ ❊ ❊

**சிவராஜ் ஜவுளி மாளிகை**
பிரதான வீதி,
நெல்லியடி.

❊ ❊ ❊

**லிபேட்டி மோட்டோஸ்**
கொடிகாமம் வீதி,
நெல்லியடி.

❊ ❊ ❊

**கனக பார்வதி ஜவுளி மாளிகை**
பிரதான வீதி,
நெல்லியடி.

# நன்றி

ஐம்பதாண்டு நிறைவான பொன்னாளிலேயாவது
எமது வித்தியாலய வரலாறு புத்துயிர் கொண்ட மலராய்
வெளிவர வேண்டும் எனும் கரு
பழைய மாணவரான எம் அதிபர், செயலாளர் சிந்தையிலே
உதித்தது.
இன்று பலரின் பொருள் உதவியுடன் உங்கள் கரங்களிலே இம்மலர் தவழ்கிறது.
இந்நாலிற்கு
ஆசியுரை தந்த அறிஞர்கள்
வரலாற்றுக் குறிப்புகள் தந்துதவிய பெரியோர்கள்
கல்லூரியின் எதிர்கால ஆர்வங்களை வெளியிட்ட
பாடசாலை பழைய மாணவர் சங்க
பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள்
பாடசால நலன் விரும்பிகள் ஆகியோருக்கும்.
வித்தியாலயத்தை வாழ்த்தி விளம்பரங்கள் தந்த பொது நிறுவனங்கள்
வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும்
இந்நூலுக்காய் தம்முழு ஒத்துழைப்பை நல்கிய
நலன்விரும்பிகள் சங்க அங்கத்தவர்களுக்கும், பெற்றோருக்கும்
மிகக் குறுகிய நாட்களில் சிறப்பாகவும், அழகாகவும் வெளியிட உழைத்த
ஈகிள் அச்சக உரிமையாளர் அவர்களுக்கும்
அங்கு கடமை புரியும் ஊழியர்கள் அனைவருக்கும்
எமது வித்தியாலயத்தின் சார்பில் உளங்கனிந்த நன்றியறிதலைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.
இம்மலர் ஆண்டு தோறும் அறிவியல் தாகம்
தீர்க்கும் அறிவு மலராக வெளிவர
தொடர்ந்தும் தங்களின் ஒத்துழைப்பை
எதிர்பார்த்து நிற்கிறோம். இம்மலருக்கு எல்லாவகையிலும்
பலவகை உதவிகளையும் செய்த அனைவரையும், நன்றியுடன் வாழ்த்துகிறோம்.

வணக்கம்.

மலர் வெளியீட்டுக் குழு

10-04-1993

பொன்விழா சிறப்புற

வாழ்த்துகிறோம்!

கட்டைவேலி - நெல்லியடி

## பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

கரவெட்டி.

பழைய மாணவன் என்ற வகையில்
பொன் விழாவைக் கண்டு மகிழ்வதோடு
பாடசாலை உயர்வுற வாழ்த்துகிறேன்!

# அம்சன்
# விற்பனை நிலையம்

பிரதான வீதி, நெல்லியடி.